MAKKAL KURAL (Independent National Tamil Daily) 20 பக்கம் விலை 4.00

# மக்கள் குரல்

SINCE 1973

நடுநிலை நாளேடு

Regd. No. TN/SR-21/2123

மதுரை/திருச்சி/தஞ்சாவூர்/புதுக்கோட்டை – 18.4.2026 – சனி ✱ மலர் – 47 ✱ இதழ் – 320

✱ மதுரை ✱ திருச்சி ✱ ராமநாதபுரம் ✱ சிவகங்கை ✱ நாகப்பட்டினம் ✱ கன்னியாகுமரி ✱ திருநெல்வேலி ✱ தென்காசி ✱ விருதுநகர் ✱ தூத்துக்குடி ✱ தேனி ✱ திண்டுக்கல் ✱ பெரம்பலூர் ✱ அரியலூர் ✱ திருவாரூர் ✱ மயிலாடுதுறை ✱ புதுக்கோட்டை ✱ தஞ்சை மாவட்டங்களை உள்ளடக்கியது

GRT G.R.Thanga Maligai JEWELLERS Since 1964

அட்சய திருதியை கொண்டாட்டம்




இந்த அட்சய திருதியை உங்களுக்கும் உங்கள் குடும்பத்துக்கும் அளவில்லா வளத்தை வழங்கட்டும்!

₹100* கூடுதலாக கிராமிற்கு பழைய தங்க நகை எக்ஸ்சேஞ்சின் மீது

12.5%* குறைவு வைரம் மற்றும் அன்கட் வைரத்தின் மதிப்பின் மீது (சாலிடெர்கள் தவிர)

25%* குறைவு வெள்ளிப் பொருட்களின் சேதாரத்தின் மீது (VA)

10%* குறைவு வெள்ளி நகைகளின் MRP மீது

சேதாரம் (VA) இல்லை தங்க நாணயங்களுக்கு

அட்சய திருதியைக்கு நகைகளை முன்னரே பதிவு செய்து தங்க விலையின் ஏற்ற இறக்கங்களிலிருந்து உங்களை பாதுகாத்துக் கொள்ளுங்கள்.
அட்சய திருதியை அன்று (19 மற்றும் 20 ஏப்ரல்) விலை குறைந்தால் வித்தியாசத் தொகை திருப்பி அளிக்கப்படும்.

*75% முன்பணம் செலுத்தி, உங்கள் நகைகளை முன்பதிவு செய்துக் கொள்ளுங்கள். தங்கக் கட்டிகளுக்கு சேதாரம் (VA) இல்லை எனும் சலுகை பொருந்தாது. இச்சலுகை வேறெந்த சலுகைகளுடனும் இணைக்கப்பட மாட்டாது. குறைந்த காலச் சலுகை. நிபந்தனைகளுக்கு உட்பட்டது.

எங்கள் அனைத்து ஷோரூம்களும் ஏப்ரல் 19 & 20 ஆம் தேதி, காலை 6:00 மணி முதல் துவங்கும்.

HDFC BANK | UPTO ₹5000 CASHBACK* on HDFC Bank Credit Cards. | Offer: 2% Cashback *Min. transaction: ₹75,000 Validity: 03.04.2026 to 26.04.2026. T&C apply. Attractive offer on online purchase also

Tamil Nadu | Puducherry | Andhra Pradesh | Telangana | Karnataka || Singapore

STORE LOCATOR

Shop online at: grtjewels.com | GRT LIVE VIDEO SHOPPING Shop from the comfort of your home | : 1800 203 1000 / 1800 599 1515 | Follow us:

### மக்கள் விழித்துக் கொண்டார்கள், உங்கள் பொய் இனி எடுபடாது

# மூப்பனார், அப்துல்கலாம், சி.பி.ராதாகிருஷ்ணன் தமிழர் இல்லையா..? ஸ்டாலினுக்கு எடப்பாடி பழனிசாமி சரமாரிக் கேள்வி

ஓமலூர், ஏப்.18–

**தென்னகத்தில் இருந்து யாரும் பிரதமராக முடியாது என்று ஸ்டாலின் சொல்லுகிறாரே? மூப்பனார், அப்துல்கலாம், சி.பி.ராதாகிருஷ்ணன் எல்லாம் உங்களுக்கு தமிழர் இல்லையா? என்று எடப்பாடி பழனிசாமி காட்டமாக கேட்டார்.**

எடப்பாடி பழனிசாமி சங்ககிரி, வீரபாண்டி சட்டமன்றத் தொகுதிகளில் பிரச்சாரத்தை முடித்துவிட்டு, அடுத்து ஓமலூரில் தர்மபுரி பிரதான சாலை சந்திப்பில் பிரச்சாரம் செய்தார். அப்போது அவர் பேசியதாவது:–

ஓமலூர் தொகுதி அண்ணா தி.மு.க.வின் கோட்டை. அண்ணா தி.மு.க. தேசிய ஜனநாயகக் கூட்டணியில் அண்ணா தி.மு.க. சார்பில் ஆர்.மணி நிறுத்தப்பட்டிருக்கிறார், அவருக்கு இரட்டை இலை சின்னத்தில் வாக்களிக்க வேண்டும்.

ஸ்டாலின் குழம்பிவிட்டார். அவர் போட்ட கணக்கு ஒன்று, நடக்கும் கணக்கு ஒன்று. கருப்புச்சட்டை போட்டு, மக்களை திசை திருப்பி, அவதூறு பரப்பி, அரசியல் ஆதாயம் தேட முயற்சித்தார். ஆனால், மத்திய அரசு அற்புதமான அறிவிப்பு வெளியிட்டுவிட்டது.

தொகுதி மறுவரையறையில் மத்திய அரசு அநீதி இழைப்பதாகச் சொன்னார் முதல்வர். அதற்காக கருப்புச் சட்டையும் போட்டார். கருப்புக்கொடி கட்டச்சொன்னார். ஆனால், மக்கள் எங்கேயும் கருப்புக் கொடி ஏற்றவில்லை.

ஏனென்றால், தமிழ்நாட்டுக்கு எந்த பாதிப்பும் வராது என்று அமித்ஷா சொல்லிவிட்டார். என்னிடமும் தைரியமாகப் பேசுங்கள் என்று சொல்லிவிட்டார். எந்த மாநிலத்துக்கும் பாதிப்பு வராது என்று பிரதமரும் சொல்லிவிட்டார்.

நேற்று மாலை 6 மணிக்கு தமிழ்நாட்டின் 39 இடம் 59 ஆக ஆக்கப்படும் என்று சொல்லிவிட்டார்கள். ஸ்டாலின் அவதூறு பிரச்சாரம் மேற்கொண்டார், திட்டமிட்டு தமிழகத்தின் சதவீதம் குறையும் என்றார். இப்போது 7.18% என்பது 7.23% ஆக உயர்ந்திருக்கிறது. நாம் வைத்த கோரிக்கையின் அடிப்படையில் மத்திய அரசு அறிவித்தது. அதிகமாகத்தானே வாங்கியிருக்கிறோம். கருப்புச் சட்டையை கழற்றியாச்சு. எந்த ரூபத்தில் அவதாரம் எடுத்தாலும் அண்ணா தி.மு.க. முறியடிக்கும்.

இப்போது புதிய கதை கண்டுபிடித்து விட்டார். இனி தென்னகத்தில் இருந்து யாரும் பிரதமராக முடியாது என்று சொல்கிறார்.

சொந்த நாட்டிலேயே தமிழர்கள் இரண்டாம் தர மக்களாக மாறுவார்கள் என்கிறார்.

## மூப்பனாருக்கு கருணாநிதி செய்த சதி

உண்மையாக மனசாட்சிப்படி தமிழனாக இருந்தால் சிந்திக்கவேண்டும், ஜிகே மூப்பனார் பிரதமராவதை தடுத்தது கருணாநிதி. அப்போது தமிழ் உணர்வு எங்கே போனது? அப்துல்கலாமை ஜனாதிபதி தேர்தலில் அண்ணா தி.மு.க. ஆதரித்தது. இஸ்லாமியர்களுக்கு அனைத்தும் செய்வதாகச் சொல்லும் திமுக, இரண்டாவது முறை அப்துல் கலாமை ஆதரிக்க முடியாது என்று சொல்லிவிட்டது. அதனால் போட்டியில் இருந்து விலகிவிட்டார்.

அப்போது தமிழ் உணர்வுடன் இருந்திருந்தால், இரண்டாவது முறையாக அப்துல்கலாமை ஜனாதிபதி ஆக்கியிருக்கலாம். இப்போது தமிழ்நாட்டை சேர்ந்த சி.பி.ராதாகிருஷ்ணன் துணை ஜனாதிபதியாகிவிட்டார், அவருக்கு எதிர்த்து ஓட்டுப்போட்டது திமுக. அவர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் மட்டும்தான் ஸ்டாலினுக்கு தமிழர்கள். மற்றவர்கள் தமிழர்கள் கிடையாது. நீங்கள் உண்மையான தமிழரா? என்னென்ன பொய், பித்தலாட்டம், அவதூறு பிரச்சாரம் அவிழ்த்துவிடுகிறார். நான் பேசுவது உண்மைதானே?

1999ல் நாம் பா.ஜ.க. கூட்டணியில் இருந்து விலகிவிட்டோம், அப்போது தி.மு.க. பாஜகவுடன் கூட்டணியில் இருந்து சி.பி.ராதாகிருஷ்ணன் எம்.பி.யாக ஆனார், அப்படிப்பட்டவருக்கு இப்படிப்பட்ட நிலைமை. தமிழன் என்று சொல்லி தமிழரை கொச்சைப்படுத்தும் முதல்வர் ஸ்டாலின்.

## குடும்பத்துக்கு பதவி வாங்க...

தமிழருக்கு என்ன நன்மை செய்தீர்கள்? 15 ஆண்டு காலம் மத்தியில் ஆட்சியில் இருந்தீர்கள் தமிழ்நாட்டை பற்றி சிந்தித்தீர்களா? ஏதாவது திட்டத்தை கொண்டுவந்தீர்களா? நிதியும் பெற்றுக்கொடுக்கவில்லை. தி.மு.க. குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் மத்தியில் ஆட்சி அதிகாரத்திற்கு வந்தார்கள். இதற்குத்தான் அதிகாரத்தை பெற்றது திமுக. அதனால், எங்களைப் பற்றி பேசுவதற்கு உங்களுக்கு யோக்கியதை



கிடையாது.

தமிழ்நாட்டில் இருந்து டெல்லிக்கு வேட்டி கட்டிச்சென்றாலே ஒருமாதிரியாகப் பார்க்கிறார்கள், அதற்கு காரணம் ஊழல். கண்ணில் தெரியாத காற்றில் கூட ஊழல் செய்த கட்சி தி.மு.க. 2ஜி ஸ்பெக்ட்ரம் ஊழல். ஒரு லட்சத்து 74 ஆயிரம் கோடி ஊழல் செய்தவர்கள். இவர்களால் நம்மை ஒருமாதிரியாக பார்க்கிறார்கள். ஏனென்றால், இது இந்தியாவிலே மிகப்பெரிய ஊழல். உலகிளவில் மிகப்பெரிய ஊழல் செய்த ஒரே கட்சி திமுக.

இப்போது மக்கள் விழித்துக்கொண்டார்கள், இனி உங்கள் பொய் செல்லுபடியாகாது. மக்கள் திறமையாளர்கள், யார் சரியான ஆட்சி கொடுப்பார்கள் என்று தீர்மானிப்பார்கள். நீங்கள் வேண்டுமானால் 5 ஆண்டு ஆட்சி செய்திருக்கலாம், ஆனால் சேலம் அண்ணா தி.மு.க.வின் கோட்டை.

அம்மா மறைந்த பிறகு 'பி' டீமை வைத்து அண்ணா தி.மு.க.வை முடக்கப்பார்த்தனர், அதை தவிடுபொடியாக்கினோம். தாயை இழந்த பிள்ளையாக இருந்தோம், அப்போது எவ்வளவு பிரச்னைகள் உருவாக்கினார் ஸ்டாலின். இரண்டு ஆத்மாக்களும் நம்மைக் காப்பாற்றி மீண்டும் ஆட்சிக்கு வர ஆசி வழங்கினார்கள்.

கட்சியில், ஆட்சியில் பிரச்னை, தினமும் போராட்டம். இந்தியாவிலேயே நான் முதல்வராக இருந்தபோது சந்தித்த போராட்டம் தான் அதிகம். உங்கள் ஆட்சியில் ஒரு போராட்டத்துக்குக் கூட அனுமதி கிடைக்கவில்லை, அப்படிப்பட்ட மக்கள் விரோத ஆட்சியை அகற்றுவீர்களா? ('ஆம்' என மக்கள் குரல் எழுப்பினார்கள்)

## ஸ்டாலின் ஏன் கதறுகிறார்?

எஸ்.ஐ.ஆர் சீரமைப்பு 21 ஆண்டு காலம் கழித்து கொண்டுவந்தார்கள். தி.மு.க.வினர் செத்துபோனவர் ஓட்டுகளை எல்லாம் போட்டார்கள். அதனால், ஸ்டாலின் கதறினார், இறந்தவர்களை நீக்குவது சரிதானே? தேர்தல் வந்தால் புதைத்த குழியில் இருந்து எல்லாரும் வந்துவிடுவார்கள், அதை இப்போது தடுத்து நிறுத்தியாகிவிட்டது.

எல்லா தொகுதியிலும் 10 ஆயிரம் முதல் 15 ஆயிரம் ஓட்டுகள், சென்னையில் ஒரு லட்சம் ஓட்டு ஸ்டாலின் தொகுதியில் நீக்கப்பட்டது. இதை வைத்துத்தான் ஜெயித்தனர், இதுக்கு ஆப்பு அடிச்சாச்சு. இனி திருட்டு ஓட்டு போட முடியாது. தகுதி வாய்ந்த வாக்காளர்கள் இடம் பெற்றுள்ளனர், உண்மையான வாக்காளர்கள் வாக்களித்து நம் வேட்பாளர் பல்லாயிரக்கணக்கான வாக்குகள் வித்தியாசத்தில் வெல்வார்.

## அரசு ஊழியர்களை ஏமாற்றி விட்டார்

அரசு ஊழியர்களுக்கு அல்வா கொடுத்துவிட்டார் ஸ்டாலின். அரசு போடும் திட்டத்தை அரசு ஊழியர்கள் தான் செயல்படுத்த வேண்டும். இரண்டு சக்கரம் வண்டியில் இருக்கிறது என்றால், ஒன்று ஆட்சியாளர், இன்னொன்று அரசு ஊழியர். இரண்டும் சரியாக இருந்தால் தான் இலக்கை போய் அடைய முடியும்.

அரசு ஊழியர்கள் திமுகவை நம்பியிருந்தனர். பழைய ஓய்வூதியத் திட்டம் அமல்படுத்துவோம் என்றனர். ஆனால், உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியம் என்று அறிவித்து ஏமாற்றிவிட்டார்கள். அரசு ஊழியர்களை நாங்கள் மரியாதையோடு நடத்தினோம். கொரோனா காலத்தில் முழு சம்பளம் கொடுத்தோம். 2022ல் நிதியமைச்சர் இது பற்றி கேள்வி கேட்டார். பாதி சம்பளம் கொடுத்திருந்தால், அரசுக்கு மிச்சமாகியிருக்கும் என்றார். அண்டை மாநிலங்களில் கூட பிடித்தம் செய்யப்பட்டது, இதனால் 30 ஆயிரம் கோடி அரசுக்கு மிச்சமாகியிருக்கும் என்றார், ஆனால், நான் செய்யவில்லை.

ஆசிரியர்களை ஓராண்டு பள்ளிக்கே வரவேண்டாம் என்றோம், அவர்கள் உயிரும் முக்கியம். எந்த அரசு சிறந்த அரசு என்று அரசு ஊழியர்களே முடிவு செய்யுங்கள்.

பாதுகாப்பும் மரியாதையும் கொடுப்பது அண்ணா திமுக அரசு. சட்டத்தை நிறைவேற்றும் பொறுப்பு அரசு ஊழியர்களுக்கு இருக்கிறது. அரசு ஊழியர்கள் நமக்கு நல்ல ஒத்துழைப்பு கொடுத்தனர், அதனால் தான் நல்ல திட்டங்கள் கொடுத்தோம், நாங்கள் அதை எப்போதும் மறக்க மாட்டோம், ஆனால் அரசு ஊழியர்கள் மறந்துவிடுகிறீர்கள். எங்களை ஆதரித்து வாக்களியுங்கள். 244வது அறிவிப்பில் சொல்லியிருக்கிறோம் அரசு ஊழியர்கள் சங்கங்கள் கோரிக்கை பரிசீலித்து சீரமைக்கப்படும் என்று சொல்லியிருக்கிறோம், ஆதரவு தாருங்கள்.

இவ்வாறு எடப்பாடி பேசினார்.



# ஐ.பி.எல்: கொல்கத்தாவை வீழ்த்தி குஜராத் டைட்டன்ஸ் த்ரில் வெற்றி

அகமதாபாத், ஏப்.18–

ஐபிஎல் 2026 தொடரின் 25வது லீக் ஆட்டத்தில், கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியை 5 விக்கெட் வித்தியாசத்தில் வீழ்த்தி குஜராத் டைட்டன்ஸ் வெற்றி பெற்றுள்ளது.

நரேந்திர மோடி மைதானத்தில் நேற்று நடைபெற்ற இந்தப் போட்டியில், டாஸ் வென்ற கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி முதலில் பேட்டிங்கைத் தேர்வு செய்தது. கேப்டன் அஜிங்க்யா ரஹானே ரன் ஏதுமின்றி ஆட்டமிழந்தார். பின்னர் வந்த அங்க்ரிஷ் ரகுவன்ஷி (8 ரன்), டிம் சீபர்ட் (19 ரன்) ஆகியோரும் சொற்ப ரன்களில் வெளியேற, கொல்கத்தா 32 ரன்களுக்கு 3 விக்கெட்டுகளை இழந்து தடுமாறியது.

இந்த இக்கட்டான நிலையில் அதிரடியாக ஆடிய கமரூன் கிரீன், 55 பந்துகளில் 79 ரன்கள் குவித்து அணியை மீட்டெடுத்தார். அவருக்குத் துணையாக ரோவ்மேன் பவல் 27 ரன்கள் சேர்த்தார். இறுதியில் கொல்கத்தா அணி 20 ஓவர்களில் 180 ரன்களுக்கு அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது. குஜராத் தரப்பில் காகிசோ ரபாடா 3 விக்கெட்டுகளை வீழ்த்தி அசத்தினார்.

181 ரன்கள் என்ற இலக்கை நோக்கி ஆடிய குஜராத் அணிக்கு சுப்மன் கில் மற்றும் சாய் சுதர்சன் ஜோடி சிறப்பான தொடக்கம் தந்தது. சாய் சுதர்சன் 22 ரன்களில் வெளியேறினாலும், மறுமுனையில் நின்ற சுப்மன் கில் 50 பந்துகளில் 86 ரன்கள் விளாசி வெற்றிக்கு வித்திட்டார். ஜோஸ் பட்லர் 25 ரன்கள் எடுத்து ஆட்டமிழந்தார். கடைசி ஓவரில் பரபரப்பு நிலவினாலும், குஜராத் அணி 19.4 ஓவர்களில் 5 விக்கெட் இழப்பிற்கு 181 ரன்கள் எடுத்து வெற்றி பெற்றது.

இந்தத் தோல்வியின் மூலம் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி விளையாடிய 6 போட்டிகளிலும் தோல்வியைத் தழுவி புள்ளிப்பட்டியலில் கடைசி இடத்தில் நீடிக்கிறது. குஜராத் டைட்டன்ஸ் அணி இந்த வெற்றியின் மூலம் தனது தரவரிசையை உயர்த்திக் கொண்டுள்ளது.

### தமிழக முதல்வர்கள் வரலாறு

# 10. முதல்வர் ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார்

ராஜா செல்லமுத்து

தமிழ்நாட்டின் பத்தாவது முதலமைச்சராக இருந்தவர் 'ஓமந்தூரார்' என்று அன்போடு அழைக்கப்படும் ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார், இவர் சுதந்திர இந்தியாவின் சென்னை மாகாணத்தின் (தற்போதைய தமிழ்நாடு) முதல் முதலமைச்சர். மிகச்சிறந்த நேர்மையாளர் என்று ஓமந்தூர் ரெட்டியாரைப் பற்றிய குறிப்புகளை எழுதிக் கொண்டிருந்தான், ஆய்வாளர் ராஜா.

இவருக்கு முன்னால் தமிழ்நாட்டை ஆட்சி செய்த 9 முதலமைச்சர்களும் ஜமீன்தார்கள், உயர்கல்வி, பாரிஸ்டர் பட்டம் பெற்றவர்கள். ஆனால் ஓமந்தூர் ராமசாமி ஆறாம் வகுப்பு வரை மட்டுமே படித்தவர். ஆனால் மேதை.

ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் 1895–ம் ஆண்டு பிப்ரவரி 1–ந் தேதி, அன்றைய தென்னாற்காடு மாவட்டம் (இன்றைய விழுப்புரம் மாவட்டம்) திண்டிவனத்திற்கு அருகிலுள்ள ஓமந்தூர் என்ற கிராமத்தில் பிறந்தார்.

அவர் 1947 மார்ச் 23 முதல் 1949 ஏப்ரல் 6 வரை சென்னை மாகாணத்தின் முதலமைச்சராகப் பணியாற்றினார். இவரது ஆட்சிக்காலம் மிகக் குறுகியதாக இருந்தாலும், புரட்சிகரமான மாற்றங்களை ஏற்படுத்தியது.

'ஆந்திர கேசரி' என்று அழைக்கப்பட்ட டி.பிரகாசம் சென்னை மாகாண முதலமைச்சராக இருந்தபோது தமிழர்களுக்கு எதிராகச் செயல்பட்டார். இதனால் காமராஜர் மற்றும் காங்கிரஸ் கட்சிக்காரர்களின் வெறுப்புக்கு ஆளானதால் சில மாதங்களிலேயே அவரின் ஆட்சி பறிபோனது. இதனால் வேறொரு முதலமைச்சரைத் தேர்ந்தெடுக்க வேண்டிய சூழல் ஏற்பட்டது.

காங்கிரஸ் கட்சியின் தலைவராக இருந்த ராஜாஜியைப் பரிந்துரை செய்தனர். இந்தி திணிப்பு, குலக்கல்வி போன்ற திட்டங்களில் ராஜாஜியும், தமிழர்களுக்கு எதிராக இருந்ததால் அவரையும் முதலமைச்சராக்க உடன்பாடு ஏற்படவில்லை. இந்தச் சூழலில் தான் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் சத்தியமூர்த்தியை தேர்தலில் வென்ற ஓமந்தூராரை முதல்வராக்கியது காங்கிரஸ் கட்சி. காமராஜர், ராஜாஜியிடம் சொல்லி ஓமந்தூராரைச் சந்திக்க வைத்தார். ஆனால் உடனே ஓமந்தூரார் ஒத்துக் கொள்ளவில்லை. தனக்கு படிப்பு இல்லை, அதனால் முதலமைச்சர் பதவி வேண்டாம் என்று சொன்னார்.

டி. பிரகாசம் அமைச்சரவையில் இருந்த அனைத்து அமைச்சர்களும் சேர்ந்து கேட்டுக் கொண்டதால் சரி என்றார், ஓமந்தூரார். இருந்தாலும் மூன்று மாத காலங்கள் அவகாசம் கேட்டார். பிறகு காமராஜர் ஆதரவுடன் 1947 மார்ச் 23 அன்று சென்னை மக்கள் முதல்வராக ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் பதவி ஏற்றார்.

விவசாயக் குடும்பத்திலிருந்து வந்ததால் விவசாயிகள் ஏழை எளியவர்களின் முன்னேற்றத்திற்குப் பாடுபட்டார். தாழ்த்தப்பட்ட மக்கள் கோயிலுக்குள் நுழைய அனுமதிக்கும் வரலாற்றுச் சிறப்புமிக்க சட்டத்தைக் கொண்டு வந்தார். முத்துலட்சுமி ரெட்டியின் போராட்டங்களுக்கு வலுசேர்க்கும் வகையில், தேவதாசி முறையை ஒழிக்கும் சட்டத்தை



நிறைவேற்றினார். நிர்வாகத்தில் நேர்மையை நிலைநாட்ட "ஊழல் தடுப்புத் துறை" அமைப்பதில் முன்னோடியாக இருந்தார்.

மாகாணம் முழுவதும் மதுவிலக்கை அமல்படுத்தினார். வகுப்புவாரி பிரதிநிதித்துவத்தை நிலைநிறுத்தப் போராடினார். இவருடைய அமைச்சரவையில் தமிழகத்தின் மிக முக்கியமான தலைவர்களாக,

பி.எஸ். குமாரசாமி ராஜா (இவர் ஓமந்தூராருக்குப் பின் முதலமைச்சரானார்), டாக்டர் டி.எஸ். எஸ். ராஜன்,

எம்.பக்தவத்சலம் (பின்னாளில் முதலமைச்சர் ஆனவர்), கே.மாதவமேனன், அவினாசிலிங்கம் செட்டியார் (கல்வி அமைச்சர்), வேமுல குர்ரம் நாயுடு, கே. சந்துரு, எஸ்.குருசாமி ஆகியோர் இடம் பெற்றிருந்தனர்.

"எந்த ஒரு கோப்பிலும் கையெழுத்திடும் முன், இது ஏழை எளியவர்களுக்கு நன்மை பயக்குமா?" என்று சிந்திக்கும் உயர்ந்த குணமே ஓமந்தூராரை 'தூய அரசியல்வாதி' என இன்றும் அடையாளப்படுத்துகிறது.

ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் அரங்கம்மை என்பவரைத் திருமணம் செய்துகொண்டார். இவர்களுக்கு ஒரு மகன் இருந்தார். மிக இளம் வயதிலேயே 24 வயதில் தனது மனைவி அரங்கம்மையை இழந்தார். அதன் பிறகு அவர் மறுமணம் செய்து கொள்ளவில்லை.

அவரது ஒரே மகனும் சிறு வயதிலேயே காலமானார். இதனால் தனது வாழ்நாள் முழுவதும் குடும்பப் பற்று ஏதுமின்றி, ஒரு துறவியைப் போலவே வாழ்ந்து மக்கள் சேவையாற்றினார். சென்னை மாகாணத்தின் முதலமைச்சராக இருந்தபோதும், அவர் தனது குடும்பத்தினருக்காகவோ அல்லது உறவினர்களுக்காகவோ அதிகாரத்தைப் பயன்படுத்தியதில்லை.

யாராவது தன்னைச் சந்திக்க வந்தால் முதலமைச்சரை சந்திப்பதற்காக என்ன காரணம்? எதற்காகச் சந்திக்க வேண்டும் என்ற கேள்வியைக் கேட்ட பிறகு தான் அனுமதி சீட்டு வழங்கும் திட்டத்தைக் கொண்டு வந்தவர் ஓமந்தூரார். நியாயமான காரணமாக அனுமதிப்பார். அதற்கு ஒருவரை சந்திப்பதை முதன்மையாகக் கொண்டிருந்தார்.

இதைப் பதவியேற்ற நாள் முதல் இந்த முறையை மேற்கொண்டார். தனிப்பட்ட சலுகைகள் பரிந்துரைக்காக வருபவர்களை ஓமந்தூரார் அனுமதிக்க மாட்டார். முதலமைச்சர் பதவியில் இருந்த போது, பாராட்டுக் கூட்டங்கள், வெற்றி விழாக்கள், அரசியல் ஆரவாரங்களுக்குத் தடை போட்டார்.

மிக அவசியமான தருணங்களில் மட்டுமே பத்திரிகையாளர்களைச் சந்தித்தார். தனிப்பட்ட முறையில் பேட்டி எடுக்க அனுமதி தரமாட்டார். இவர் முதலமைச்சர் இருந்த போது ஐ.ஏ.எஸ். படித்த ஆங்கிலேய அதிகாரிகள் இருந்தார்கள். இதனால் அந்தஸ்து இல்லாத ஏ.அழகிரி என்கிற தமிழரை தனது அந்தரங்க செயலாளராக நியமித்தார்.

ஓமந்தூரார் முதல்வராக இருந்த போது ஒருமுறை உடல் நிலை சரியில்லாமல் போக அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். மற்றவர்களுக்கு எப்படிப்பட்ட சிகிச்சை அளிக்கிறீர்களோ எனக்கும் அதையே அளியுங்கள். தனிப்பட்ட சலுகைகள், சிறப்பு கவனம் எனக்கு வேண்டாம். வெளிநாட்டிலிருந்து மருத்துவர், மருந்துகள் – அதற்கும் தடை விதித்தார். 1947–ம் ஆண்டு மார்ச் 23 முதல் 1949 ஏப்ரல் 6 வரை மட்டும் 745 நாட்கள் இரண்டு ஆண்டுகள் 14 நாட்கள் மட்டுமே முதல்வர் பொறுப்பில் இருந்தார். முதல்வர் பதவியில் இருந்த காலகட்டத்தில் குடும்பத்தினர்கள், பரிந்துரைக்கு வருபவர்களை நிராகரித்தார்.

ஹைதராபாத்திற்கு ஆதரவாக இருந்த பொது ஊழியர்களைக் கட்டாய ஓய்வில் அனுப்பிவிட்டார். 1948–ம் ஆண்டு செப்டம்பர் 17 அன்று ஹைதராபாத் இந்திய தேசத்துடன் இணைக்கப்பட்டது.

தனது இறுதிக்காலத்தில் வடலூர் திருவருட்பிரகாச வள்ளலாரின் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டு, சுத்த சன்மார்க்க நெறியில் வாழ்ந்தார். வடலூரில் 'ராமலிங்க பணிமன்றம்' என்ற அமைப்பை நிறுவி ஆன்மீகப் பணிகளில் ஈடுபட்டார். அவருக்கு நெருங்கிய ரத்த உறவுகள் என்று சொல்லிக் கொள்ள யாரும் இல்லாததால், அவர் தனது சொத்துக்கள் அனைத்தையும் பொது நலத்திற்காகவும், ஆன்மீக அறக்கட்டளைகளுக்காகவும் அர்ப்பணித்தார்.

அவரது நேர்மை மற்றும் எளிமை காரணமாகவே அவர் "தமிழ்நாட்டின் காந்தி" என்றும், "முனிவர் அரசியல்வாதி" என்றும் போற்றப்படுகிறார்.

தாழ்த்தப்பட்ட மக்கள் மற்றும் விளிம்புநிலை மக்கள் அனைவரும் கோவில்களுக்குள் சென்று வழிபாடு நடத்தும் உரிமையை 1947–ம் ஆண்டு சட்டபூர்வமாக்கினார். நீண்ட கால போராட்டத்திற்குப் பிறகு, 1947ல் தேவதாசி முறையை சட்டபூர்வமாக ஒழித்து பெண்களுக்கு சமூகப் பாதுகாப்பை வழங்கினார்.

பிற்படுத்தப்பட்ட வகுப்பி னருக்கு 14.29% மற்றும் பட்டியலினத் தவருக்கு (SC/ST) 29% என வேலை வாய்ப்பில் இடஒதுக்கீடு முறையை அமல்படுத்தினார். விவசாயிகளைச் சுரண்டி வந்த ஜமீன்தாரி முறையை ஒழித்து, நிலங்களை விவசாயிகளுக்கே உரிமையாக்க வழிவகை செய்தார்.

கிணறு வெட்ட மானியம், பாசன வசதிகள், மற்றும் நெல்லுக்குத் தரவாரியான விலை நிர்ணயம் போன்ற திட்டங்களை அறிமுகப்படுத்தினார். இதனால் 'விவசாய முதல்வர்' என்று போற்றப்படும் இவர், விவசாயச் சீர்திருத்தமும் சம நிலையும் என்ற புத்தகத்தையும் எழுதியுள்ளார்.

இந்து சமய அறநிலையத் துறை சட்டத்தின் மூலம் கோவில்கள் மற்றும் மடங்களின் சொத்துக்கள் தனிநபர்களால் சுரண்டப்படுவதைத் தடுக்கச் சட்டம் கொண்டு வந்தார். கோவில் நகைகளைப் பாதுகாக்கப் பதிவேடுகளைப் பராமரிக்க உத்தரவிட்டார்.

1948–ம் ஆண்டு ஸ்ரீவில்லிபுத்தூர் கோவில் கோபுரத்தை (59 மீட்டர், அதாவது 192 அடி முதல் 193.5 அடி உயரம் – இதுவே தமிழ்நாட்டின் மிக உயரமான கோபுரம். ஆசியாவிலேயே மிக உயரமான ராஜ கோபுரங்களில் ஒன்று) மையமாகக் கொண்ட தமிழக அரசின் அதிகாரப்பூர்வ சின்னத்தை உருவாக்கினார். மத்திய திட்டக்குழு அமைப்பதற்கு முன்பே, மாநிலத்திற்கு எனப் பொருளாதார ஆலோசகர் பதவியையும், புள்ளிவிவரத் துறையையும் உருவாக்கினார்.

தொடக்கக் கல்வியைக் கட்டாயமாக்கியதுடன், முதியோர் கல்வித் திட்டங்களையும் செயல்படுத்தினார்.

மாகாணம் முழுவதும் பூரண மதுவிலக்கை அமல்படுத்தினார். மகாகவி பாரதியாரின் படைப்புகளை அனைவரும் இலவசமாகப் பயன்படுத்தும் வகையில் அவற்றை அரசுடைமையாக்க நடவடிக்கை எடுத்தார்.

தன் குடும்பத்தினருக்கோ அல்லது கட்சிக்காரர்களுக்கோ எந்தவிதச் சலுகைகளையும் வழங்காத மிகக்கடுமையான நேர்மையைக் கடைப்பிடித்தார்.

காங்கிரஸ் கட்சிக்குள் நிலவிய உட்கட்சிப் பூசல், காமராஜர் ஆதரவு குறைவு காரணமாக ஓமந்தூரார் பதவி விலக வேண்டி வந்தது. காங்கிரசில் சக்தி வாய்ந்த தலைவராக இருந்த ராஜாஜி தனக்கு நெருக்கமான பி எஸ் குமாரசாமி ராஜாவை முதல்வராக்க விரும்பியதால் ஓமந்தூரார் பதவி விலக வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.

ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் 1970–ம் ஆண்டு ஆகஸ்ட் 25–ம் நாள் கடலூர் மாவட்டம் வடலூரில் தனது 75 ஆவது வயதில் காலமானார் என்று ஓமந்தூர் ராமசாமி ரெட்டியாரைப் பற்றி எழுதிய ராஜா இவ்வளவு எளிமையும் உண்மையும் நிறைந்த முதல்வர் நம் தமிழ்நாட்டில் இருந்திருக்கிறார் என்று வியந்தான். அடுத்த முதல்வரைப் பற்றி எழுத ஆயத்தமாமனான் ராஜா.

ENROLLMENT
விளம்பரம் செய்ய
ஸ்கேன் செய்யவும்

MAKKAL KURAL (Independent National Tamil Daily)

# மக்கள் குரல்

Regd. No. TN/SR-21/2123

மதுரை/திருச்சி/தஞ்சாவூர்/புதுக்கோட்டை – 18.4.2026 – சனி ✸ மலர் – 47 ✸ இதழ் – 320

பெயர் மாற்றம்
விளம்பரம் செய்ய
ஸ்கேன் செய்யவும்

## கோபியில் கொளுத்தும் வெயிலில் பிரச்சாரம்

# விவசாயிகளுக்கு திட்டங்களை தடுத்தவர் ஸ்டாலின்: எடப்பாடி குற்றச்சாட்டு

## அ.தி.மு.க.வை உடைக்க தி.மு.க. சதி திட்டத்துக்கு உதவிய 'பி டீம்' செங்கோட்டையன்

கோபி, ஏப்.18–

**விவசாயிகளுக்கு திட்டங்களை தடுத்தவர் ஸ்டாலின். விவசாயிகள் என்றாலே அவருக்கு கடுப்பு தான் என்று எடப்பாடி பழனிசாமி குற்றஞ்சாட்டினார்.**

கோபிச்செட்டிப்பாளையத்தில் எடப்பாடி பழனிசாமி இன்று கொளுத்தும் வெயிலில் தீவிர பிரச்சாரம் செய்தார். வெயில் கடுமையாக கொளுத்தியது. இந்த கடும் வெயிலிலும் ஆண்களும், பெண்களம் பெரும் திரளாக கலந்து கொண்டனர். எடப்பாடி பழனிசாமியின் பேச்சை கைதட்டி ஆரவாரம் செய்து வரவேற்றனர்.

எடப்பாடி பழனிசாமி இன்று காலை கோபிச்செட்டிப்பாளையம் தாலுகா அலுவலகம் அருகே மக்களை சந்தித்த பிறகு டிஜி புதூரில் பிரசாரம் மேற்கொண்டார். அப்போது அவர் பேசியதாவது:–

முன்னாள் எம்எல்ஏ செங்கோட்டையனை யாரும் பார்க்கவே முடியாது. வீட்டு கேட்டை பூட்டி விடுவார், நாயை அவிழ்த்து விடுவார். அப்படிப்பட்டவரை எதிர்த்து உங்களோடு பழகக்கூடிய வேட்பாளரான வி.பிரபுவை நிறுத்தி இருக்கிறோம். அதேபோல் அந்தியூர் சட்டமன்றத் தொகுதியில் ஹரிபாஸ்கர், எளிமையானவர். இந்த மூவருக்கும் இரட்டை இலை சின்னத்தில் வாக்களிக்க வேண்டும்.

பவானிசாகர் அணைக்கு குறிப்பிட்ட காலத்திற்குத்தான் தண்ணீர் வருகிறது, பிறகு வறண்டு விடுகிறது. பாசனத்திற்குத் தேவையான நீர் கிடைக்கவில்லை. அதனால் பாண்டியாறு புன்னம்புழா திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்று நான் நேரடியாக கேரளா முதல்வரை சந்தித்தேன்.

தண்ணீர் வீணாக கடலில் போய் கலக்கிறது. யாருக்கும் பயன்படவில்லை. மக்கள் தண்ணீர் இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள். எனவே, எப்படியாவது பண்டியாறு புன்னம்புழா திட்டத்தை நிறைவேற்றி தாருங்கள் என்றும், அதன் உபரி நீரி கடலில் கலப்பதை பவானி சாகர் அணைக்குத் திருப்பிவிட்டால், மக்கள் பிரச்சனை தீரும் என்றும் வலியுறுத்தினேன்.

அப்போது கேரளா முதல்வர், 'தமிழ்நாட்டில் எத்தனையோ முதல்வர்கள் வந்தார்கள்., யாரும் இவ்வளவு விரிவாகச் சொல்லவில்லை. ஆனால் நீங்கள் ஒருவர் தான் என்னோடு அமர்ந்து இவ்வளவு கஷ்டங்களை சொல்கிறீர்கள். நிச்சயம் பரிசீலிக்கிறேன்' என்றார். மூன்று முறை பேச்சுவார்த்தை நடத்தினோம். அடுத்து கேரளா, தமிழ்நாடு அதிகாரிகள் பேச்சுவார்த்தை நடத்தினார்கள். கடைசியாக முடியும் தருவாயில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு, அதை ஸ்டாலின் கிடப்பில் போட்டுவிட்டார். விவசாயிகள் என்றால் அவருக்கு கடுப்பு. விவசாயி, விவசாய தொழிலாளர்களுக்கு இந்த ஆட்சியில் எதுவுமே கிடைக்கவில்லை. உடம்புக்கு உயிர் எப்படியோ, அது போல் விவசாயத்திற்குத் தண்ணீர் அவசியம். தண்ணீரை எப்படியாவது கொடுக்கவேண்டும் என்பதற்குத் தான் நான் முழுமையாக செயல்பட்டேன். அது மட்டுமல்ல, பவானிசாகர் அணையில் இருந்து திறக்கப்படும் நீர் கடலில் கலக்கிறது. அதுவரை சுத்தமாக இருக்க வேண்டும். நீங்கள் சுத்தமான நீரை குடிக்க வேண்டும். அதற்காக அண்ணா திமுக ஆட்சியில் கொண்டுவரப்பட்டது நடந்தாய் வாழி காவிரி திட்டம்.

அற்புதமான திட்டத்தை மோடியிடம் அறிக்கையாகக் கொடுத்தேன், கங்கையை புனரமைப்பது போல எங்கள் ஜீவநதி காவிரியை சுத்தப்படுத்த வேண்டும் என்று அதற்காக தேவையான நிதி கேட்டேன். உடனடியாக அடுத்தாண்டே குடியரசு தலைவர் உரையில் இடம்பெறச் செய்து தமிழ்நாட்டில் நிறைவேற்றப்படும் என்றார்.

எப்போது பார்த்தாலும் முதலமைச்சர் மத்திய அரசு நிதி கொடுக்கவில்லை என்று சொல்கிறார். ஆனால், பணம் கொடுத்தும் ஏன் வேலை செய்யவில்லை..? அதற்கு ஒரே காரணம், அண்ணா திமுக ஆட்சிக்கும் கட்சிக்கும் நல்ல பெயர் வந்து விடும் என்பதால்தான். மக்களுக்கு கிடைக்க வேண்டிய நல்ல திட்டத்தை நிறுத்தி வைத்த திமுக அரசு தேவையா? 11,600 கோடி ரூபாய் எவ்வளவு கஷ்டப்பட்டு நான் வாங்கி வந்தேன், அதைக் கூட நிறுத்தி வைத்துவிட்டார்கள். மீண்டும் அதிமுக ஆட்சி வந்தால், இந்த திட்டம் செயல்படுத்தப்படும். சுத்தமான நீர் வழங்குவோம்.

இங்கு ஒரு எம்எல்ஏ 9 முறையாக இருந்தார். அவர் என்ன செய்தார் உங்களுக்கு? நான் வந்து தான் உங்களுக்கு ரோடு போட்டுக்

(4–ம் பக்கம் பார்க்க)



### ஆம்புலன்ஸ்க்கு வழி தந்த மனித நேயம்

கோபிசெட்டிபாளையத்தில் நடைபெற்ற தீவிர தேர்தல் பிரச்சாரத்தின் போது, அண்ணா தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி அருகில் ஒலித்த ஆம்புலன்ஸ் சைரன் சத்தத்தை கவனித்ததும் உடனடியாக தனது உரையை நிறுத்தினார். கடுமையாக கே.ஏ. செங்கோட்டையனை விமர்சித்து கொண்டிருந்த நிலையிலும், அவர் தன்னுடைய கட்சித் தொண்டர்களுக்கும், திரண்டிருந்த பொதுமக்களுக்கும் ஆம்புலன்ஸுக்கு வழிவிடுமாறு அறிவுறுத்தினார்.

பெரிய கூட்டத்தின் நடுவே ஆம்புலன்ஸ் தடையின்றி செல்லும் வரை சில நிமிடங்கள் மௌனமாக காத்திருந்த அவர், ஆம்புலன்ஸ் பாதுகாப்பாக சென்ற பிறகே தனது உரையைத் தொடர்ந்தார். மனிதநேயத்தின் மதிப்பை முன்னிறுத்திய இந்த செயல், ஆம்புலன்ஸ் அணுகும் போது எப்படிச் செயல்பட வேண்டும் என்பதற்கான சிறந்த முன்னுதாரணமாக அமைந்தது.

## நாடாளுமன்றம் ஒத்திவைப்பு

# மகளிர் இட ஒதுக்கீடு: மாநிலங்களவையில் தி.மு.க. தனி நபர் மசோதா தாக்கல்

புதுடெல்லி, ஏப்.18–

**மாநிலங்களவையில் தி.மு.க. எம்.பி. வில்சன், மகளிர் இடஒதுக்கீட்டுக்கான தனி நபர் மசோதாவை தாக்கல் செய்தார்.**

நாடாளுமன்றம், சட்டசபைகளில் மகளிருக்கு 33 சதவீதம் வழங்கும் இட ஒதுக்கீடு மசோதா, தொகுதி மறுவரையறை மசோதா உள்ளிட்டவற்றை நிறைவேற்றுவதற்காக நாடாளுமன்றத்தின் சிறப்புக் கூட்டம் கடந்த 16ம் தேதி கூடியது. முதல் நாளே இந்த மசோதாக்கல் தாக்கல் செய்யப்பட்டது. அன்றைய தினம் நள்ளிரவு வரை விவாதம் நடைபெற்ற நிலையில் நேற்று (17ந் தேதி) மாலை மசோதாக்கள் மீது வாக்கெடுப்பு நடந்தது.

மசோதாவிற்கு ஆதரவாக 298 உறுப்பினர்கள் வாக்களித்தனர். 230 உறுப்பினர்கள் எதிராக வாக்களித்தனர். வாக்களித்த 528 உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையைப் பெற இந்த மசோதாவிற்கு 352 வாக்குகள் தேவைப்பட்டன. ஆனால் அது கிடைக்காமல் போனதால், மசோதாக்கள் தோல்வி அடைந்தன.

இந்நிலையில் நாடாளுமன்ற கடைசிநாள் அமர்வு இன்று நடைபெற்ற நிலையில் மகளிர் இட ஒதுக்கீடு தொடர்பாக தனிநபர் மசோதாவை தாக்கல் செய்து தி.மு.க. எம்.பி. வில்சன் பேசினார்.

தற்போதுள்ள 543 இடங்களின் எண்ணிக்கையை மாற்றாமல் இடஒதுக்கீடு செய்யவும், அடுத்த தேர்தல் முதலே பெண்களுக்கு இடஒதுக்கீடு வழங்கும் வகையிலான மசோதா நிறைவேற்றவும் கேட்டுக்கொண்டார்.

மேலும் தொகுதி மறுவரையறை அல்லது மக்கள்தொகைகணக்கெடுப்பு எதையும் மேற்கொள்ளாமல் மகளிர் இடஒதுக்கீடு வழங்க கோரிக்கை விடுத்தார். தொகுதி மறுவரையறை மசோதா தோல்வி அடைந்த நிலையில் 2023ல் நிறைவேற்றப்பட்ட மகளிர் இடஒதுக்கீடு வெறும் ஏட்டளவில் மட்டும் இருக்கக்கூடாது என்றார்.

அடுத்து, நாடாளுமன்றத்தின் இரு அவைகளும் தேதி குறிப்பிடாமல் ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

### சந்திரபாபு நாயுடு கருத்து

மகளிர் இடஒதுக்கீடு மசோதாவைத் தடுத்ததன் மூலம், காங்கிரஸ் தலைமையிலான எதிர்க்கட்சிகள், பெண் அதிகாரமளித்தலை நோக்கிய இந்தியாவின் வரலாற்றுச் சிறப்புமிக்க முன்னேற்றத்தைத் தடுத்துவிட்டதாக ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு, தன் சமூக ஊடகப் பதிவு ஒன்றில் குறிப்பிட்டார்.

''இது வெறும் அரசியல் நீதியான முட்டுக்கட்டை மட்டுமல்ல, நாடாளுமன்றத்தில் சமமான பிரநிதித்துவத்தை பெறத் தகுதியுள்ள லட்சக்கணக்கான பெண்களுக்கு இழைக்கப்பட்ட துரோகம். இந்த தேசம் இதை நினைவில் கொள்ளும் என்றும் கருத்து தெரிவித்தார். இதற்கிடையில், சட்டசபை அமைப்புகளில் பெண்களின் அதிகாரத்தை அதிகரிக்கும் ஒரு சிறந்த வாய்ப்பை எதிர்க்கட்சிகள் தவறவிட்டுவிட்டதாக ஜனசேனா கட்சியின் நிறுவனரும் துணை முதலமைச்சருமான பவன் கல்யாண் தெரிவித்தார்.

எதிர்க்கட்சிகள் மகளிர் இடஒதுக்கீடு மசோதாவிற்கு ஒப்புதல் அளித்திருந்தால், பெண்களுக்கு உரிய மரியாதை கிடைத்திருக்கும்'' என்று அவர் குறிப்பிட்டார்.

## அண்ணா தி.மு.க. வெறும் முகமூடி

# தமிழகத்தை டெல்லியிலிருந்து ஆட்சி செய்ய பிரதமரும், அமித்ஷாவும் வகுத்த வியூகம்: ராகுல் தாக்கு

## பொன்னேரியில் இன்று பிரச்சாரம்



சென்னை, ஏப். 17–

**''தமிழகத்தை டெல்லியிலிருந்து ஆட்சி செய்ய பிரதமர் மோடியும், உள்துறை அமைச்சர் அமித்ஷாவும் திட்டமிடுகின்றனர்'' என்று பொன்னேரியில் நடந்த பிரச்சாரக் கூட்டத்தில் காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி காட்டமாகத் தாக்கினார்.**

டெல்லியில் இருந்து இன்று காலை தனி விமானம் மூலம் சென்னை வந்த ராகுல் காந்தி, விமான நிலையத்திலிருந்து பொன்னேரி வந்தார். அங்கு நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் பங்கேற்று காங்கிரஸ் மற்றும் கூட்டணி கட்சி வேட்பாளர்களுக்கு ஆதரவாக வாக்கு சேகரித்தார். கூட்டத்தில் அப்போது அவர் பேசியதாவது:

''என்னுடைய பூர்வீகம் காஷ்மீர் தான். எப்போதெல்லாம் காஷ்மீர் செல்கிறேனோ, அப்போதெல்லாம் சொந்த வீட்டிற்கு வந்ததைப் போன்ற உணர்வு வரும். அதே தமிழ்நாட்டிற்கு வரும் போதும் உணர்வு ஏற்படுகிறது.

இயற்கையாகவே தமிழ் மக்களுடன் எனக்கு நல்ல உறவு இருக்கிறது. அதேபோல் தமிழர்களுக்கு என் மனதில் எப்போதும் தனித்த இடம் உண்டு. நான் தமிழ்நாட்டில் பிறக்கவில்லை. ஆனால் தமிழ் மண்ணுடன் நெருக்கமான உறவு உள்ளது.

எவ்வளவு தைரியம் இருந்தால் தமிழ் மண், மொழி, கலாச்சாரம் மீது ஆர்.எஸ்.எஸ்., பாஜக தாக்குதல் நடத்துவார்கள்? நாடாளுமன்றத்தில் தமிழ்நாட்டின் பிரதிநிதித்துவத்தை குறைக்கும் திட்டத்துடனே தொகுதி மறுவரையறை மசோதா கொண்டு வரப்பட்டது. மகளிர் இட ஒதுக்கீடு என்ற போர்வையில் தொகுதி மறுவரையறை மசோதாவை கொண்டு வந்தார்கள்.

### தமிழ் மொழி, பண்பாட்டை அழிக்க பா.ஜ.க. முயற்சி

இந்தியா என்ற சிந்தனையை காப்பதற்காக மசோதாக்களை வீழ்த்தினோம். இந்தியா என்பது பல மாநிலங்களின் ஒன்றியம். ஒவ்வொரு மாநிலத்தின் குரலும் எதிரொலிக்க வேண்டும். ஒரு நாடு, ஒரு மொழி, ஒரு கலாச்சாரம், ஒரே மதம் என்று கூறும்போது பிரதமர் மோடி நமது அரசியலமைப்பை தாக்குகிறார். பாஜக, ஆர்.எஸ்.எஸ். என்ன செய்ய நினைக்கிறது என்பதை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

தமிழ் கலாச்சாரம், மொழி, பண்பாட்டை அழிக்க பாஜக, ஆர். எஸ்.எஸ். கூட்டத்தை அனுமதிக்க மாட்டோம். தமிழர்கள் யார் என்பதை பாஜக இன்னும் புரிந்து கொள்ளவில்லை. தமிழுக்கும், தமிழர்களுக்கும் பல ஆயிரம் ஆண்டு வரலாற்று பாரம்பரியம் உள்ளது என்பது பாஜகவுக்கு தெரியவில்லை. டெல்லியில் இருந்து தமிழ்நாட்டை ஆள பாஜகவுக்கு இங்கு ஒரு கூட்டாளி வேண்டும். மோடி எப்படி அமெரிக்க அதிபர் டிரம்ப்பிடம் சரணடைந்தாரோ, அதுபோல் டெல்லியிடம் சரணடையும் முதல்வர் தமிழ்நாட்டில் வேண்டும் என்று பாஜக நினைக்கிறது. மோடி, அமித்ஷா உத்தரவை செயல்படுத்தும் ஒருவரை தமிழ்நாட்டின் முதலமைச்சராக்க பாஜக நினைக்கிறது.

டெல்லியிலிருந்து தமிழகத்தை ஆட்சி செய்ய மோடியும், அமித்ஷாவும் திட்டமிடுகின்றனர். தமிழ்நாட்டில் அதிமுக என்ற கட்சியே இல்லாமல் போய்விட்டது. இப்போது இருப்பது வெறும் முகமூடி தான். இன்னும் சொல்லப் போனால் அதிமுகவை மோடியும், அமித்ஷாவும் விழுங்கி வருகிறார்கள். தமிழ் மொழியையும், தமிழ் மண்ணையும் பாஜகவால் ஒருநாளும் தொட முடியாது.

திமுக ஆட்சிக்கு வந்தால், ஒவ்வொரு மகளிருக்கும் ரூ.2 ஆயிரம் உரிமைத் தொகை அளிக்கப்படும். முதியோர், மாற்றுத்திறனாளிகளுக்கு மாதந்தோறும் ரூ.2 ஆயிரம் வழங்கப்படும். கல்லூரி படிக்கும் மாணவ, மாணவிகளுக்கு உதவித்தொகை அளிக்கப்படும்.

இவ்வாறு அவர் பேசினார்.

இதனைத் தொடர்ந்து ராகுல் காந்தி சோளிங்கர் தொகுதிக்கு உட்பட்ட பாண்டியநல்லூர் பகுதியில் பிரச்சாரம் செய்கிறார். மாலை 4 மணியளவில் துறையூர் தொகுதிக்கு உட்பட்ட பெரம்பலூர் பைபாஸ் பகுதியில் நடைபெறும் பொதுக்கூட்டத்திலும் கலந்து கொண்டு காங்கிரஸ் கட்சி வேட்பாளர்களுக்கு ஆதரவு திரட்ட உள்ளார்.

இந்தப் பிரச்சாரத்தை முடித்துக் கொண்டு டெல்லி செல்லும் ராகுல் காந்தி மீண்டும் 20ம் தேதி தமிழகத்திற்கு வருகைதரவுள்ளார்.

# மக்களை ஏமாற்றும் தி.மு.க.வை வீட்டுக்கு அனுப்புவோம்: விஜய் உறுதி

சென்னை, ஏப். 18–

மக்களை ஏமாற்றும் தி.மு.க.வை மக்கள் ஆட்சிக்கு வரவிடாமல் வீட்டுக்கு அனுப்பப்போவது உறுதி என்று விஜய் கூறியுள்ளார்.

தமிழக வெற்றிக்கழகத் தலைவர் விஜய் எக்ஸ் தள பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில் கூறியிருப்பதாவது:

என் நெஞ்சில் குடியிருக்கும் அனைவருக்கும் வணக்கம். தமிழகத்தில் நடக்கும் தேர்தல் நேர நாடகம் குறித்து உங்களிடம் பகிர்ந்துகொள்ளவே இக்கடிதம். தேர்தல் நேரத்தில் திசை திருப்பல்கள் நடப்பது ஒன்றும் புதிதன்று. இருந்தும் உஷாராக இருக்க வேண்டியது நம் கடமை. திசைதிருப்பும் முதலீட்டுக் கழகம், பல்வேறு வழிகளில் மக்களைக் குழப்புவதற்கான முயற்சிகளில் ஈடுபடுகிறது.

தந்தை பெரியாரும் பெருந்தலைவர் காமராஜரும், அண்ணாவும் விதைத்த நல்லிணக்கம் பேசும் சமூக நீதி விதைகள் ஆழமாய் வேரூன்றிய மாபெரும் மதச்சார்பற்ற மண் இது. இத்தகைய நம் தமிழ்நாட்டு மண்ணில் என்றைக்கும் ஃபாசிச சக்திகள் வேரூன்ற மட்டுமன்று, காலூன்றவே இயலாது. அதோடு பாசிச மனநிலை கொண்ட 'மக்கள் விரோத' ஆட்சியாளர்களுக்கு, குறிப்பாகத் தி.மு.க.விற்கு மறுமுறை வாய்ப்பு என்பது எட்டாக்கனி என்பதுதான் தமிழ்நாட்டின் அரை நூற்றாண்டுக்கும் மேலான தேர்தல் வரலாறு.

தேர்தல் ஆணையத்திடம் என்னதான் பொறுப்பு இருந்தாலும், காபந்து அரசான கபட நாடகத் தி.மு.க. அரசு, தன் கையில் வைத்திருக்கும் அதிகாரிகள் சிலரை வைத்து நமக்கு மட்டுமல்லாமல் நம் வேட்பாளர்களுக்கும் பரப்புரை செய்ய நெருக்கடிகளையும் நிர்பந்தங்களையும் நீட்டிக்கவே செய்கின்றது. கடைசி நேரம் வரை காத்திருக்கச் செய்து, அனுமதிக் கடிதத்தைத் தாமதமாக அளித்து, நமக்கான பிரசார முன்னேற்பாடுகளைச் செய்யவிடாமல் நெருக்கடி தருவது, கடைசி நேரத்தில் த.வெ.க.வின் பரப்புரைக்கான அனுமதியை ரத்து செய்ய வைப்பது, ரத்து செய்வது, நமது பிரசார நிகழ்ச்சிகளுக்கான அனுமதி மற்றும் ரத்து குறித்து ஊடகங்களில் புனைவுச் செய்திகள் வெளியிடச் செய்து மக்களைக் குழப்புவது என்று தி.மு.க.வின் பரம்பரைத் தில்லுமுல்லுகள் தொடரத்தான் செய்கின்றன.

பவள விழா பாப்பா.. என்ன தான் தில்லுமுல்லு செய்தாலும்... நீ தடுத்துவிடலாம் என்று நினைப்பது போல் த.வெ.க. ஒன்றும் பழைய ஃபார்மட்டில் ரோட்டில் பிரசாரம் செய்வதை மட்டுமே நம்பி இருக்கவில்லை. த.வெ.க.விற்கு ஆதரவாகத் தமிழ்நாட்டு மக்கள் நலன் சார்ந்த தன்னெழுச்சியான, தன்விருப்பமான பிரசாரம் தமிழகமெங்கும் உள்ள ஒவ்வொரு வீட்டிலும் மாபெரும் மக்கள் சக்தி இயக்கமாக மாறி நடந்துகொண்டுதான் இருக்கிறது. த.வெ.க.வின் வெற்றியைத் தடுத்துவிடலாம் என்று, 'தான்' என்ற அகந்தையில் இருக்கும் ஆதாய அரசியல் சூதாடும் அனுபவசாலிகள் அனைவரும் மக்கள் ஓர் அமைதிப் புரட்சிக்குத் தயாரானதை மறந்துவிட்டு ஆடுகின்றனர்.

இந்த ஆட்டமெல்லாம், வருகிற ஏப்ரல் 21ஆம் தேதி வரைதான். ஏப்ரல் 23 அன்றே, ஊழல் சக்திகள் மட்டுமல்லாது, மற்றும் பலருடன் ஃபாசிச சக்திகளும் விசில் புயலில் வீழ்வது உறுதி. Limitation இல்லாமல் அராஜகத்தையும் ஊழலையும் செய்து, Limitation இல்லாமல் பொய் வாக்குறுதிகள் தந்து மக்களை ஏமாற்றும் லிமிடெட் கம்பெனி தி.மு.க.வை இந்தத் தேர்தலில் ஆட்சிக்கு வரவிடாமல் limit செய்து, மக்கள் வீட்டுக்கு அனுப்பப்போவது உறுதி. மக்களே இந்த வேடதாரிகளை நம்பாமல் விழிப்புடன் இருப்போம். வெல்வோம். வாகை சூடுவோம். வரலாறு படைப்போம்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

மசோதா தோல்வி: இனிமேலும் உரசிப் பார்க்காதீர்கள்

# பா.ஜ.க.வின் வீழ்ச்சியை தமிழ்நாடு தொடங்கியுள்ளது: ஸ்டாலின் பேச்சு



திண்டுக்கல். ஏப்.18

**இனிமேலும் உரசி பார்க்காதீர்கள். தொகுதி மறுவரையறை மசோதா தோல்வி மூலம் பா.ஜ.க.வின் வீழ்ச்சியை தமிழ்நாடு தொடங்கி வைத்துள்ளது என்று திண்டுக்கல் பிரச்சாரத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பேசினார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் திண்டுக்கல் மணிக்கூண்டு பகுதியில் நேற்று நடைபெற்ற தேர்தல் பிரச்சார பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டார். இந்த கூட்டத்தில் தி.மு.க. வேட்பாளர்கள் இ.பெரியசாமி (ஆத்தூர்), அர.சக்கரபாணி (ஒட்டன்சத்திரம்), இ.பெ. செந்தில்குமார் (திண்டுக்கல்), நாக ஜோதி (நிலக்கோட்டை), சாமிநாதன் (வேடசந்தூர்), கூட்டணி கட்சிகளான மார்க்சிஸ்ட் கட்சி வேட்பாளர் பாண்டி (பழனி), தமிழர் தேசம் கட்சி வேட்பாளர் செல்வக்குமார் (நத்தம்) ஆகியோரை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிமுகம் செய்து வாக்குகேட்டார்.

அப்போது அவர் பேசியதாவது:

வெற்றி செய்தியோடு வெடியை போட்டுவிட்டு தான் இங்கு வந்து இருக்கிறேன். சட்டமன்ற தேர்தலுக்கு முன்பே தேசிய ஜனநாயக கூட்டணி மண்ணை கவ்வி இருக்கிறது. இது 100 ஆண்டுகள் கழித்தும் வரலாற்றில் நின்று பேசப்போகும் வெற்றி ஆகும். பா.ஜ.க.வின் வீழ்ச்சியை தமிழ் நாடு தொடங்கி வைத்துள்ளது. தமிழ்நாடு போராடும். தமிழ்நாடு வெல்லும் என்று கூறினேன். இன்று தமிழ்நாடு வென்று இருக்கிறது.

கருப்பு கொடி ஏற்றினால், கருப்பு சட்டை அணிந்தால் முடியுமா? என்று கேட்டனர். இப்போது ஒரே போடாக போட்டுவிட்டோமா? இல்லையா? ஆனால் இதெல்லாம் அவர்களுக்கு போதாது. ஏப்ரல் 23ந்தேதி தேர்தலில் நீங்கள் வழங்க போகும் அடி தான். ரியல் அடி. இனிமேலாவது தமிழ்நாட்டை தேவை இல்லாமல் உரசி பார்க்காதீங்க, தாங்க மாட்டீங்க. பிரதமர் மோடி 12 ஆண்டு கால ஆட்சியில் சந்தித்த முதல் தோல்வியான இது. மாபெரும் தோல்வி. தேர்தலுக்கு முன்பே எடப்பாடி பழனிசாமி சந்தித்த படுதோல்வி. தேர்தல் நேரத்தில் இதுபோன்று சட்டம் கொண்டு வந்தால் தமிழ்நாட்டில் அனைவரும் அசால்டாக இருந்து விடுவோம் என்று நினைத்தனர். ஆனால் தமிழ்நாடு எப்போதும் அலார்ட்டாக தான் இருக்கும்.

இந்த மு.க.ஸ்டாலின் பற்ற வைத்த தீ டெல்லியின் ஆணவத்தை சுட்டெரித்துள்ளது. கருஞ்சட்டை படை, காவி படையை வீழ்த்தி இருக்கிறது. மகளிர் இட ஒதுக்கீடு என்று முகமூடி போட்டு கொண்டு வரப்பட்ட தொகுதி மறுவரையறை மசோதாவை இந்தியா கூட்டணி கட்சிகள் தோல்வி அடைய வைத்துள்ளன.

40 பேர் டெல்லிக்கு போய் என்ன பண்றாங்க என்று எடப்பாடி கேட்டார். இப்போது தமிழ்நாட்டு எம்.பி.க்கள், நாடாளுமன்றத்தில் பா.ஜ.க.வை பந்தாடிவிட்டு வந்துள்ளனர்.

இதுவே அண்ணா தி.மு.க.வினர் சென்று இருந்தால் என்ன செய்து இருப்பார்கள் என்று உங்களுக்கே தெரியும்.

பிரதமரும், உள்துறை அமைச்சரும் தமிழ்நாடு பாதிப்படையாது என்றனர். ஆனால் அவர்கள் சொன்னது ஒன்று, கொண்டு வந்த சட்டத்தில் இருந்தது வேறு. தமிழ்நாட்டுக்கு எத்தனை தொகுதிகள். என்ன பாதுகாப்பு, எந்த மக்கள்தொகை அடிப்படையில் மறுவரையறை செய்யப்படும் என்ற தகவல்கள் தெளிவாக இல்லை. 1971 மக்கள் தொகை அடிப்படையில் தான் தொகுதிகளை மறுவரையறை செய்ய வேண்டும்.

தொகுதி அளவுக்கான அடிப்படை அளவாக 2011 மக்கள் தொகையை எடுத்து கொள்ள கூடாது. அவ்வாறு செய்தால் தமிழ்நாட்டுக்கான தொகுதிகளின் எண்ணிக்கை குறையும். ஒட்டுமொத்தமாக அவர்கள் கொண்டு வந்த சட்டம் காலி காசோலை. அதில் நமது கையெழுத்தை போட சொன்னார்கள். நம்மிடம் இருந்து எவ்வளவு பிடுங்க போறாங்க என்று தெரியாமல் எப்படி ஒத்துக்கொள்ள முடியும்.

இவ்வளவு முக்கியமான பிரச்சினையில், தமிழ்நாட்டில் ஒருவர் மட்டும் எதுவும் பேசாமல் இருந்தார். ஒன்றிய அரசு சிறப்பாக பண்ணுவார்கள் என்று எடப்பாடி கூறினார். எடப்பாடி அவர்களே, பேசாமல் கட்சியை கலைத்துவிட்டு, பா.ஜ.க.வில் சேர்ந்துவிடுங்கள். இந்த ஜனநாயகப் போரில், அரசியல் விருப்பு வெறுப்புகளுக்கு அப்பாற்பட்டு அனைவரும் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக்கு வாக்களிக்க வேண்டும்.

இவ்வாறு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் பேசினார்.

# ‘ரோடு ஷோ’ நடத்த அனுமதி கிடைக்காததால் கடலூரில் 3வது முறையாக நாளைய பிரச்சாரத்தை ரத்து செய்தார் விஜய்

திருச்சி கிழக்கு தொகுதியில் பிரச்சாரம் செய்ய திட்டம்

சென்னை, ஏப். 18–

**‘ரோடு ஷோ’ நடத்த அனுமதி கிடைக்காததால் கடலூரில் 3வது முறையாக நாளைய பிரச்சாரத்தை விஜய் ரத்து செய்துள்ளார்.**

சட்டசபைத் தேர்தலுக்கு இன்னும் 4 நாட்கள் மட்டுமே இருக்கும் சூழலில், ஒவ்வொரு கட்சியின் தலைவர்களும் காலை, மதியம், மாலை என்று 3 நேரங்களிலும் பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த நிலையில் தவெக தலைவர் விஜய் 3வது முறையாக கடலூர் பிரச்சாரத்தை ரத்து செய்திருப்பது தெரிய வந்துள்ளது.

கடலூரில் நாளை பிரச்சாரம் மேற்கொள்ள தவெக தலைவர் விஜய்க்கு அனுமதி அளிக்கப்பட்டிருந்தது. கடலூர் மஞ்சள் நகர் மைதானத்தில் தவெக தரப்பில் பொதுக்கூட்டம் நடத்த அனுமதி அளிக்கப்பட்டது. ஆனால் தவெக தரப்பில் ரோடு ஷோ நடத்தவும் அனுமதி கோரப்பட்டது. ஆனால் காவல்துறை தரப்பில் ரோடு ஷோவுக்கு அனுமதி அளிக்கப்படவில்லை. இப்படியான சூழலில் விஜய் கடலூர் பிரச்சாரத்தை ரத்து செய்துள்ளார். ஏற்கனவே இன்று காலை பெரம்பூர் தொகுதியில் வீடு வீடாக சென்று விஜய் பிரச்சாரம் செய்வதாக இருந்தது. இந்த பிரச்சாரத்தையும் விஜய் ரத்து செய்திருந்தார். இதனால் விஜய்யின் மாற்று திட்டம் என்ன என்பதே தவெக தொண்டர்களின் கேள்வியாக இருக்கிறது.

சட்டசபைத் தேர்தலுக்கு இன்னும் 4 நாட்கள் மட்டுமே இருக்கும் சூழலில், பெரிய கட்சிகளே ஒரு நாளில் பல்வேறு மாவட்டங்களிலும் பிரச்சாரம் மேற்கொண்டு வருகின்றன. ஆனால் விஜய் சென்னை பிரச்சாரம் முடிவடைந்து 3 நாட்களாகியும், இன்னும் அடுத்த பிரச்சாரத்தில் ஈடுபடாமல் இருக்கிறார். இது தவெக தொண்டர்களிடையே கடும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

இதற்கிடையில் நாளை தான் போட்டியிடும் திருச்சி கிழக்குத் தொகுதியில் நாளை விஜய் பிரச்சாரம் செய்ய திட்டமிட்டுள்ளதாகவும் இதற்கு காவல்துறையினர் அனுமதி வழங்கியுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகி உள்ளது.

# ரஷ்யாவிடம் எண்ணெய் வாங்க உலக நாடுகளுக்கு மேலும் ஒரு மாதம் அவகாசம்: அமெரிக்கா அறிவிப்பு

வாஷிங்டன், ஏப். 18–

சர்வதேச அளவில் கச்சா எண்ணெய் விநியோகத்தில் பாதிப்பு ஏற்பட்டுள்ள நிலையில் உலக நாடுகள் ரஷ்ய நாட்டின் கச்சா எண்ணெய் மற்றும் பெட்ரோலிய பொருட்களை வாங்குவதற்கு அனுமதி அறிவித்த அமெரிக்கா, தற்போது அதை மேலும் ஒரு மாத காலத்துக்கு நீட்டித்துள்ளது.

கடந்த பிப்.28ம் தேதி அமெரிக்கா, இஸ்ரேல் இணைந்து ஈரான் மீது தாக்குதல் நடத்தியது. இதற்கு ஈரானும் பதிலடி தந்தது. தற்போது அமெரிக்கா மற்றும் ஈரான் இடையே இடைக்கால போர் நிறுத்தம் ஏற்பட்டுள்ளது. போர் சூழலால் ஹார்முஸ் ஜலசந்தி வழியாக சர்வதேச அளவில் கச்சா எண்ணெய் விநியோகம் பாதிக்கப்பட்டது. இந்த தட்டுப்பாட்டை குறைக்கும் வகையில் இந்தியா உட்பட சர்வதேச நாடுகள் கடலில் உள்ள ரஷ்ய கச்சா எண்ணெய் மற்றும் எரிபொருளை வாங்கிக் கொள்ளலாம் என அமெரிக்கா தெரிவித்தது. முன்னதாக, ரஷ்யாவிடம் இருந்து எண்ணெய் வாங்கும் நாடுகளுக்கு கூடுதல் வரி விதித்தது அமெரிக்கா. இந்த வரி விதிப்பு இந்தியா மீதும் சுமத்தப்பட்டது. அதன் பின்னர் ரஷ்ய கச்சா எண்ணெய் வாங்குவதை இந்தியா நிறுத்திக் கொண்டது. இத்தகைய சூழலில் மேற்காசிய போர் காரணமாக ரஷ்ய கச்சா எண்ணெய் வாங்க முப்பது நாட்கள் விலக்கு அறிவித்தது அமெரிக்கா. அந்த விலக்கு ஏப்.11ம் தேதியுடன் நிறைவடைந்தது. தற்போது அதை மேலும் ஒரு மாத காலம் நீட்டித்துள்ளது அமெரிக்கா.

இது தொடர்பாக அமெரிக்க கருவூல அமைச்சகம் முக்கிய அறிவிப்பு ஒன்றை வெளியிட்டது. அதில் ரஷ்யா கச்சா எண்ணெய் உடன் கடல் பயணத்தில் உள்ள சரக்கு கப்பல்களில் இருந்து உலக நாடுகள் கொள்முதல் செய்ய கடந்த மாதம் அனுமதி அளிக்கப்பட்டது. தற்போது அந்த அனுமதி மே 16 வரை நீட்டிக்கப்படுகிறது.

# விவசாயிகளுக்கு திட்டங்களை தடுத்தவர் ஸ்டாலின்: எடப்பாடி குற்றச்சாட்டு...

(3–ம் பக்கத் தொடர்ச்சி)

கொடுத்தேன். அவர் சட்டமன்றத்தில் தி.மு.க.வை புகழ்ந்து பேசுவார். பணக்காரரைக் கண்டால் ஒரு மரியாதை, ஏழையை கண்டால் ஒரு மரியாதை. அப்படிப்பட்ட ஆள் தேவையா?

**செங்கோட்டையனின் பதவியை பறித்த ஜெயலலிதா**

நாம் அவருக்கு எவ்வளவு மரியாதை கொடுத்து வைத்திருந்தோம். அம்மா ஏன் 2013ல் அமைச்சர் பதவியை பிடுங்கினார்கள்? எப்படி நடந்தது. உலகத்தில் உள்ள அதிசயம், நம் வீட்டில் இருக்கும் மனைவி, குழந்தைகள், நாம் பதவிக்கு வந்தால் சந்தோஷப்படுவார்கள்.

ஆனால் செங்கோட்டையன் வீட்டில், அவரது மனைவியும், மகனும் ஏதோ பிரச்சனை. அதை சொல்லக்கூடாது, அது தப்பான பிரச்சனை உங்களுக்கு நன்றாகத் தெரியும், அது சம்மந்தமாக புகார் சொன்னார்கள். அப்போது தலைமைச் செயலகத்தில் நான் கீழே இருந்தேன். அவர்கள் அம்மாவிடம் போய் இவரை பற்றி புகார் அளித்தார்கள், அம்மா அசந்துவிட்டார். குடும்பத்தில் இருக்கிறவர்களே இப்படி புகார் சொல்லும்போது, மக்களை எப்படி வாட்டி வதைப்பார் என்று அமைச்சர் பதவியிலிருந்து நீக்கிவிட்டார்.

என்னை முதலமைச்சராக எம்எல்ஏக்கள் தேர்ந்து எடுத்துவிட்டார்கள். ஆனால் இவர், அவருக்கு முதலமைச்சர் பதவி வந்தது என்று சொல்கிறார். உங்களை நம்பி ஒரு எம்எல்ஏ கூட வரவில்லையே..? எம்எல்ஏ தானே முதலமைச்சரை தேர்ந்தெடுக்க வேண்டும். எல்லோரும் என்னை தேர்ந்தெடுக்கிறார்கள்.

இவர் சம்பந்தமே இல்லாமல், பந்தியிலே கிழிந்த இலை போல் பேசுகிறார். பந்தியிலேயே இவரை அமர வைக்கவில்லை, என்னை முதலமைச்சராக்க பார்த்தார்கள், இபிஎஸ்ஸை ஆக்கிவிட்டார்கள் என்கிறார். எனக்கு எங்கள் எம்எல்ஏக்கள் எல்லாம் ஆதரவு கொடுத்தார்கள், நான் முதலமைச்சரானேன். உங்களுக்கு அந்த வாய்ப்பு கொடுக்கவில்லை. ஏன் என்றால் அம்மாவே ரிஜெக்ட் செய்த ஆள். உங்களை எப்படி நம்புவார்கள்?

**கட்சியை உடைக்க பார்த்த ‘பி’ டீம்**

நம் கட்சியை உடைக்க அவ்வளவு வழக்கு போட்டார்கள். திமுக செய்த சதி கொஞ்சம் நஞ்சமல்ல. அதற்கு உதவிய பி டீம் எல்லாம் வெளியே சென்று விட்டது. அவர்கள் யார் என்று தெரிந்துவிட்டது. வெளியே போன ஆட்கள் எல்லாம் இந்த கட்சியை உடைக்க நினைத்தவர்கள். உங்கள் ஆதரவு இருக்கும் வரை யாராலும் இந்த கட்சியை அசைக்க முடியாது. திமுக ஆட்சிக்கு வந்த பின் ஒரு திட்டத்தையாவது நிறைவேற்றி னார்களா? 50 ஆண்டு கால போராட்டம் அத்திக்கடவு அவிநாசி திட்டம். அம்மா மறைந்தாலும் அவரது வாக்குறுதியை நிறைவேற்ற, அத்திட்டத்தை நிறைவேற்ற நானே அடிக்கல் நாட்டினேன். எஞ்சிய பகுதி எங்கெல்லாம் ஏரி, குளங்கள் இருக்கிறதோ அவற்றில் எல்லாம் அண்ணா திமுக ஆட்சிக்கு வந்தவுடன் நீர் நிரப்பப்படும். விவசாயிகளின் நிலைமை மாறிவிடும்.

திமுக இப்போது நம்மை ஐந்தரை லட்சம் கோடி கடனாளியாக்கிவிட்டது. அதை நாம் தான் கட்ட வேண்டும். 73 ஆண்டுகள் மாறி மாறி கட்சிகள் தமிழ்நாட்டை ஆண்டாலும், 4 லட்சத்து 85 ஆயிரம் கோடி கடன். ஆனால் திமுக ஆட்சிக்கு வந்த 2021 முதல் 26 வரை ஐந்தரை லட்சம் கோடி கடன் வாங்கி இருக்கிறார்கள் என்றால் இந்த ஆட்சி நல்லாட்சியா.? புதிய திட்டம் எதுவும் கொண்டுவரவில்லை., பவானியில் இருந்து 7 தடுப்பணைகள் கொண்டுவந்தேன். ஒரு தடுப்பணைக்கு 27 கோடி ரூபாய். அதை பொறுக்க முடியால் அணையிண் உயரத்தை குறைத்துவிட்டார்கள்., அப்புறம் எப்படி அணையில் தண்ணீர் தேங்கும்..? கெட்ட எண்ணத்தைப் பாருங்கள். விவசாயிகளுக்கு என்ன கொடுத்தாலும், அதற்கு தடை செய்பவர் தான் ஸ்டாலின்.

கிராமங்களில் வசிக்கும் ஏழை, எளிய மக்கள் தாங்கள் இருக்கும் ஊர்களிலும், அருகாமையிலும் சிகிச்சை பெறும் வகையில் தமிழ்நாடு முழுவதும் 2000 அம்மா மினி கிளினிக் தொடங்கப்பட்டன. ஏழை மக்கள் நோய்வாய்ப்பட்டால் அங்குசென்று சிகிச்சை எடுத்துவந்தனர். அம்மா மினி கிளினிக்கில் ஒரு எம்பிபிஎஸ் மருத்துவர், ஒரு செவிலியர், ஒரு உதவியாளர் பணியில் அமர்த்தி, கிராமப்புறங்களில் வசிக்கும் மக்களுக்கு சிறப்பான சிகிச்சை அளிக்கப்பட்டது. ஸ்டாலினுக்குப் பொறுக்க முடியவில்லை. மீண்டும் அதிமுக ஆட்சி அமைந்ததும் எங்கெல்லாம் இருந்ததோ அங்கெல்லாம் அம்மா மினி கிளினிக் தொடங்கப்படும்.

இவ்வாறு எடப்பாடி பேசினார்.

# பறக்கும் படை அதிரடி சோதனை: தமிழ்நாடு, மேற்கு வங்கத்தில் ரூ.865 கோடி பொருட்கள் பறிமுதல்

சென்னை, ஏப்.18–

**சட்டமன்ற தேர்தலை முன்னிட்டு, தமிழ்நாடு மற்றும் மேற்கு வங்கத்தில் பறிமுதல் செய்யப்பட்ட பொருட்களின் மதிப்பு ரூ.865 கோடியைத் தாண்டியது.**

தேர்தல் பறக்கும் படைகளால் தமிழ்நாடு மற்றும் மேற்கு வங்கத்தில் பறிமுதல் செய்யப்பட்ட தொகை விவரம் வருமாறு:–

மேற்கு வங்காளத்தில் ரொக்கம் ரூ.21 கோடி உள்பட மொத்தம் ரூ.427 கோடியும், தமிழ்நாட்டில் ரொக்கம் ரூ.78 கோடி உள்பட மொத்தம் ரூ.436 கோடியும் என மொத்தம் ரூ.99 கோடி உள்பட மொத்தம் ரூ.865 கோடியும் பறக்கும் படைகளால் கைப்பற்றப்பட்டது.

இந்த வழிகாட்டுதல்களை அமல்படுத்துவதற்காக மேற்கொள்ளப்படும் சோதனைகள் மற்றும் ஆய்வுகளின் போது சாதாரண குடிமக்கள் எவ்வித சிரமத்திற்கும் அல்லது துன்புறுத்தலுக்கும் உள்ளாகக் கூடாது என்பதை அமலாக்கத் துறையினர் உறுதி செய்ய வேண்டும் என்று ஆணையம் வலியுறுத்தியுள்ளது. இது தொடர்பான புகார்களைத் தீர்க்க மாவட்ட குறைதீர்க்கும் குழுக்களும் அமைக்கப்பட்டுள்ளன. குடிமக்கள், அரசியல் கட்சிகள் மாதிரி நடத்தை விதி மீறல்கள் குறித்து ECINETல் உள்ள CVigil Module மூலம் புகார் செய்யலாம் என்று துணை இயக்குநர் ப.பவன் தெரிவித்துள்ளார்.

**சென்னையில்...**

நேற்று சென்னைமாவட்டத்தில்உரிய ஆவணங்கள் இன்றி வாகனங்களில் கொண்டு செல்லப்பட்ட ரூ.6,16,600 ரொக்கப் பணம் பறக்கும் படை மற்றும் நிலையான கண்காணிப்புக் குழுவினரால் பறிமுதல் செய்யப்பட்டது.

நேற்று (17–ந் தேதி) பறக்கும் படை குழுவினர் வாகன சோதனையின்போது வில்லிவாக்கம் சட்டமன்றத் தொகுதியில் ரூ.95,000 , ஆயிரம்விளக்கு சட்டமன்றத் தொகுதியில் ரூ.2 லட்சம், வேளச்சேரி சட்டமன்றத் தொகுதியில் ரூ.62,100, மற்றும் நிலையான கண்காணிப்புக் குழுவினர் வாகான சோதனையின்போது, துறைமுகம் சட்டமன்றத் தொகுதியில் ரூ.2,59,500 என மொத்தம் ரூ.6,16,600 ரொக்கப் பணம் பறிமுதல் செய்யப்பட்டு கருவூலத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

# வால்பாறை மலைப்பாதையில் 800 அடி பள்ளத்தில் வேன் கவிழ்ந்தது: கேரளத்தை சேர்ந்த 9 பேர் பலி



வால்பாறை, ஏப்.18–

வால்பாறை மலைப் பாதையில் 800 அடி பள்ளத்தில் வேன் கவிழ்ந்து கேரளத்தை சேர்ந்த அரசு பள்ளி ஆசிரியைகள் உள்பட 9 பேர் பலியானார்கள். மேலும் 4 பேருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

கேரளம் மாநிலம் மலப்புரம் மாவட்டம் பெருந்தல்மன்னா அருகே தளிபரம்பு பகுதியில் அரசு பள்ளி ஒன்று செயல்பட்டு வருகிறது. இந்த பள்ளியை சேர்ந்த ஆசிரியர்கள், ஊழியர்கள் உள்பட 13 பேர், கடந்த 14ந் தேதி சித்திரை விசு பண்டிகையையொட்டி கேரளாவில் இருந்து வால்பாறைக்கு சுற்றுலா வந்தனர். அங்குள்ள சுற்றுலா தலங்களை சுற்றிப்பார்த்த பிறகு நேற்று வால்பாறையில் இருந்து கேரளம் செல்வதற்கு முடிவு செய்தனர். அதன்படி வால்பாறையில் இருந்து சுற்றுலா வேனில் பொள்ளாச்சி நோக்கி வந்து கொண்டிருந்தனர். வேனை முகமது பாசித் (வயது 21) என்பவர் ஓட்டி வந்தார்.

வால்பாறை – பொள்ளாச்சி மலைப்பாதை யில் 13வது கொண்டை ஊசி வளைவில் மாலை 5.15 மணியளவில் வந்தபோது எதிர்பாராத விதமாக திடீரென்று டிரைவரின் கட்டுப்பாட்டை இழந்த வேன் சுமார் 800 அடி பள்ளத்தில் கவிழ்ந்தது.

13வது கொண்டை ஊசி வளைவில் கவிழ்ந்த வேன் மலையில் உருண்டு 9வது கொண்டை ஊசி வளைவில் வந்து விழுந்தது.

இந்த விபத்தில் சுற்றுலா வேன் சுக்குநூறாக நெறுங் கியது. மேலும் அதில் இருந்தவர்கள் தூக்கி வீசப்பட்டு பலத்த காயம் அடைந்து உயிருக்கு போராடினர். இதைக் கண்ட வாகன ஓட்டிகள். காடம்பாறை போலீஸ் நிலையத்திற்கு தகவல் தெரிவித்தனர்.

அதன்பேரில் போலீசார், வனத்துறை யினருடன் விரைந்து சென்று மீட்பு பணியில் ஈடுபட்டனர். காயம் அடைந்தவர்களை சிகிச்சைக்காகவும், உயிரிழந்த வர்களின் உடல்களை பிரேத பரிசோதனைக்காகவும் பொள்ளாச்சி அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர்.

இந்த விபத்தில் ஒரு சிறுவன், 7 பெண்கள் மற்றும் ஒருவர் என 9 பேர் உயிரிழந்தனர். அவர்களது பெயர்கள் அஜிதா (54), ரம்லா (52) சுஹ்ரா(43), ஆஷா(41), மஜீத்(43), சஜிதா(45), ஷகீலா(37), ருகியா(39), ஹிஷாம்(12) ஆவர். மேலும் நவுசாத் (39), மஸ்னீன்(10), ஷஹதீன்(11) டிரைவர் முகமது பாசித் ஆகியோர் படுகாயங்களுடன் தீவிர சிகிச்சை பெற்று வரு கின்றனர். அதில் 3 பேர் மேல் சிகிச்சைக்காக கோவை அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைக்கப்பட்டு உள்ளனர். இறந்தவர்களில் 7 பெண்களும் ஆசிரியைகள் என்பது குறிப்பிடத்தக்கது.

# திருப்பூரில் பனியன் தொழிலாளர்களுடன் ஸ்டாலின் கலந்துரையாடல்

திருப்பூர், ஏப். 18–

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், திருப்பூர் ஆஷர் நகர் பகுதியில் உள்ள தனியார் பனியன் நிறுவனத்தில் பணியாற்றும் தொழிலாளர்களுடன் கலந்துரையாடினார்.**

திண்டுக்கல் மாவட்டத்தில் நேற்று இரவு தேர்தல் பிரசாரத்தை முடித்து விட்டு திருப்பூர் வந்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உறவினர் வீட்டில் தங்கினார். அதைத்தொடர்ந்து இன்று காலை திருப்பூரில் நஞ்சப்பா மேனிலைப்பள்ளி மைதானத்தில் நடைப்பயிற்சி மேற்கொண்டு வாக்கு சேகரித்தார்.

திருப்பூர் பாண்டியன் நகர் பகுதியில் திருப்பூர் ஆஷர் நகர் பகுதியில் உள்ள அலமேலு இன்டஸ்ட்ரியல் காம்ப்ளக்ஸில் உள்ள டோரம் கிரியேட்டர்ஸ் பிரைவேட் லிமிடெட் என்ற பனியன் நிறுவனத்தில் பணியாற்றும் தொழிலாளர்களுடன் அவர் கலந்துரையாடினார். அதைத்தொடர்ந்து திருப்பூர் மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர்கள் மற்றும் கூட்டணிக் கட்சியினருடன் தொகுதி நிலவரம் குறித்து ஆலோசனையில் ஈடுபட்டார்.

இன்று மாலை திருப்பூர் பாண்டியன் நகரில் நடைபெறும் பொதுக்கூட்டத்தில் திருப்பூர் தெற்கு, திருப்பூர் வடக்கு, பல்லடம், அவிநாசி, தாராபுரம், காங்கயம், உடுமலைப்பேட்டை, மடத்துக்குளம் ஆகிய தொகுதிகளின் வேட்பாளர்களை ஆதரித்து முதலமைச்சர் பிரச்சாரம் செய்கிறார்.

இதில் முதலமைச்சர் மு.க. ஸ்டாலினுடன் இணைந்து ராஷ்டீரிய ஜனதா தள கட்சியின் தலைவர் தேஜஸ்வி யாதவ் பிரச்சாரத்தில் பங்கேற்கிறார்.

இதன் பின்னர் திருப்பூரில் இருந்து சாலை மார்க்கமாக மேட்டுப்பாளையம் சென்று அங்கு நடைபெறும் பொதுக்கூட்டத்தில் முதலமைச்சர் ஸ்டாலின் பங்கேற்கிறார். இந்த பொதுக்கூட்டத்தில் மேட்டுப்பாளையம், உதகை, கூடலூர், குன்னூர், கவுண்டம்பாளையம், தொண்டாமுத்தூர் ஆகிய தொகுதிகளின் வேட்பாளர்களை ஆதரித்து முதலமைச்சர் ஸ்டாலின் பிரச்சாரம் செய்கிறார்.

# ஆசிய பணக்காரர்கள் பட்டியலில் கவுதம் அதானி முதலிடம்

புதுடெல்லி, ஏப். 18–

ஆசியாவின் பெரும் பணக்காரர் வரிசையில் தொழிலதிபர் கவுதம் அதானி முதலிடத்துக்கு முன்னேறி யுள்ளார்.

புளூம்பெர்க் பில்லியனர் இன் டெக்ஸ் நேற்று வெளியிட்டுள்ள அறிக் கையின் படி, முதல் இடத்தில் நீண்ட காலமாக இருந்து வந்த முகேஷ் அம் பானியை பின்னுக்குத் தள்ளி கவுதம் அதானி தற்போது ஆசியாவின் மிகப் பெரிய பணக்காரராக உயர்ந்துள்ளார்.

கவுதம் அதானியின் நிகர சொத்து மதிப்பு 92.6 பில்லியன் அமெரிக்க டாலர்களைத் தொட்டுள்ளது. இதன் மூலம் ஆசிய அளவில் முதலிடத் தையும், உலக அளவில் அவர் 19வது இடத்தையும் பெற்றுள்ளார். அதே நேரத்தில் முகேஷ் அம்பானியின் சொத்து மதிப்பு 90.8 பில்லியன் டால ராக உள்ளது. இதனால் அவர் ஆசி யாவில் 2வது இடத்திலும், உலக அளவில் 20வது இடத்துக்கும் சரிந் துள்ளார். இரு வருக்கும் இடையே உள்ள வித்தியாசம் மிகக் குறைவு என் றாலும், இந்த மாற்றம் சந்தையின் தாக் கத்தை தெளிவாக காட்டியுள்ளது.

**சொத்து மதிப்பு 8.1 பில்லியன் டாலர்**

கவுதம் அதானியின் சொத்து மதிப்பு இந்த ஆண்டு மட்டும் 8.1 பில்லியன் டாலர்கள் அதிகரித்துள்ளது. இந்த வளர்ச்சிக்கு அவரது குழும நிறுவனங் களின் பங்குச்சந்தை செயல்பாடு முக் கியப் பங்கு வகிக்கிறது. சந்தையில் சரிவு ஏற்பட்ட நாட்களில் கூட அதானி குழும நிறு வனப் பங்குகள் சிறப் பான முன்னேற்றத்தில் உள்ளது. நேற் றைய ஒரு நாள் வர்த்தகத்தில் மட்டும் கவுதம் அதானி சொத்து மதிப்பு சுமார் 3.56 பில்லியன் டாலர்கள் உயர்ந்தது குறிப்பிடத்தக்கது.



# மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களில் சின்னம் பொருத்தும் பணி: நாகை கலெக்டர் ஆகாஷ் ஆய்வு

நாகை, ஏப்.18–

நாகப்பட்டினம் மாவட்டத்தில் உள்ள சட்டமன்றத் தொகுதிகளில் பயன்படுத்தப்படவுள்ள மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களில் வேட்பாளர் பெயர் மற்றும் சின்னங்கள் பொருத்தும் பணியினை மாவட்ட ஆட்சியர் ப.ஆகாஷ் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

நடைபெறவுள்ள 2026 சட்டமன்றப் பொதுத்தேர்தலை முன்னிட்டு, நாகப்பட்டினம் மாவட்டத்தில் தேர்தல் பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன. இதன் முக்கியக் கட்டமாக, வாக்குச்சாவடிகளுக்கு அனுப்பப்பட வேண்டிய மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களில் (EVM) வேட்பாளர்களின் வரிசை எண், பெயர் மற்றும் சின்னங்கள் அடங்கிய 'பேலட் பேப்பர்' (Ballot Paper) பொருத்தும் பணி இன்று தொடங்கியது.

நாகப்பட்டினம் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம் மற்றும் கீழ்வேளூர் வட்டாட்சியர் அலுவலகம் ஆகிய இடங்களில் நடைபெற்றுவரும் இப்பணிகளைத் தேர்தல் அலுவலரும், மாவட்ட ஆட்சியருமான ப.ஆகாஷ் நேரில் பார்வையிட்டார்.

அப்போது அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

வாக்குப்பதிவு இயந்திரங்களில் சின்னம் பொருத்தும் பணிகள் அனைத்தும் பலத்த போலீஸ் பாதுகாப்புடன், அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிப் பிரதிநிதிகள் மற்றும் வேட்பாளர்கள் முன்னிலையில் நடைபெறுகிறது. ஒவ்வொரு இயந்திரத்திலும் வேட்பாளர் விவரங்கள் சரியாக உள்ளதா என்பது உறுதி செய்யப்பட்டு, பாதுகாப்பு முத்திரைகளுடன் சீல் வைக்கப்படுகிறது. பின்னர் இவை பலத்த பாதுகாப்புடன் கூடிய காப்பு அறைகளில் (Strong Room) வைக்கப்படும் என கலெக்டர் தெரிவித்தார்.

இந்த ஆய்வின் போது, ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) கோ.அரங்கநாதன், நாகப்பட்டினம் வருவாய் கோட்டாட்சியர் ரா.சங்கர நாராயணன், கீழ்வேளூர் தேர்தல் நடத்தும் அலுவலர் த.இராஜேஸ்வரி மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.



# இராஜபாளையத்தில் துண்டுப் பிரசுரங்கள் மூலம் தேர்தல் விழிப்புணர்வு

விருதுநகர், ஏப்.18–

விருதுநகர் மாவட்டத்தில் 100 சதவீத வாக்குப்பதிவை உறுதி செய்யும் வகையில், சிவகாசி மற்றும் இராஜபாளையம் பகுதிகளில் ரங்கோலி கோலங்கள் மற்றும் துண்டுப் பிரசுரங்கள் மூலம் தேர்தல் விழிப்புணர்வு (SVEEP) நிகழ்ச்சிகள் சிறப்பாக நடைபெற்றன.

தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல் 2026 னை முன்னிட்டு, வாக்காளர்கள் அனைவரும் தங்களது ஜனநாயகக் கடமையை ஆற்றுவதை வலியுறுத்தி மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இதன் ஒரு பகுதியாக, 205சிவகாசி மற்றும் 202இராஜ பாளையம் சட்டமன்றத் தொகுதிகளில் விழிப்புணர்வுப் பணிகள் தீவிரப்படுத்த ப்பட்டுள்ளன.

சிவகாசி தொகுதியில் தேர்தல் களப்பணியாளர்கள் அனை வரும் ஒன்றிணைந்து, "எனது வாக்கு விற்பனைக்கு அல்ல" மற்றும் "ஜனநாயகக் கடமையை எவ்விதத் தடையுமின்றி ஆற்றுவேன்" என வாக்காளர் விழிப்புணர்வு உறுதிமொழியை ஏற்றுக்கொண்டனர்.

தொடர்ந்து, 100 சதவீத வாக்களிப்பின் அவசியத்தை விளக்கும் வகையில் வண்ணமயமான ரங்கோலி கோலங்கள் இடப்பட்டு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. மேலும், "என் வாக்கு, என் குரல்" என்ற வாசகம் அடங்கிய ஒட்டு வில்லைகள் (Sticker) பொது இடங்களிலும், வாகனங்களிலும் ஒட்டப்பட்டன.

இராஜபாளையம் மற்றும் சிவகாசி பகுதிகளில் பொதுமக்களுக்கு "என் வாக்கு விற்பனைக்கு அன்று" என்ற விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய துண்டுப் பிரசுரங்களை அதிகாரிகள் வழங்கினர். இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சிகளின் மூலம், நேர்மையான முறையில் அனைவரும் வாக்களிக்க வேண்டியதன் அவசியத்தை மாவட்ட நிர்வாகம் வலியுறுத்தியுள்ளது.


## ஸ்ரீராம் பைனான்ஸ் லிமிடெட்

SHRIRAM Finance

Corporate Identity No. (CIN) L65191TN1979PLC007874

பதிவு அலுவலகம்: ஸ்ரீ டவர்ஸ், மனை எண் 14ஏ, சவுத் பேஸ், தொழில்பேட்டை, கிண்டி, சென்னை 600 032, தமிழ்நாடு, இந்தியா

Tel: +91-44-48524666, Fax: +91-44-48525666, Toll free No. : 18001034959

Email id: customersupport@shriramfinance.in. Website: www.shriramfinance.in

### இந்தியாவில் வசிக்கும் தனிநபர் மற்றும் தனிநபர் அல்லாதவர்களுக்கு ரூ. 10 கோடி வரையிலான புதிய டெபாசிட்டுகள் / புதுப்பித்தல்களுக்கான வட்டி விகிதங்கள் (6 மே 2026 முதல்) ★ # @ $

| காலம் (மாதங்கள்) | ஒட்டுமொத்த டெபாசிட் | ஒட்டுமொத்தம் அல்லாத டெபாசிட் | | | |
|---|---|---|---|---|---|
| | முதிர்வில் ஆண்டுக்கு % | மாதாந்திரம் ஆண்டுக்கு % | காலாண்டு ஆண்டுக்கு % | அரையாண்டு ஆண்டுக்கு % | ஆண்டு ஆண்டுக்கு % |
| 12 | 6.75 | 6.55 | 6.59 | 6.64 | 6.75 |
| 15 (டிஜிட்டலில் மட்டும்) | 7.05 | 6.83 | 6.87 | 6.93 | 7.05 |
| 18 - 23 | 7.00 | 6.79 | 6.82 | 6.88 | 7.00 |
| 24 - 35 | 7.05 | 6.83 | 6.87 | 6.93 | 7.05 |
| 36 - 60 | 7.25 | 7.02 | 7.06 | 7.12 | 7.25 |

★ வட்டி விகிதங்கள் இரண்டு தசம இடங்களுக்கு முழுமையாக்கப்படுகின்றன.

# மூத்த குடிமக்களுக்கு ஆண்டுக்கு 0.50% கூடுதல் வட்டி வழங்கப்படும். (டெபாசிட்/புதுப்பித்தல் தேதியன்று 60 ஆண்டுகள் பூர்த்தி அடைந்திருக்க வேண்டும்)

@ டெபாசிட் முதிர்வு பெற்ற அனைத்து புதுப்பித்தல்களுக்கும் ஆண்டுக்கு 0.15% கூடுதல் வட்டி

$ பெண் டெபாசிட்தாரர்களுக்கு ஆண்டுக்கு 0.05% கூடுதல் வட்டி வழங்கப்படும்.

மேற்கண்ட கூடுதல் வட்டி விகிதங்கள் வருடாந்திர வட்டி விகிதத்தில் பயன்படுத்தப்படும், மேலும் இது மாதாந்திர, காலாண்டு மற்றும் அரையாண்டு உள்ளிட்ட ஒரு வருடத்திற்கும் குறைவான காலங்களுக்கான கூட்டு வட்டி கணக்கீடுகளிலும் அதற்கேற்ப கணக்கில் கொள்ளப்படும்.

வட்டி வழங்கப்படும் தேதிக்கு ஒரு மாதத்திற்கு முன்னதாக டெபாசிட் செய்யப்பட்டால் அல்லது செயல்படுத்தப்பட்டால், அந்தப் பகுதி காலத்திற்கான வட்டியானது, இடைப்பட்ட காலத்திற்கான எந்தவொரு தாமத வட்டியும் இல்லாமல் அடுத்த வட்டி வழங்கப்படும் தேதியில் சேர்த்து வழங்கப்படும்.

ஒரு டெபாசிட்டிற்கு ரூ.10 கோடிக்கு மேல் செய்யப்படும் டெபாசிட்டிற்கான வட்டி விகிதமானது வெளியிடப்பட்ட வட்டி விகித அட்டவணையிலிருந்து மாறுபடலாம், ஆனால் அது இந்திய ரிசர்வ் வங்கியால் (RBI) குறிப்பிடப்பட்ட வட்டி விகித உச்சவரம்பிற்கு உட்பட்டதாகவே இருக்கும். எந்தவொரு முதலீட்டையும் செய்வதற்கு முன்பாக, அத்தகைய டெபாசிட்களுக்கு நடைமுறையில் உள்ள வட்டி விகிதங்களைச் சரிபார்த்துக் கொள்ளுமாறு டெபாசிட்தாரர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

### இந்தியாவில் வசிக்காத தனிநபர்களுக்கு ரூ. 10 கோடி வரை புதிய டெபாசிட்டுகள்/ புதுப்பித்தல்களுக்கான வட்டி விகிதங்கள் (6 மே 2026 முதல்) ★ # @ $

| காலம் (மாதங்கள்) | ஒட்டுமொத்த டெபாசிட் | ஒட்டுமொத்தம் அல்லாத டெபாசிட் | | | |
|---|---|---|---|---|---|
| | முதிர்வில் ஆண்டுக்கு % | மாதாந்திரம் ஆண்டுக்கு % | காலாண்டு ஆண்டுக்கு % | அரையாண்டு ஆண்டுக்கு % | ஆண்டு ஆண்டுக்கு % |
| 12 | 6.75 | 6.55 | 6.59 | 6.64 | 6.75 |
| 18 - 23 | 7.00 | 6.79 | 6.82 | 6.88 | 7.00 |
| 24 - 35 | 7.05 | 6.83 | 6.87 | 6.93 | 7.05 |
| 36 | 7.25 | 7.02 | 7.06 | 7.12 | 7.25 |

★ வட்டி விகிதங்கள் இரண்டு தசம இடங்களுக்கு முழுமையாக்கப்படுகின்றன.

# மூத்த குடிமக்களுக்கு ஆண்டுக்கு 0.50% கூடுதல் வட்டி வழங்கப்படும். (டெபாசிட்/புதுப்பித்தல் தேதியன்று 60 ஆண்டுகள் பூர்த்தி அடைந்திருக்க வேண்டும்)

@ டெபாசிட் முதிர்வு பெற்ற அனைத்து புதுப்பித்தல்களுக்கும் ஆண்டுக்கு 0.15% கூடுதல் வட்டி

$ பெண் டெபாசிட்தாரர்களுக்கு ஆண்டுக்கு 0.05% கூடுதல் வட்டி வழங்கப்படும்.

மேற்கண்ட கூடுதல் வட்டி விகிதங்கள் வருடாந்திர வட்டி விகிதத்தில் பயன்படுத்தப்படும், மேலும் இது மாதாந்திர, காலாண்டு மற்றும் அரையாண்டு உள்ளிட்ட ஒரு வருடத்திற்கும் குறைவான காலங்களுக்கான கூட்டு வட்டி கணக்கீடுகளிலும் அதற்கேற்ப கணக்கில் கொள்ளப்படும்.

வட்டி வழங்கப்படும் தேதிக்கு ஒரு மாதத்திற்கு முன்னதாக டெபாசிட் செய்யப்பட்டால் அல்லது செயல்படுத்தப்பட்டால், அந்தப் பகுதி காலத்திற்கான வட்டியானது, இடைப்பட்ட காலத்திற்கான எந்தவொரு தாமத வட்டியும் இல்லாமல் அடுத்த வட்டி வழங்கப்படும் தேதியில் சேர்த்து வழங்கப்படும்.

ஒரு டெபாசிட்டிற்கு ரூ.10 கோடிக்கு மேல் செய்யப்படும் டெபாசிட்டிற்கான வட்டி விகிதமானது வெளியிடப்பட்ட வட்டி விகித அட்டவணையிலிருந்து மாறுபடலாம், ஆனால் அது இந்திய ரிசர்வ் வங்கியால் (RBI) குறிப்பிடப்பட்ட வட்டி விகித உச்சவரம்பிற்கு உட்பட்டதாகவே இருக்கும். எந்தவொரு முதலீட்டையும் செய்வதற்கு முன்பாக, அத்தகைய டெபாசிட்களுக்கு நடைமுறையில் உள்ள வட்டி விகிதங்களைச் சரிபார்த்துக் கொள்ளுமாறு டெபாசிட்தாரர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

**டெபாசிட்டுகளை ஏற்றுக்கொள்வதற்கான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்**

- மேற்கூறிய அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள திருத்தப்பட்ட வட்டி விகிதங்களில், புதிய டெபாசிட்கள் மற்றும் நிரந்தர டெபாசிட்களை (Fixed Deposits) புதுப்பிப்பதற்கான விண்ணப்பங்களை, மே 6, 2026 முதல் மறு அறிவிப்பு வரும் வரை நிறுவனம் ஏற்றுக்கொள்ளும்.
- இந்த விளம்பரமானது, வங்கிசாரா நிதி நிறுவனங்கள் மற்றும் இதர வங்கிசாரா நிறுவனங்கள் (விளம்பர) விதிகள் 1977ன் படி, ஆகஸ்ட் 1, 2025 மற்றும் ஏப்ரல் 11, 2026 ஆகிய தேதிகளில் 'பைனான்சியல் எக்ஸ்பிரஸ்' மற்றும் 'மக்கள் குரல்' ஆகிய நாளிதழ்களில் நிறுவனத்தால் வெளியிடப்பட்ட சட்டப்பூர்வ விளம்பரத்தின் தொடர்ச்சியாகும். இந்த விளம்பரத்தின் முழுவிவரமும் அனைத்து விண்ணப்பப் படிவங்களிலும் அச்சிடப்பட்டுள்ளது, நிறுவனத்தின் நிரந்தர வைப்பீட்டுத் திட்டத்தில் முதலீடு செய்வதற்கு முன் அதனைப் படித்துத் தெரிந்து கொள்ளலாம்.
- நிரந்தர டெபாசிட் திட்டத்தின் பிற விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் மாற்றமின்றி தொடரும்.

ஸ்ரீராம் பைனான்ஸ் லிமிடெட்டுக்காக
ஒப்பம்/-
பராக் சர்மா
நிர்வாக இயக்குனர் & தலைமை செயல் அதிகாரி
(DIN: 02916744)

இடம் : மும்பை
தேதி : ஏப்ரல் 17, 2026




நாகப்பட்டினம் சட்டமன்ற தொகுதி அ.தி.மு.க.வேட்பாளர் தங்க கதிரவன், திருமருகல் ஒன்றியத்தில் கோட்டூர், ராதாதி மங்களம், வடகரை, ஆண்டிப் பந்தல் ஆகிய பகுதிகளில் தீவிர வாக்கு சேகரித்தார். உடன், திருமருகல் ஒன்றிய செயலாளர் ராதாகிருட்டிணன், பக்கிரிசாமி திருமேனி, அபுல் சாலிஹ் மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் உடன் இருந்தனர். இதுபோல், நாகை நகர் பகுதியில் பல்வேறு வார்டுகளில் ஆதரவாளர்கள் மற்றும் கூட்டணி கட்சியினருடன் வாக்கு சேகரித்தார். வேட்பாளர் வழக்கறிஞர் தங்க கதிரவன் போகும் இடம் எல்லாம் வாக்காளர்கள் ஆராத்தி எடுத்தும், மாலை அணிவித்தும் வரவேற்றனர்.



# விளாத்திகுளம் அருகே சட்டவிரோத புகையிலை விற்பனை: 3 பேர் கைது

தூத்துக்குடி, ஏப்.18–

தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் அருகே சட்டவிரோத விற்பனைக்காக105கிலோ தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்களைப் பதுக்கி வைத்திருந்த 3 பேரை போலீசார் கைது செய்துள்ளனர்.

தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட விருசம்பட்டி பகுதியில் சட்டவிரோத புகையிலை விற்பனை நடைபெறுவதாக போலீசாருக்கு ரகசியத் தகவல் கிடைத்தது. இதனடிப்படையில், உதவி ஆய்வாளர் நாராயணன் தலைமையிலான போலீசார் அப்பகுதியில் தீவிர ரோந்து பணியில் ஈடுபட்டனர்.

அப்போது சந்தேகத்திற்கிடமான வகையில் நின்றிருந்த மூன்று நபர்களைப் பிடித்து விசாரணை செய்ததில், அவர்கள் அதே பகுதியைச் சேர்ந்தவர்களான மாரிமுத்து (38), ராஜ் (28) மற்றும் குளத்துரைச் சேர்ந்த சுரேந்திரன் (32) ஆகியோர் என்பதும் அவர்கள் சட்டவிரோத விற்பனைக்காக தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்களை பதுக்கி வைத்திருந்ததும் தெரிய வந்தது. அதனையடுத்து போலீசார் அவர்கள் 3 பேரையும் கைது செய்து அவர்களிடமிருந்த சுமார் 105 கிலோ 650 கிராம் தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்களையும் பறிமுதல் செய்தனர். மேலும் இதுகுறித்து விளாத்திகுளம் காவல் நிலைய போலீசார் வழக்குபதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.


## ஸ்ரீராம் பைனான்ஸ் லிமிடெட்

SHRIRAM Finance

Corporate Identity No. (CIN) L65191TN1979PLC007874

பதிவு அலுவலகம்: ஸ்ரீ டவர்ஸ், மனை எண் 14ஏ, சவுத் பேஸ், தொழில்பேட்டை, கிண்டி, சென்னை 600 032, தமிழ்நாடு, இந்தியா

Tel: +91-44-48524666, Fax: +91-44-48525666, Toll free No. : 18001034959

Email id: customersupport@shriramfinance.in. Website: www.shriramfinance.in

### நிலையான முதலீட்டுத் திட்டத்திற்கான (FIP) வட்டி விகிதங்கள் (6 மே 2026 முதல்) ★#

| FIP வட்டி விகிதங்கள்★# | |
|---|---|
| 12– 23 தவணை | ஆண்டுக்கு 6.75% |
| 24– 35 தவணை | ஆண்டுக்கு 7.05% |
| 36– 48 தவணை | ஆண்டுக்கு 7.25% |

★ வட்டி விகிதங்கள் இரண்டு தசம இடங்களுக்கு முழுமையாக்கப்படுகின்றன.

# பெண் டெபாசிட்தாரர்களுக்கு ஆண்டுக்கு 0.05% கூடுதல் வட்டி வழங்கப்படும்.

மேற்கண்ட கூடுதல் வட்டி விகிதங்கள் வருடாந்திர வட்டி விகிதத்தில் பயன்படுத்தப்படும், மேலும் இது மாதாந்திர, காலாண்டு மற்றும் அரையாண்டு உள்ளிட்ட ஒரு வருடத்திற்கும் குறைவான காலங்களுக்கான கூட்டு வட்டி கணக்கீடுகளிலும் அதற்கேற்ப கணக்கில் கொள்ளப்படும்.

**வைப்பீடுகளை (டெபாசிட்டுகளை) ஏற்றுக்கொள்வதற்கான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்**

- மேற்கூறிய அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள திருத்தப்பட்ட வட்டி விகிதத்தில், நிலையான முதலீட்டுத் திட்டத்தின் (Fixed Investment Plan– FIP) கீழ் புதிய வைப்பீடுகளுக்கான விண்ணப்பங்களை, மே 6, 2026 முதல் மறு அறிவிப்பு வரும் வரை நிறுவனம் ஏற்றுக்கொள்ளும்.
- இந்த விளம்பரமானது, வங்கிசாரா நிதி நிறுவனங்கள் மற்றும் இதர வங்கிசாரா நிறுவனங்கள் (விளம்பர) விதிகள் 1977ன் படி, ஆகஸ்ட் 1, 2025 மற்றும் ஏப்ரல் 11, 2026 ஆகிய தேதிகளில் 'பைனான்சியல் எக்ஸ்பிரஸ்' மற்றும் 'மக்கள் குரல்' ஆகிய நாளிதழ்களில் நிறுவனத்தால் வெளியிடப்பட்ட சட்டப்பூர்வ விளம்பரத்தின் தொடர்ச்சியாகும். இந்த விளம்பரத்தின் முழுவிவரமும் அனைத்து விண்ணப்பப் படிவங்களிலும் அச்சிடப்பட்டுள்ளது, நிறுவனத்தின் நிலையான முதலீட்டுத் திட்டத்தில் (FIP) முதலீடு செய்வதற்கு முன் அதனைப் படித்துத் தெரிந்து கொள்ளலாம்.
- நிலையான முதலீட்டுத் திட்டத்தின் (FIP) பிற விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் மாற்றமின்றி தொடரும்.

ஸ்ரீராம் பைனான்ஸ் லிமிடெட்டுக்காக
ஒப்பம்/-
பராக் சர்மா
நிர்வாக இயக்குனர் & தலைமை செயல் அதிகாரி
(DIN: 02916744)

இடம் : மும்பை
தேதி : ஏப்ரல் 17, 2026



## வாஸ்து ஹவுசிங் பைனான்ஸ் கார்ப்பரேஷன் லிமிடெட்

VASTU HOUSING FINANCE

பதிவு அலுவலகம்: யூனிட் எண். –203 & 204, 2வது தளம், ஏ விங், நவ்பாரத் எஸ்டேட், ஜக்காரியா பண்டர் மார்க் சாலை, செவ்ரி (மேற்கு), மும்பை –400 015, மகாராஷ்டிரா

CIN No.: U65922MH2005PLC272501

### அசையாச் சொத்தை விற்பனை செய்வதற்கான அறிவிப்பு

2002–ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் பாதுகாப்பு நலன் (அமலாக்கம்) விதிகள், 2002ன் விதி 8(6)ன் கீழ் அசையா சொத்துக்கள் விற்பனைக்கான இ–ஏல விற்பனை அறிவிப்பு. கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையா சொத்துக்கள் ஈடுபெற்ற கடன் வழங்கியவரிடம் அடமானம் வைக்கப்பட்டுள்ளன, அவை வாஸ்து ஹவுசிங் பைனான்ஸ் கார்ப்பரேஷன் லிமிடெட்டின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் அடையாள சுவாதீனம் செய்யப்பட்டு இனி அவை வாஸ்து ஹவுசிங் பைனான்ஸ் கார்ப்பரேஷன் லிமிடெட் என குறிப்பிடப்படும் என்று பொது மக்களுக்கு பொதுவாகவும் கடன்தாரர்/உடன் கடன்தாரர்/அடமானதாரர் ஆகியோருக்கு குறிப்பாகவும் இதன்மூலம் தெரிவிக்கப்படுகிறது. ஈடுபெற்ற ஆஸ்திகள் "உள்ளது உள்ளபடி", "எப்படி உள்ளதோ அப்படியே" மற்றும் "என்ன உள்ளதோ" அதன் அடிப்படையில் இ–ஏலம் மூலம் விற்பனை செய்யப்பட உள்ளது. பொதுமக்களுக்கு இதன்மூலம் அறிவிக்கப்படுவது என்னவென்றால், நாங்கள் https://sarfaesi.auctiontiger.net என்ற இணையதளம் வழியாக பொது இ—ஏலத்தை நடத்த உள்ளோம்.

| வ. எண் | கடன் கணக்கு எண் மற்றும் கடன்தாரர்/ உடன் கடன்தாரர்/ அடமானதாரர் பெயர் | தேதி & 13(2)ன் கீழ் கோரிக்கை அறிவிப்பின்படி தொகை & அடையாள சுவாதீனத் தேதி | சொத்து குறித்த விவரம்/சொத்துக்கள் | குறைந்தபட்ச விலை, டேவணித் தொகை டெபாசிட் (ரூ.) | இ–ஏலத் தேதி மற்றும் நேரம், டேவணித் தொகை சமர்ப்பிக்கும் கடைசித் தேதி, பார்வையிடும் தேதி |
|---|---|---|---|---|---|
| 1 | LP0000000190534 மாரி (கடன்தாரர்) சத்யா (உடன் கடன்தாரர்) | கேட்பு அறிவிப்புத் தேதி 20 ஜூன் 25 மற்றும் 11 ஜூன் 25 அன்றைய நிலவரப்படி தொகை ரூ.1002430/– + வட்டி, செலவுகள் முதலியன மற்றும் 28 ஜனவரி 26 | 5/4b, கிருஷ்ணன் கோவில் தெரு, கிருஷ்ணாபுரம், திருநெல்வேலி, பள்ளிக்கூடம் அருகில், கடையநல்லூர், தென்காசி, தமிழ்நாடு – 627759. சொத்தின் பரப்பளவு: 503 சதுர அடி. | ரூ.1351313/- ரூ.135131/- | 19-05-2026 நேரம் காலை 10:00 முதல் பகல் 12.00 மணி வரை, 18-05-2026 மாலை 5:00 மணி வரை. 02-05-2026 |
| 2 | HL0000000119097 சிவகாமி முருகன் (கடன்தாரர்), முருகன் கோட்டைசாமி (உடன் கடன்தாரர்), விக்னேஷ்வரன் முருகன் (உடன் கடன்தாரர்) | கேட்பு அறிவிப்புத் தேதி 14 நவம்பர் 25 மற்றும் 12 நவம்பர் 25 அன்றைய நிலவரப்படி தொகை ரூ.1486241/– + வட்டி, செலவுகள் முதலியன மற்றும் 20 பிப்ரவரி 26 | மதுரை மாவட்டம், மதுரை வடக்கு பதிவு மாவட்டம், அலங்காநல்லூர் சார் பதிவு அலுவலகம், வாடிப்பட்டி வட்டம், அலங்காநல்லூர் கிராமம், மறு சர்வே எண் 68/2 ல் உள்ள 1 ஏக்கர் 14 செண்ட் நிலத்தில், நடுவில் உள்ள 945 1/2 சதுர அடி பரப்பளவுள்ள பகுதி, தற்போது மறு சர்வே எண் 68/24 என உட்பிரிவு செய்யப்பட்டு, ஒரு வீட்டுக் கட்டிடத்துடன் உள்ளது. | ரூ.1704675/- ரூ.170467/- | 19-05-2026 நேரம் காலை 10:00 முதல் பகல் 12.00 மணி வரை, 18-05-2026 மாலை 5:00 மணி வரை. 02-05-2026 |

1. ஆர்வமுள்ள அனைத்து பங்கேற்பாளர்களும் / ஏலதாரர்களும் https://sarfaesi.auctiontiger.net என்ற இணையதளத்தைப் பார்வையிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இ-ஏல விவரங்கள், உதவி, செயல்முறை மற்றும் ஆன்லைன் பயிற்சிக்கு வருங்கால ஏலதாரர்கள் M/s. இ-ப்ரொக்யர்மெண்ட் டெக்னாலஜிஸ் பிரைவேட் லிமிடெட் (ஆக்ஷன்டைகர்); முகவரி : தலைமை அலுவலகம்: B 705, வால் ஸ்ட்ரீட் II, ஒரியண்ட் கிளப் எதிரில், குஜராத் கல்லூரிக்கு அருகில், எல்லிஸ் பாலம், அகமதாபாத் 380 006 குஜராத் (இந்தியா). தொடர்பு கொள்ள வேண்டிய நபர்: திரு. ராம் சர்மா தொடர்பு எண்: 8000023297/9265562818/9265562821/079-68136842/6869. மின்னஞ்சல் முகவரி: ramprasad@auctiontiger.net , support@auctiontiger.netல் தொடர்பு கொள்ளலாம்.
2. இ - ஏலத்தில் பங்கேற்பதற்கான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் பற்றிய கூடுதல் விவரங்களுக்கு தயவுசெய்து https://sarfaesi.auctiontiger.net–ஐ பார்வையிடவும்
3. சொத்து குறித்த கூடுதல் விவரங்களுக்கு, அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியைத் தொடர்பு கொள்ளவும்: அழலடி என்/வெங்கடேசன் கணேசன் தொடர்பு எண். 9894949444/9962666858

**பாதுகாப்பு நல (அமலாக்கம்) விதிகள், 2002ன் விதி 8(6)ன் கீழ் இது ஒரு சட்டப்பூர்வ 30 நாட்கள் விற்பனை அறிவிப்பும் ஆகும்.**

தேதி : 18.04.2026
இடம் : தென்காசி, மதுரை

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
வாஸ்து ஹவுசிங் பைனான்ஸ் கார்ப்பரேஷன் லிமிடெட்



## இந்தியா எஸ்எம்இ அசெட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி லிமிடெட்

isarc

பதிவு அலுவலகம்: தி ரூபி, 11வது தளம், வட மேற்குப் பிரிவு, மனை எண் 29, சேனாபதி பாபட் மார்க், தாதர் (மேற்கு), மும்பை – 400028.

### சுவாதீனம் அறிவிப்பு [சொத்து மீதான உரிமை (அமலாக்க) விதிகள், 2002–ன் விதி 8(2)]

கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன்தாரர்கள்/ உடன் கடன்தாரர்கள்/ உத்தரவாததாரர்கள்/ அடமானதாரர்கள் பெட்பேங்க் பைனான்சியல் சர்வீசஸ் லிமிடெட்டில் ("ஆரம்பத்தில் கடன் வழங்கியவர்") இருந்து நிதி உதவியைப் பெற்றுள்ளனர். மேற்கூறிய கடன், அதனுடன் தொடர்புடைய அனைத்துப் பிணையப் பாதுகாப்பு உரிமைகள் மற்றும் அசல் ஆரம்பத்தில் கடன் வழங்கியவரின் அனைத்து உரிமைகள், பாத்தியதை மற்றும் நலன்களுடன் சேர்த்து, SARFAESI சட்டம், 2002–ன் விதிகளின் கீழ், செப்டம்பர் 26, 2025ஆம் தேதியிட்ட உரிமை மாற்ற ஒப்பந்தத்தின் மூலம், ISARC–2025–2026–3 டிரஸ்டின் அறங்காவலராகச் செயல்படும் **இந்தியா எஸ்எம்இ அசெட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி லிமிடெட்டிற்கு** ("ISARC") ஆரம்பத்தில் கடன் வழங்கியவரால் உரிமை மாற்றம் செய்யப்பட்டது.

அதேசமயம், 2002ம் வருடத்திய கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டத்தின் கீழும், மேற்சொன்ன சட்டத்தின் 13(12)வது பிரிவின் கீழ் அளிக்கப்பட்ட அதிகாரத்தின்படியும், 2002ம் வருடத்திய கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்க) விதி 3–ன் விதிமுறைக்கு இணங்கவும், **இந்தியா எஸ்எம்இ அசெட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி லிமிடெட்டின்** ("ISARC") கீழ்க்கையொப்பமிட்ட அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, கடன்தாரர்கள்/ உடன் கடன்தாரர்கள்/ உத்தரவாததாரர்கள்/ அடமானதாரர்கள் ஆகியோருக்கு அனுப்பிய டிமாண்ட் நோட்டீசில் குறிப்பிடப்பட்டிருந்தபடி செலுத்த வேண்டிய தொகை மற்றும் அறிவிப்பில் கண்டுள்ள வட்டி தொகை ஆகியவற்றை மேற்சொன்ன நோட்டீஸ் பெறப்பட்ட 60 நாட்களுக்குள் திரும்ப செலுத்துமாறு கேட்டுக் கொண்டிருந்தார்.

கடன்தாரர்கள்/ உடன் கடன்தாரர்களுக்கு வழங்கப்பட்ட மேற்கண்ட அறிவிப்பில் கண்டுள்ள முழு தொகை, கூடுதல் வட்டி மற்றும் இதர கட்டணங்களை திரும்ப செலுத்தத் தவறியதால், அவர்களுக்கு குறிப்பாகவும் மற்றும் பொதுமக்களுக்கு பொதுவாகவும் அறிவிக்கப்படுவது யாதெனில், கீழே கையொப்பமிட்டுள்ளவர் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்தை 2002ம் வருடத்திய கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்க) சட்டத்தின் 13(4) பிரிவின் கீழும், மேற்சொன்ன விதிமுறைகளின் 8வது விதிமுறைக்கு இணங்கவும் கீழ்க்கண்ட தேதியில் **சுவாதீனம்** எடுத்துக் கொண்டார்.

**இந்தியா எஸ்எம்இ அசெட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி லிமிடெட்டிற்கு** ("ISARC") திரும்ப செலுத்த வேண்டிய தொகைக்கு இந்த சொத்து ஈடாக இருப்பதால், இந்த சொத்தில் யாரும் எந்தவித டீலிங்குகளையோ, பரிவர்த்தனைகளையோ வைத்துக் கொள்ளக்கூடாது என்று கடன்தாரர்கள்/ உடன் கடன்தாரர்களுக்கு குறிப்பாகவும், பொதுமக்களுக்கு பொதுவாகவும் எச்சரிக்கப்படுகிறது.

ஈடுபெற்ற சொத்துக்களை மீட்பதற்கு கிடைக்கக்கூடிய கால அவகாசம் குறித்து, சட்டத்தின் 13வது பிரிவின் உட்பிரிவு (8)ன் விதிமுறைகளுக்கு இணங்க கடன்தாரர்/உடன் கடன்தாரர்கள்/அடமானதாரர்களுக்கு அழைப்பு விடுக்கப்படுகிறது.

| வ எண் | கடன் கணக்கு எண்./ கடன்தாரர்/ உடன் கடன்தாரர் பெயர் | கோரிக்கை அறிவிப்பு தேதி | சுவாதீனத் தேதி/ சுவாதீன நிலை | கோரிக்கை அறிவிப்பு தேதியில் நிலுவைத் தொகை ரூ. | சொத்துக்களின் விவரம் |
|---|---|---|---|---|---|
| 1 | FEDPALSTL0515177 நாகராசு M & பாநுமதி M | 02.01.2026 | 17.04.2026 அடையாள சுவாதீனம் | ரூ.13,80,400/– (ரூபாய் பதிமூன்று லட்சத்து எண்பதாயிரத்து நானூறு மட்டும்) | புதுக்கோட்டை மாவட்டம் மற்றும் பதிவு மாவட்டம், குளத்தூர் சார் பதிவாளர் அலுவலகம், குளத்தூர் தாலுக்கா, கீழையூர் கிராமம், சர்வே எண் 178/14 – 0.03.0 ஏர்ஸ் விஸ்தீரணம் கொண்ட நிலச் சொத்தின் அனைத்து பகுதி மற்றும் துண்டுகளும். இதன் எல்லைகள்: வடக்கே – கீரனூர் செல்லும் தார் சாலை, கிழக்கே – சேதுராமன் சொத்து, தெற்கே – மூக்கையா நிலம், மேற்கே – ரவி மற்றும் பிரபு வீடு. |

தேதி : 18.04.2026 | இடம் : தமிழ்நாடு

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, இந்தியா எஸ்எம்இ அசெட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி லிமிடெட்



# கல்வி சார்ந்த கோரிக்கைகளை வைத்த பள்ளி, கல்லூரி மாணவிகள்: வெற்றி பெற்றதும் கோரிக்கைகளை நிறைவேற்றுவேன்; வேட்பாளர் பி.கே.வைரமுத்து உறுதி

புதுக்கோட்டை, ஏப். 18–

திருமயம் சட்டமன்றத் தொகுதியை முன்மாதிரி தொகுதியாக மாற்றத் தேவையான அனைத்து நடவடிக்கை களையும் மேற்கொள்வேன் என்று அஇஅதிமுக வேட்பாளர் பி.கே. வைரமுத்து தெரிவித்துள்ளார்.

புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் தொகுதிக்கு உட்பட்ட நமணசமுத்திரம், தேக்காட்டூர், பெருங்குடி, கடையக்குடி உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் தேசிய ஜனநாயகக் கூட்டணியின் அஇஅதிமுக வேட்பாளர் பி.கே. வைரமுத்து தீவிர வாக்குச் சேகரிப்பில் ஈடுபட்டார். அவர் பிரச்சாரம் மேற்கொண்ட இடங்களிலெல்லாம் அப்பகுதி மக்கள் திரண்டு வந்து, கடந்த காலங்களில் தங்கள் பகுதியில் நிறைவேற்றப்படாத அடிப்படை வசதிகள் மற்றும் பல்வேறு தேவைகள் குறித்த கோரிக்கை மனுக்களை அவரிடம் வழங்கினர். குறிப்பாக, பள்ளி மற்றும் கல்லூரி மாணவிகள் தங்களது கல்வி சார்ந்த தேவைகளைச் சட்டமன்ற உறுப்பினரான பின்பு நிறைவேற்றித் தர வேண்டும் என்று உரிமையோடு மனு அளித்தனர்.

பொதுமக்களிடம் இருந்து மனுக்களை ஆர்வமுடன் பெற்றுக்கொண்ட பி.கே. வைரமுத்து, மக்களின் குறைகளைக் கேட்டறிந்தார். பின்னர் அவர் பேசுகையில், தான் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக் கப்பட்டதும் மக்களின் அனைத்துக் கோரிக்கைகளும் முன்னுரிமை அடிப்படையில் நிறைவேற் றப்படும் என்று உறுதி அளித்தார். அரிமளம் பகுதியில் புதிய தொழிற்பேட்டை மற்றும் அரசு கலைக் கல்லூரி அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், அப்பகுதியில் காகித தொழிற்சாலை கொண்டு வரப்படும் என்றும் அவர் வாக்குறுதி அளித்தார்.

மேலும், கடையக்குடியில் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் சமுதாயக் கூடம் அமைத்துக் கொடுக்கப்படும் என்றும், தொகுதியில் உள்ள அனைத்து கிராமங்களிலும் அடிப்படை வசதிகள் முழுமையாகக் கிடைக்கப் பாடுபடுவேன் என்றும் அவர் தெரிவித்தார். அமைச்சர் ரகுபதி பணத்தை நம்பித் தேர்தலில் நிற்பதாகவும், ஆனால் தான் மக்களை மட்டுமே நம்பித் தேர்தலில் போட்டியிடுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்த தேர்தல் பிரச்சாரத்தின்போது, மாநில அம்மா பேரவை துணைச் செயலாளர் ஏ.எல்.ராமு, ஒன்றிய செயலாளர் எஸ்.திலகர், கடையக்குடி முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர் இன்பவள்ளி திலகர் உள்ளிட்ட கூட்டணிக் கட்சிகளின் நிர்வாகிகள் மற்றும் அஇஅதிமுக பொறுப்பாளர்கள் உடனிருந்தனர்.

**திருவாரூர் மாவட்ட முதன்மை நீதிமன்றம் அவர்கள் சமூகத்திற்கு**
**அ.வ.எண். 82/2025 மற்றும்**
**இ.ம.எண்.4/2025 இன் அ.வ.எண். 82/2025**

சலாம் மெஹருன்னிசா அவருக்காக அவரது அதிகாரம் பெற்ற முகவர் முருகவேலு ...வாதி

எதிர்

5. ஜெகபர் சாதிக், த/பெ. லேட்.அப்துல்சலாம்
மெயின்ரோடு,
பாவட்டக்குடி & அஞ்சல் – 609 403,
நன்னிலம் தாலுக்கா,
திருவாரூர் மாவட்டம்.

...5ஆம் எதிர்மனுதாரர்/5ஆம் பிரதிவாதி

**அறிவிப்பு**

சமூகம் நீதிமன்றத்தில் மேற்படி வாதி தாக்கல் செய்த அசல் வழக்கு எண்.82/2025 மற்றும் இ.ம.எண்.4/2025 இன் அ.வ.எண்.82/2025 பற்றிய அறிவிப்பு 5ஆம் பிரதிவாதி/5 ஆம் எதிர்மனுதாரராகிய தங்களுக்கு நீதிமன்றம் மூலம் அனுப்பி சார்வு ஆகாததால் சமூகம் நீதிமன்றம் செய்தித்தாள் விளம்பரம் செய்ய உத்தரவிட்டுள்ளது. அதன்படி தாங்கள் வருகின்ற 03.06.2026 அன்று காலை 10.00 மணிக்கு சமூகம் நீதிமன்றத்தில் நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமாகவோ ஆஜராகி தங்கள் ஆட்சேபனையை தெரிவிக்க வேண்டியது. தவறும்பட்சத்தில் தங்களுக்கு எதிராக ஒருதலைப்பட்ச உத்தரவு பிறப்பிக்கப்படும் என்பதை கண்டிப்பாக அறியவும்.

**சொத்து விவரம்**

1. திருவாரூர் மாவட்டம், நன்னிலம் தாலுக்கா, தலையூர் வருவாய் கிராமம். நஞ்சை நிலங்கள்,
புல எண்கள்.85–6B ல் 0.43.50 ஏர்ஸ் பூரா, 89–1B ல் நஞ்சை 0.81.50 ஏர்ஸ் பூரா, 93–6 ல் 0.18.00 ஏர்ஸ் பூரா, 93–7 ல் 0.14.50 ஏர்ஸ் பூரா, 104–7 ல் 0.50.50 ஏர்ஸ், 99–6ல் 0.27.50 ஏர்ஸ் பூரா.
11. திருவாரூர் மாவட்டம், நன்னிலம் தாலுக்கா, பாவட்டக்குடி கிராமம், புஞ்சை நிலங்கள்,
புல எண்கள் 137–11 ல் 0.14.00 ஏர்ஸ் பூரா, 137–13 ல் 0.8.00 ஏர்ஸ் பூரா, 70–1 ல் 0.18.00 ஏர்ஸ் பூரா, 70–10B ல் 0.6.50 ஏர்ஸ் பூரா,
நஞ்சை நிலங்கள் புல எண்கள்.23–11 ல் 0.9.50 ஏர்ஸ் பூரா, 71–1B ல் 0.32.50 ஏர்ஸ் பூரா, 73–1 ல் 0.6.00 ஏர்ஸ் பூரா, 137–12 ல் 0.10.00 ஏர்ஸ் பூரா, 82–3 ல் 0.5.50 ஏர்ஸ் பூரா, 81–2B ல் 0.600 ஏர்ஸ் பூரா, 81–2E ல் 0.733 ஏர்ஸ் பூரா, 81–4 ல் 0.47.00 ஏர்ஸ் பூரா,
புஞ்சை நிலங்கள் புல எண்கள் 80/2W ல் ஏ 1.28 செண்ட் பூரா, 80/2T ல் 10 குழி பூரா (டிராக்டர் ஷெட்), 135/2 ல் 10 குழி பூரா, 75/5 ல் ஏ 1.11 செண்ட் பூரா, 80/2 ல் 7 செண்ட் பூரா, 135/2 ல் 0.0076 ஏர்ஸ் (R.C.C வீடு உள்பட)
மற்றும் இதில் விடுபட்டுள்ள என்னுடைய பெயரில் உள்ள இதர சொத்துக்கள், எனது தகப்பனார் பெயரில் உள்ள இதர சொத்துக்களுக்கும்.
III. திருவாரூர் மாவட்டம், நன்னிலம் தாலுக்கா, பில்லூர் கிராமம்,
புல எண். 379/2A புஞ்சை 1 ஏக்கர் 23 செண்ட். அதில் உள்ள மாஸ் திருமண மஹால், அல்சலாம் திருமண மஹால் ஆகிய இரண்டு திருமண மண்டபங்கள்.
IV. மயிலாடுதுறை மாவட்டம் & தாலுக்கா, பட்டமங்கலம் வட்டம், சீனிவாசபுரம், அண்ணாநகர் முதல் தெரு, புல எண். 225/7 (அல்லது) 225/7A மாஸ் மன்ஜில் 0.051 ஏர்ஸ் பூரா. அதிலுள்ள R.C.C வீடு உள்பட.
V. மயிலாடுதுறை மாவட்டம் & தாலுக்கா, பட்டமங்கலம் வட்டம், சீனிவாசபுரம், ராதாகிருஷ்ணன் தெரு, (ஜெரினாபானு)
புல எண். 197/4A மாஸ் பேலஸ் அதிலுள்ள R.C.C வீடு உள்பட.

**TPS. மணிகண்ணன், M.COM.,B.L...**
**வழக்கறிஞர்,**
**திருவாரூர்.**

**மாண்புமிகு புதுக்கோட்டை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் – I முன்பாக**
**S.T.C NO.585/2025**
**CRMP.NO.427/2026**

மங்கநாதன் வயது சுமார் 56/2026
த/பெ. பிச்சை குட்டி,
பிளாட் எண்1, பூஞ்சோலை நகர்.
இராஜகோபாலபுரம்
புதுக்கோட்டை டவுன் & மாவட்டம்
...புகார்தாரர்

கணேசன் வயது சுமார் 63/2026
த/பெ.வெத்தி
1/540, பாரதியார்நகர்,
மணப்பாறை, திருச்சி மாவட்டம்.
(காவல் ஆய்வாளர் மணப்பாறை காவல் நிலையம்)
...எதிரி

**அறிவிப்பு**

மேற்படி வழக்கில் புகார்தாரரான மங்கநாதன் மேற்படி வழக்கு எதிரியான கணேசனுக்கு எதிராக மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 138–ன் கீழ் காசோலை வழக்கை மேற்படி மாண்பமை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார். மேற்படி வழக்கில் தங்களுக்கு பலமுறை அழைப்பானை அனுப்பப்பட்டும் தங்களுக்கு சம்மன் சார்வு செய்யப்படாமல் இருந்துவந்தது. அதனால் சமூகம் நீதிமன்றத்தில் தங்களுக்கு சம்மன் சார்வு செய்வதற்காக மனு தாக்கள் செய்து அதில் சமூகம் நீதிமன்ற உத்தரவுக்கு இணங்க மேற்படி வழக்கில் தாங்கள் எதிர்வரும் **19.05.2026**ம் தேதி காலை **10.30** மணிக்கு நேரில் ஆஜராகி தங்கள் ஆட்சேபனையை தெரிவித்துக்கொள்ள வேண்டியது. தவறும் பட்சம் தங்களுக்கு எதிராக மேற்படி வழக்கு முடிவு செய்யப்படும் என்பதை அறியவும்.

**M.J.AMEER HUSSAIN, MA., B.L.,**
**ADVOCATE,**
**PUDUKKOTTAI-6220051**

## ராமியா, புளியடி, திம்மா, ஈஸ்வரி , குட்டி வகையறா தர்ம டிரஸ்ட், மதுரை.

## அவசர பொதுக்குழு கூட்டம்

**நாள்: 10.05.2026 ஞாயிறு நேரம்: காலை 10.30 மணி**

**இடம்: நமது மூன்று மாவடி மண்டபம், புதூர், மதுரை.**

1). நமது மண்டபம் கட்டுவதற்கு திரு.குட்டி பாலாவுடன் செய்து கொண்ட ஒப்பந்தம் பற்றி விவாதித்து முடிவு செய்வது சம்மந்தமாக

தேதி: 18.04.2026
இடம்: மதுரை.

**T.V.ஓம்நாத்**
கௌரவ செயலாளர்
மற்றும் நிர்வாகஸ்தர்கள்

## காணவில்லை

கடலூர் மாவட்டம், புவனகிரி வட்டம், தொட்டி மேடு, பு.முட்லூர் கிராமத்தைச் சேர்ந்த **புருஷோத்தமன் மகன் முருகன்** ஆகிய நான் எனது பெயரில் உள்ள அசல் பத்திரம் பரங்கிப்பேட்டை சார்பதிவாளர் அலுவலத்தில் பதிவான அசல் பத்திரம் ஆவண எண்:**(1713/2005) (R.S.No: 46/4)** நகல் எடுக்க கடந்த **2.04.2026ந்** தேதி எனது இருசக்கர வாகனத்தில் வைத்து பரங்கிப்பேட்டை கடைவீதிக்கு ஜெராக்ஸ் எடுக்க சென்ற போது அசல் பத்திரம் காணாமல் போய் விட்டது. இது தொடர்பாக பரங்கிப்பேட்டை காவல் நிலையத்தில் ஆன்லைனில் **OLC6012600011545** ஆக புகார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆவணத்தை எவரேனும் கண்டெடுத்தால் கீழ்கண்ட முகவரிக்கு தொடர்பு கொள்ள கேட்டுக் கொள்கின்றேன்.

**முருகன் த/பெ.புருஷோத்தமன்,**
**தொட்டி மேடு, பு.முட்லூர், புவனகிரி வட்டம்,**
**கடலூர் மாவட்டம்**
**செல்: 93859 70625.**

## பெயர் மாற்றம்

**சம்ஸ்நிஸா, க/பெ சேகு அப்துல் காதர்,** பிறந்த தேதி: 22/04/1972, எண். 3/16 வடக்குத்தெரு வல்லக்குளம் கடலாடி வட்டம், இராமநாதபுரம் ,தமிழ்நாடு, 623711, என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **சம்சுநிஸா என்று அழைக்கப்படுகிறேன்.**

**சம்ஸ்நிஸா**
**க/பெ சேகு அப்துல் காதர்,**

## NAME CHANGE

I, **NAYAN THAKKER RITAN S/o. NAYAN MULJITHAKKER** D.O.B: 11/01/1980, POB: MUMBAI RESIDING AT 213/2, VIKNESH NAGAR, KARUPPAYURANI, KALIKAPPAN, MADURAI RURAL - 625020 SHALL HENCEFORTH BE KNOWN AS **RITAN (S/o NAYAN THAKKER)**.

**NAYAN THAKKER RITAN**

## NAME CHANGE

I, **KASINATHAN SARANYA** BORN ON (Native District MADURAI) RESIDING NO.3/175 A, SEENIVASA COLONY, TATTANUR MADURAI Dt - 625019 TAMIL NADU SHALL HENCEFORTH BE KNOWN AS **SARANYA R.**

**KASINATHAN SARANYA.**

## பெயர் மாற்றம்

**KHOS MOHAMED** பிறந்த தேதி: 13.06.1973, எண்.70/1, மேல வடபுறம், அதிராம்பட்டிணம் அஞ்சல், பட்டுக்கோட்டை தாலுக்கா, தஞ்சாவூர் மாவட்டம். – 614701 என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **NIJAM MOHIDEEN S/O.MOHAMED NOORUDEEN** என்று அழைக்கப்படுகின்றேன்.

**KHOS MOHAMED**

## NAME CHANGE

**I, KANNAIYYAN, S/O. SOMASUNDARAM, D.O.B. 15.05.1976, P.O.B. Mahadevapattinam, Native District : Thiruvarur,** Residing at No.**412, Thanjirayar Street, Mahadevapattinam - Po, Mannargudi - Tk, Thiruvarur - Dt, Pin:614 018**. shall henceforth be known as **KANNAIYAN S/O. SOMASUNDARAM**

**KANNAIYYAN,**
**S/O.SOMASUNDARAM**

## NAME CHANGE

I, **ANBUSELVAN.B,** born on 17/05/2007 (Native District Sivagangai) Residing at No.38/5, Udhayam Nagar, 4th Street, Kalavaipottal, Karaikudi, Sivagangai District - 630001, Tamilnadu shall henceforth be Known as **ANBUSELVAN BOOMINATHAN.**

**ANBUSELVAN.B**

## NAME CHANGE

I, **PAULVENGADESAN** RESIDING at 1/51, NORTH STREET NAKKANNERY, AYAN KOLLANKONDAN (POST), RAJAPALAYAM (TALUK) - 626142 Virudhunagar (District) SHALL HENCEFORTH BE KNOWN AS **G PAUL VENKATESAN**

**PAULVENGADESAN**

## பெயர் மாற்றம்

**சேகு அப்துல்லா, த/பெ.முகம்மது இஸ்மாயில்,** பிறந்த தேதி: 02/02/1968, எண்.3/16 வடக்குத்தெரு, வல்லக்குளம் கடலாடி வட்டம், இராமநாதபுரம், தமிழ்நாடு – 623711, என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **சேகு அப்துல் காதர்** என்று அழைக்கப்படுகிறேன்.

**சேகு அப்துல்லா**
**த/பெ.முகம்மது இஸ்மாயில்**

## NAME CHANGE

MY SON OLD NAME **MUHAMAD ARSHAD S/O.NAJUMUDEEN** BORN ON 09/08/2008 AT KEERAMANGALAM RESIDING AT NO-9/4, PALLIVASAL STREET, KEERAMANGALAM, KASIMPUDUPETTAI - PO, ALANGUDI - TK, PUDUKKOTTAI - DIST - 614624 SHALL HENCE FORTH BE KNOWN AS **MOHAMED ARSHAD**

**NAJUMUDEEN**
**(FATHER)**

## NAME CHANGE

I, **VENKATRAMAN VENKATRAMANSHANKER S/o VENKATRAMAN,** D.O.B: 24/04/1970, POB: KOVILPATTI TIRUNELVELI residing at A1, FIRST FLOOR, MADURA APARTMENT, BHARATHI 2ND STREET, S S COLONY, MADURAI CITY - 625016 SHALL HENCEFORTH BE KNOWN AS **VENKATARAMAN V (S/o VENKATRAMAN).**

**VENKATRAMAN**
**VENKATRAMANSHANKER**

## NAME CHANGE

I, **AYYAPPAN S/O. NALLATHAMBI** D.O.B: 19.08.1985, Residing at No 32, Pathima Colony, Rayar Street, Orathanadu Post, Thanjavur District, Pincode - 614 625 Shall hence forth be Known as **IYYAPPAN S/O.NALLATHAMBI**

**AYYAPPAN**
**S/O.NALLATHAMBI**

## NAME CHANGE

I, **AYIP JAHAN D/O VARUSAI RAWUTHAR** BORN ON 03-07-1969 RESIDING AT NO:50 KOLLAMPATTARAI STREET, RAMANATHAPURAM DISTRICT 623504.WOULD HENCE FORTH KNOWN AS **AYUB JAHAAN V**

**AYIP JAHAN**

## NAME CHANGE

I, **AMINATHU BAHIMA** BORN ON 05/04/1986 (Native District RAMANATHAPURAM) RESIDING NO.15/58, KOKKA AHAMED STREET, KILAKARAI RAMANATHAPURAM -623517 TAMIL NADU SHALL HENCEFORTH BE KNOWN AS **AMINATH FAHIMA .S**

**AMINATHU BAHIMA .**

**This may be published in Newspapers and TV from the day following the last date for withdrawal of candidature and upto two days before the date of poll.**

**Format C-1**

(For candidate to publish in Newspapers, TV)

**Declaration about criminal cases:-**

(As per the judgement dated 25th September, 2018 of Hon'bel Supreme Court in W.P. (Civil). No.536 of 2011 (Public Interest Foundation & Ors. Vs. Union of India & Anr.)

Name and address of candidate: **K.Kuppan**
No 39,40 Jeevanlal Nagar Main Street
Thiruvottiyur Chennai-600019

Name of Political party: **ALL INDIA ANNA DRAVIDA MUNNETRA KAZHAGAM**
(Independent candidates should write "Independent" here)

Name of Election: **Tamil Nadu Assembly Election**

* Name of Constituency: **Thiruvottiyur - 10**

I **K.Kuppan** a candidate for the abovementioned election, declare for public information the following details about my criminal antecedents:

**A) Pending criminal cases:**

| Sl. No. | Name of Court | Case No. and dated | Status of Case (s) | Section(s) of Acts concerned and brief description of offence(s) |
|---|---|---|---|---|
| 1 | Not Applicable | Not Applicable | Not Applicable | 1) Thiruvottiyur H8 PS CR NO 712/2022 U/s 143,147 & 41 (6) (ii) CP Act<br>2) Thiruvottiyur H8 PS CR NO 794/2022 U/s 143,147 & 41 (6) (ii) CP Act<br>3) Thiruvottiyur H8 PS CR NO 989/2022 U/s 143,147 & 41 (6) (ii) CP Act<br>4) Manali M6 PS CR NO 510 / 2025 U/s 170 (1) BNSS<br>5) Madhavaram M1 CR NO 1196/2024 PS U/S 189 ( 2 ) 223 BNSS |

**(B) Detail about cases of conviction for criminal offences:-**

| Sl. No. | Name of Court & Date (s) or order(s) | Description of offence(s) & Punishment imposed | Maximum Punishment Imposed |
|---|---|---|---|
| 1. | Not Applicable | Not Applicable | Not Applicable |

*In the case of election to Council of States or election to Legislative Council by MLAs, mention the election concerned in place of name of constituency

This may be published in Newspapers and TV from the day following the last date for withdrawal of candidature and upto two days before the date of pool

**Format C-1**

**(For candidate to publish in Newspapers, TV)**

**Declaration about criminal cases**

(As per the judgment dated 25th September, 2018, of Hon'ble Supreme Court in WP (Civil) No.536 of 2011 (Public Interest Foundation & Ors. Vs. Union of India & Anr.)

Name and address of candidate: **R. MANOHAR**
Name of political party: **ALL INDIA ANNA DRAVIDA MUNNETRA KAZHAGAM**
Name of Election: **TAMIL NADU STATE ASSEMBLY ELECTION**
Name of Constituency: **18-HARBOUR**

I **R. MANOHAR**, a candidate for the above-mentioned election, declare for public information the following details about my criminal antecedents:

**(A) Pending criminal cases**

| SI No. | Name of Court | Name of the Police Station | Case No. and dated | Status of Case(s) | Section(s) of Acts Concerned and brief description of offence(s) |
|---|---|---|---|---|---|
| 1. | Nil | J-4, Kotturpuram Police | 183/2024 | Under Investigation | U/s 189(2), BNS 41(6)(a) TNCP Act **(Unlawful Assembly & Opposing or disobeying a lawful order from the police.)** |

**(B) Details about cases of conviction for criminal offences**

| SI No. | Name of Court & Date(s) of Order(s) | Description of Offence(s) & punishment imposed | Maximum Punishment Imposed | Punishment |
|---|---|---|---|---|
| 1. | Nil | Nil | Nil | Nil |

*In the case of election to council or states or election to Legislative council by MLA's, mention the election concerned in place of Constituency

**This may be published in Newspapers and TV from the day following the last date for withdrawal of candidature and up to two days before the date of poll**

**Format C-1**

(for candidate to publishing Newspapers, TV)

**Declaration about criminal cases**

(As per the judgment dated 25th September,2018, of Hon'ble Supreme Court in WP (Civil) No.536 of 2011 (Public Interest Foundation & Ors. Vs. Union of India & Anr.)

Name and address of candidate : **C.RAJENDRAN**
**NO.60. GANDHI STREET, CHITLAPAKKAM, CHENNAI - 600064.**
Name of political party : **ALL INDIA ANNA DRAVIDA MUNNETRA KAZHAGAM**
(Independent candidates should write "Independent" here)
Name of Election : **TAMIL NADU GENERAL ELECTION - 2026**
*Name of Constituency : **31.TAMBARAM**

I **C.RAJENDRAN** (name of candidate), a candidate for the abovementioned election, declare for public information the following details about mycriminal antecedents:

**(A)**Pending criminal cases

| SL. No. | NameofCourt | Case No. and dated | Status of case(s) | Section(s)of A ctsconcerned And brief description of offence(s) |
|---|---|---|---|---|
| 1 | JUDICIAL MAGISTRATE NO.1. CHENGALPATTU | FIR NO. 827/2024 DATE 30.12.2024 | FIR STAGE | BNS 2023 189(2), 292, 126(2) |
| Not Applicable | Not Applicable | Not Applicable | Not Applicable | Not Applicable |
| Not Applicable | Not Applicable | Not Applicable | Not Applicable | Not Applicable |

**(B)** Details about cases of conviction for criminal offences

| Sl. no. | Name of Court& date(s) of order(s) | Description of offence(s) & punishment imposed | Maximum Punishment Imposed |
|---|---|---|---|
| Not Applicable | Not Applicable | Not Applicable | Not Applicable |
| Not Applicable | Not Applicable | Not Applicable | Not Applicable |
| Not Applicable | Not Applicable | Not Applicable | Not Applicable |

*In the case of election to Council of States or election to Legislative Council by MLAs, mention the election concerned in place of name of constituency

This may be published in newspapers and TV from the day following the last date for withdrawal of candidature and upto two days before the date of poll.

Format C-1

(for candidate to publish in Newspapers, TV)

Declaration about criminal cases

(As per the judgement dated 25th September,2018, of Hon'ble Supreme court in WP(civil) No 536 of 2011 (Public interest Foundation & Ors. Vs. Union of India & Anr.)

Name of address of candidate: **K.P. KANDAN S/O T. PONNUSAMY**
**NO,5 KANNAGI STREET, PERUNGUDI,**
**KANDANCHAVADI, CHENNAI-600 096.**

Name of political party: **ALL INDIA ANNA DRAVIDA MUNETRA KAZHAGAM.**
(Independent candidates should write "Independent" here)

Name of Election: **GENERAL ELECTION- TAMILNADU LEGISLATIVE ASSEMBLY-2026**

*Name of Constituency: **NO:27 SHOLINGANALLUR CONSTITUENCY**

I, **K.P. KANDAN S/O T. PONNUSAMY**, a candidate for the abovementioned election, declare for public information the following details about my criminal antecedents:

(A)Pending Criminal Cases:

| SI.NO | Name of Court (Police Station) | Case No. and Date | Status of case(s) | Section(s) of Acts concerned and brief description of offence(s) |
|---|---|---|---|---|
| 1. | 7th METROPOLITAN MAGISTRATE COURT GEORGE TOWN (B1 NORTH BEACH POLICE STATION) | CRIME NO: 79/2022 & 28/02/2022 | FIR STAGE | U/S-143,188,290 &341 IPC TN OPEN PLACES (PREVENTION OF DISFIGUREMENT)1959,4A(1b)TN CITY POLICE ACT,1888 71A(1) |
| 2. | XVIII METROPOLITAN MAGISTRATE COURT SAIDAPET (E2 ROYAPETTAH POLICE STATION) | CRIME NO: 192/2022 & 11/07/2022 | FIR STAGE ( WAS TRANFERED TO CBCID ON 30/09/2022) | U/S-147,148,341,324, AND 506(2)IPC |
| 3 | JUDICIAL MAGISTRATE- II ALANDUR COURT (S10 PALLIKARANAI POLICE STATION) | CRIME NO :1054/2021 & 07/10/2021 | FIR STAGE | U/S-143,283 & 269 IPC |
| 4 | JUDICIAL MAGISTRATE- II ALANDUR COURT (J9 THORAIPAKKAM POLICE STATION) | CRIME NO :692/2021 & 31/08/2021 | FIR STAGE | U/S-143 & 269 IPC |
| 5 | JUDICIAL MAGISTRATE- II CHENGALPET COURT (D1 CHENGALPET TOWN POLICE STATION) | CRIME NO: 943/2021 & 17/12/2021 | FIR STAGE | U/S-143 & 270 IPC, THE DISASTER MANAGEMENT ACT 2005-51(b) |

(B)Details about cases of conviction for criminal offences:

| SI.NO | Name of court &date(s) of order(s) | Description of offence(s) & punishment imposed | Maximum punishment imposed |
|---|---|---|---|
| NIL | NIL | NIL | NIL |
| NIL | NIL | NIL | NIL |
| NIL | NIL | NIL | NIL |

*In the case of election to council of states or election to Legislative Council by MLAs, mention the election concerned in place of name of constituency.

# கன்னியாகுமரி காந்தி நினைவு மண்டபத்தில் 100% வாக்குப்பதிவு குறித்து விழிப்புணர்வு நிகழ்ச்சி




கன்னியாகுமரி, ஏப்.18–

தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத் தேர்தல் 2026, வருகின்ற ஏப்ரல் 23ம் தேதி நடைபெறவுள்ளதை முன்னிட்டு, வாக்காளர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் கன்னியாகுமரி காந்தி நினைவு மண்டபத்தில் நகராட்சி சார்பில் சிறப்பு நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்தத் தேர்தலில் அனைத்து வாக்காளர்களும் தங்களது ஜனநாயகக் கடமையை 100 சதவீதம் நிறைவேற்ற வேண்டும் என்பதை வலியுறுத்தி மாவட்ட நிர்வாகம் பல்வேறு விழிப்புணர்வு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. அதன் ஒரு பகுதியாக, கன்னியாகுமரி நகராட்சி சார்பில் காந்தி மண்டபத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில், மண்டபத்தின் நுழைவு வாயிலில் "அனைவரும் 100 சதவீதம் வாக்களிப்போம்" என்ற வாசகங்கள் அடங்கிய கண்கவர் ரங்கோலி கோலம் வரையப்பட்டிருந்தது. இது அங்கு வந்திருந்த சுற்றுலாப் பயணிகளையும் பொதுமக்களையும் பெரிதும் கவர்ந்தது.

**ஜனநாயகத்தை வலுப்படுத்துவோம்:**

நிகழ்ச்சியில் பங்கேற்றவர்கள் "வாக்குரிமை நமது கடமை", "நேர்மையாக வாக்களிப்போம்", "ஜனநாயகத்தை வலுப்படுத்துவோம்" போன்ற விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தி நின்றனர். தொடர்ந்து, தகுதியுள்ள அனைவரும் கட்டாயம் வாக்களிக்க வேண்டும் என்றும், எவ்விதத் தூண்டுதலுக்கும் ஆளாகாமல் நேர்மையாக ஜனநாயகக் கடமையாற்றுவோம் என்றும் வாக்காளர் உறுதிமொழியினை ஏற்றுக்கொண்டனர்.

இந்த விழிப்புணர்வு நிகழ்வில் கன்னியாகுமரி நகராட்சி ஆணையர் பட்டுசாமி, சுகாதார ஆய்வாளர் அந்தோணி, சுகாதார மேற்பார்வையாளர்கள், தன்னார்வலர்கள், சுகாதாரக் களப்பணியாளர்கள், பொதுமக்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

---

**கனம் கோட்டாட்சியர் அவர்கள்**
**சிவகாசி**
**த.ப.எண்.ஆ2/3868/2026**

R.சிந்து, க/பெ.ரமேஷ்,
2/226, பாரதி நகர், ஆலங்குளம்,
வெம்பக்கோட்டை (வட்டம்),
விருதுநகர் (மாவட்டம்)

..மனுதாரர்

**அறிவிப்பு**

மேற்படி மனுதாரரின் கணவர் **P.ரமேஷ் த/பெ.பெருமாள்சாமி** என்பவர் விருதுநகர் மாவட்டம், இராஜபாளையம் வட்டம், P.ராமச்சந்திரபுரம், ரெகுநாதபுரம், கீழத்தெரு என்ற முகவரியில் வைத்து **04.07.1988** தேதி அன்று பிறந்தார். இந்த பிறப்பு குறித்து பதிவு செய்ய தவறிவிட்டதால் பிறப்பைப் பதிவு செய்ய கோரி சிவகாசி கோட்டாட்சியர் அலுவலகத்தில் மனுதாக்கல் செய்துள்ளார். மேற்படி தேதியில் மனுதாரரின் கணவர் **P.ரமேஷ்** என்பவருக்கு பிறப்பு சான்று வழங்க எவருக்கேனும் ஆட்சேபணை இருந்தால் சிவகாசி கோட்டாட்சியரிடம் 15 நாட்களுக்குள் ஆட்சேபணை தெரிவித்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. 15 நாட்களுக்குள் ஆட்சேபணை செய்ய தவறினால் மேற்படி **P.ரமேஷ்** என்பவருக்கு பிறப்புச் சான்று வழங்கப்படும் என்பதை இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

R.சிந்து
**மனுதாரர்.**

---

**கனம் கோட்டாட்சியர் அவர்கள்**
**சிவகாசி**
**த.ப.எண்.ஆ2/3557/2026**

திரு.B.ராமசாமி,
த/பெ.பாலகிருஷ்ணன்,
| 1. | Judicial Magistrate Court, Thirumayam (Transferred to Judicial Magistrate Court No.1 Pudukkottai) | FIR No.73/2025 Crl.M.P.No. 273/2025 Dt.02.08.2025 | Under Investigation | Panayapatti Police Station FIR No.73/2025 U/s.147, 148, 294(b), 323, 427 436, 506(II) 2021 சட்டமன்ற தேர்தல் பிரச்சனை சம்மந்தமாக |

(B) Details about cases of conviction for criminal offences:

| S.No | Name of court & date(s) of order(s) | Description of offence(s) & punishment imposed | Maximum punishment Imposed |
|---|---|---|---|
| 1. | No | No | No |

"In the case of election to Council of States or election to Legislative Council be MLAs, mention the election concerned in place of name of constituency"

Format C-1
(for candidate to publish in Newspapers, TV)

Declaration about criminal cases

*(As per the judgment dated 25th September 2018 of Hon'ble Supreme Court in W.P (Civil) No.536 of 2011 (Public Interest Foundation & Ors. Vs. Union of India & Anr.)*

Name and address of Candidate : PR.SENTHILNATHAN
323(1/55), CHINNA NAGADI, PERIYAKARAI POST, DEVAKOTTAI TALUKA, SIVAGANGAI DISTRICT.

Name of Political Party : ALL INDIA ANNA DRAVIDA MUNNETRA KAZHAGAM,

(Independent Candidates should write "Independent" here)
Name of Election : 2026 TAMILNADU STATE LEGISLATIVE ASSEMBLY
Name of Constituency : 186, SIVAGANGA

I, PR.SENTHILNATHAN , (Name of candidate) a candidate for the above mentioned election, declare for public information the following details about my criminal antecedents.

| Pending Criminal Cases | | | | Details about cases of conviction for criminal offences | |
|---|---|---|---|---|---|
| S. No | Name of Court | Case No and status of case | Section(s) of Acts concerned and brief description of offence(s) | Name of Court & date(s) of order(s) | Description of offence(s) & punishment imposed |
| 1. | JUDICIAL MAGISTRATE COURT NO.1 SIVAGANGAI | FIR NO.54/2026 UNDER INVESTIGATION | 4(B) TNOPPD ACT 1959 | NOT APPLICABLE | NOT APPLICABLE |
| 2. | JUDICIAL MAGISTRATE COURT NO.1 SIVAGANGAI | FIR NO.856/2024 UNDER INVESTIGATION | 126(2) 189(2) 285 BNS Act | NOT APPLICABLE | NOT APPLICABLE |
| 3. | JUDICIAL MAGISTRATE COURT NO.6 MADURAI | FIR NO.199/2023 UNDER INVESTIGATION | 341,294(b), 323, 392, 506 (1), IPC r/w 109 IPC @ 341, 294(b) 323, 506 (1) IPC | NOT APPLICABLE | NOT APPLICABLE |
| 4. | JUDICIAL MAGISTRATE COURT NO.1 SIVAGANGAI | FIR NO.732/2021 NOT TAKEN ON FILE | 143, 269 IPC | NOT APPLICABLE | NOT APPLICABLE |
| 5 | JUDICIAL MAGISTRATE COURT NO.1 SIVAGANGAI | FIR NO.76/2021 DISPOSED | IPC 171(H) TNOPPD Act 4(B) | NOT APPLICABLE | NOT APPLICABLE |
| 6. | JUDICIAL MAGISTRATE COURT No.1 SIVAGANGAI | FIR NO.140/2019 NOT TAKEN ON FILE | 143, 290 IPC | NOT APPLICABLE | NOT APPLICABLE |
| 7. | JUDICIAL MAGISTRATE COURT, ILAYANGUDI | FIR NO.123/2016 DISPOSED | 143, 188 IPC | NOT APPLICABLE | NOT APPLICABLE |
| 8. | JUDICIAL MAGISTRATE COURT THIRUPPATHUR | FIR NO.131/2016 DISPOSED | IPC 143, 188, 290 TNOPPD Act 3A(1)(a) BNS Act | NOT APPLICABLE | NOT APPLICABLE |
| 9. | JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI | FIR NO.284/016 REFERRED | IPC 188, 501, 502, REP PEOPLE Act 127A (1) | NOT APPLICABLE | NOT APPLICABLE |
| 10. | JUDICIAL MAGISTRATE COURT DEVAKOTTAI | FIR NO.407/2015 REFERRED | IPC 143, 285 | NOT APPLICABLE | NOT APPLICABLE |
| 11. | JUDICIAL MAGISTRATE COURT NO.1 SIVAGANGAI | FIR NO.361/2015 REFERRED | IPC 143, 285 | NOT APPLICABLE | NOT APPLICABLE |
| 12. | JUDICIAL MAGISTRATE COURT, MANAMADURAI | FIR NO.185/2014 REFERRED | IPC 171, 171(F) | NOT APPLICABLE | NOT APPLICABLE |
| 13. | JUDICIAL MAGISTRATE COURT SINGAMPUNARI | FIR NO.74/2014 DISPOSED | IPC 188 TNOPPD Act 4A (1a) | NOT APPLICABLE | NOT APPLICABLE |
| 14 | JUDICIAL MAGISTRATE COURT NO.1 SINGAMPUNARI | FIR NO.75/2014 DISPOSED | IPC 188, TNOPPD Act 4AA(1a) | NOT APPLICABLE | NOT APPLICABLE |
| 15. | CHIEF METROPOLITAN MEGISTRATE COURT EGMORE | FIR NO.715/2021 UNDER INVESTIGATION | 143, 341, 269 IPC & 3 of Epidemic Diseases Act 1897 and Sec 41 (A) (b) CP Act | NOT APPLICABLE | NIOT APPLICABLE |

**"In the case of election to Council of States or election to Legislative Council be MLAs, mention the election concerned in place of name of constituency"**

# கல்குவாரி விவகாரத்தில் திமுக வேட்பாளருக்கு எதிர்ப்பு: டாக்டர் சரவணனுக்கு திருமால் கிராம மக்கள் ஆதரவு

மதுரை, ஏப். 18–

மதுரை மாவட்டம் கள்ளிக்குடி அருகே உள்ள திருமால் கிராமத்தில் கூடுதல் குவாரிகளுக்கு அனுமதி அளிக்கப்பட்டதைக் கண்டித்துப் போராட்டத்தில் ஈடுபட்டு வந்த கிராம மக்கள், தற்போது மதுரை வடக்கு தொகுதி அதிமுக வேட்பாளர் மருத்துவர் சரவணனுக்குத் தங்கள் ஆதரவைத் தெரிவித்துள்ளனர்.



திருமால் கிராமத்தில் ஏற்கனவே குவாரிகள் செயல்பட்டு வரும் நிலையில், மேலும் மூன்று குவாரிகளுக்கு மாவட்ட நிர்வாகம் அனுமதி அளித்தது. இந்த குவாரிகளில் அதிகப்படியான வெடிகளைப் பயன்படுத்திப் பாறைகள் தகர்க்கப்படுவதால், கிராமங்கள் பாதிப்புக்குள்ளாகும் நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் ஆத்திரமடைந்த கிராமத்தைச் சேர்ந்த 300க்கும் மேற்பட்டோர், குவாரி உரிமத்தை ரத்து செய்யக் கோரி தங்களது அடையாள அட்டைகளை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஒப்படைக்கும் போராட்டத்தில் ஈடுபட்டனர். தேர்தலைப் புறக்கணிக்கப் போவதாகவும் அவர்கள் அறிவித்திருந்தனர். இது குறித்து மதுரை வடக்கு வட்டாட்சியர் நடத்திய பேச்சுவார்த்தையைத் தொடர்ந்து போராட்டத்தைத் தற்காலிகமாக ஒத்திவைத்திருந்தனர்.

முழுமையாக ரத்து செய்யப்படும்:

இந்நிலையில், போராட்டத்தில் ஈடுபட்ட கிராம மக்களை மதுரை வடக்கு தொகுதி அதிமுக வேட்பாளர் மருத்துவர் சரவணன் நேரில் சந்தித்து ஆறுதல் கூறினார். அப்போது, அதிமுக ஆட்சி அமைந்தவுடன் திருமால் கிராமத்தில் உள்ள குவாரி உரிமங்கள் முழுமையாக ரத்து செய்யப்படும் என்று அவர் உறுதி அளித்தார். வேட்பாளரின் இந்த உறுதியை ஏற்றுக்கொண்ட கிராம மக்கள், அதிமுகவுக்குத் தங்களது ஆதரவைத் தெரிவித்தனர்.

இதனைத் தொடர்ந்து, கிராம மக்கள் நூற்றுக்கும் மேற்பட்டோர் வீதி வீதியாகச் சென்று திமுகவுக்கு எதிராகத் துண்டுப் பிரசுரங்களை விநியோகித்தனர். திமுக வேட்பாளர் கோ.தளபதி அதிகாரத்திற்கு வந்தால் இயற்கை வளங்கள் அழிக்கப்படும் என்றும், தங்களது வீடுகளையும் வாழ்வாதாரத்தையும் இழந்து நடுத்தெருவிற்கு வரும் நிலை ஏற்படும் என்றும் அவர்கள் குற்றம் சாட்டினர். எனவே, திமுகவுக்கு வாக்களிக்க வேண்டாம் எனக் கேட்டுக்கொண்ட அவர்கள், மருத்துவர் சரவணனுக்கு ஆதரவாகத் தீவிரப் பிரச்சாரத்தில் ஈடுபட்டனர்.

# திருச்சி கிழக்கு தொகுதியில் நாளை த.வெ.க. தலைவர் விஜய் தீவிர தேர்தல் பிரச்சாரம்

திருச்சி, ஏப். 18–

திருச்சி கிழக்கு சட்டமன்றத் தொகுதியில் போட்டியிடும் தமிழக வெற்றிக் கழகத் தலைவர் விஜய், நாளை (ஞாயிற்றுக்கிழமை) மீண்டும் தனது தொகுதியில் தீவிர வாக்குச் சேகரிப்பில் ஈடுபட உள்ளார்.

தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலுக்கான வாக்குப்பதிவு வரும் ஏப்ரல் 23ஆம் தேதி நடைபெறவுள்ள நிலையில், தேர்தல் களம் இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளது. பெரம்பூர் மற்றும் திருச்சி கிழக்கு ஆகிய இரண்டு தொகுதிகளில் போட்டியிடும் த.வெ.க. தலைவர் விஜய், கடந்த 2ஆம் தேதி திருச்சியில் வேட்புமனுத் தாக்கல் செய்த கையோடு மரக்கடை மற்றும் காந்தி மார்க்கெட் பகுதிகளில் முதற்கட்ட பிரச்சாரத்தை மேற்கொண்டார். அதனைத் தொடர்ந்து, தமிழகம் முழுவதும் சுற்றுப்பயணம் மேற்கொண்டு தனது கட்சி வேட்பாளர்களை ஆதரித்து அவர் பிரச்சாரம் செய்து வந்தார்.

இந்நிலையில், திருச்சி கிழக்குத் தொகுதியில் போட்டியிடும் பிற பிரதான கட்சிகளின் வேட்பாளர்கள் சூறாவளி பிரச்சாரத்தில் ஈடுபட்டு வரும் நிலையில், விஜய் மீண்டும் தனது தொகுதிக்கு எப்போது வருவார் என்ற எதிர்பார்ப்பு அக்கட்சியின் தொண்டர்களிடையே நிலவி வந்தது. பல்வேறு இடங்களில் அவரது பிரச்சாரங்கள் திடீரென ரத்து செய்யப்பட்டதால், அவர் திருச்சிக்கு வருவாரா என்ற ஐயம் நிலவிய சூழலில், நாளை மாலை அவர் திருச்சியில் பிரச்சாரம் செய்ய இருப்பது உறுதியாகியுள்ளது.

நாளை மாலை சென்னையில் இருந்து விமானம் மூலம் திருச்சி வரும் விஜய், அங்கிருந்து கார் மூலம் வயர்லெஸ் ரோடு, டி.வி.எஸ். டோல்கேட் வழியாகச் சென்னை தேசிய நெடுஞ்சாலையை அடைகிறார். அங்கிருந்து சிந்தாமணி அண்ணா சிலை, சத்திரம் பேருந்து நிலையம், சிங்காரத்தோப்பு, மரக்கடை மற்றும் பாலக்கரை உள்ளிட்ட முக்கிய வீதிகள் வழியாகச் சாலை வலம் வந்து (Road Show) பொதுமக்களிடையே வாக்குச் சேகரிக்கத் திட்டமிட்டுள்ளார். விஜய்யின் வருகையை முன்னிட்டு திருச்சியில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

**Format C-1**
**(For political party to publish in website, newspapers, TV)**
**Declaration about criminal**

(As per the judgment dated 25th September. 2018 of Hon'ble Supreme Court in WP (Civil) No. 536 of 2011 (Public Interest Foundation & Ors. Vs. Union of India & Anr)

Name and address of candidate : **U.ARAVIND**
Name of Political Party : **INDEPENDENT**
Name of Election : **General Election to Legislative Assembly, Tamilnadu**
Name of Constituency : **223, ALANGULAM**

I, **U.ARAVIND** a candidate for the abovementioned election, declare for public information the following details about my criminal antecedents.

**(A) Pending criminal cases**

| S.No. | Name of Court | Case No. and dated | Status of Case (S) | Section(s) of Acts concerned and brief description of Offence(s) |
|---|---|---|---|---|
| 1 | Nil | 66/2021, Kadayam PS | Pending | 294(b), 324, 323,506(ii), IPC, Public Nuisance & Assault and Criminal Intimidation |
| 2 | Nil | 142/2023, Kadayam PS | Pending | 294(b), 341, 506(ii), Public Nuisance Wrongful Restrain Criminal Intimidation |

**(B) Details about cases of conviction for criminal offences**

| S.No. | Name of Court and date(s) of order(s) | Description of offence(s) & punishment imposed | Maximum Punishment Imposed |
|---|---|---|---|
| 1 | NIL | NIL | NIL |

**Candidate,**
**223, Alangulam, TamilNadu General Election to Legislative Assembly,**
**Independent**

**Format C-1**
**Declaration about criminal cases**

(As per the judgment dated 25th September, 2018, of Hon'ble Supreme Court in WP (Civil) No. 536 of 2011 (Public Interest Foundation & Ors. Vs. Union of India & Anr.)

**Name and address of candidate** : A.BHUVANENTHIRAN
**Name of the Political Party** : AIADMK
(Independent candidates should write "Independent" here)
**Name of Election** : TamilNadu Assembly Election-2026
*** Name of Constituency** : 156, KURINJIPADI

**I, A.BHUVANENTHIRAN, S/o. AYYADURAI, 521, Thaikkal Thoni Thurai, Cuddalore O.T., Pachchyankuppam, Cuddalore, Tamilnadu-607003. A candidate for the above mentioned Election, declare for public information the following details about my criminal antecedents:**

**(A) Pending criminal cases:**

| Sl. No. | Name of Court | Case No. and dated | Status of Case (s) | Section(s) of Acts concerned and brief description of offence(s) |
|---|---|---|---|---|
| 1 | JM-I Cuddalore | 4/2019 | Pending | 1208, 408, 471 & 477A IPC |

(B) Detail about cases of conviction for criminal offences:-

| Sl. No. | Name of Court Date (s) or order(s) | Description of offence(s) & Punishment imposed | Maximum Punishment Imposed |
|---|---|---|---|
| Nil | Nil | Nil | Not Applicable |

**Format C-1**
**(for candidate to publish in Newspapers, TV)**
**Declaration about criminal cases**

(As per the judgment dated 25" September, 2018, of Hon'ble Supreme Court in WP (Civil) No. 536 of 2011 (Public Interest Foundation & Ors. Vs. Union of India & Anr.)

Name and Address of Candidate: V.MOORTHY S/O M. VELAYUTHAM No:27/9, Nehru Street, Madhavaram, Chennai-600060.

Name of Political Party: **ALL INDIA ANNA DRAVIDA MUNNETRA KAZHAGAM (AIADMK)**
(Independent candidates should write "Independent" here)

Name of Election: **Tamil Nadu Legislative Assembly Election-2026.**
*Name of Constituency: **009-Madhavaram Assembly Constituency.**

**I V.MOORTHY** S/O **M. VELAYUTHAM** (Name of Candidate), a candidate for the above mentioned election, declare for public information the following details about my criminal antecedents:

**(A) Pending Criminal Cases**

| Sl.No. | Name Of Court | Case No and Dated | Status of Case(s) | Section(s) of Acts concerned and brief description of offence(s) |
|---|---|---|---|---|
| 1. | District Munsif Cum Judicial Magistrate court at Madhavaram | Crime No: 1196/ 2024 | FIR Stage | U/s 189(2),223, BNS 2023 |

**(B) Details about cases of Conviction for criminal offences**

| Sl.No. | Name Of Court & Date(s) of order(s) | Description of offence(s) & Punishment imposed | Maximum Punishment Imposed |
|---|---|---|---|
| 1. | NIL | NIL | NIL |

"In the case of election of states or election to Legislative Council by MLAs, Mention the election concerned in place of name or constituency.

**V. Moorthy**
**09 Madhavaram Assembly Constituency**

# நத்தத்தில் விழிப்புணர்வு பேரணி

நத்தம், ஏப்.18–

திண்டுக்கல் மாவட்டம் நத்தத்தில் சட்டமன்ற தேர்தலில் 100 சதவீதம் அனைவரும் வாக்களிக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி அங்கன்வாடி பணியாளர்கள் கலந்து கொண்ட விழிப்புணர்வு பேரணி நடந்தது. இதற்கு மாவட்ட திட்ட இயக்குநர் பூங்கொடி தலைமை தாங்கி



விழிப்புணர்வு பேரணியை கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

மாவட்ட ஒருங்கிணைப்பாளர் கிருத்திகா, வட்ட வழங்கல் அலுவலர் பாமா ஆகியோர் முன்னிலை வகித்தனர். தொடர்ந்து, நத்தம் யூனியன் அலுவலகத்தில் தொடங்கிய ஊர்வலம், பஸ் நிலையத்தை நிறைவடைந்தது. பின்னர் அனைவரும் தவறாமல் வாக்களிப்போம், ஜனநாயக கடமையை மறக்காமல் செய்வோம் என உறுதிமொழி எடுத்து கொள்ளபட்டது. இதில், வருவாய் துறையினர், அங்கன்வாடி பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

**Format C-1**
(For candidate to publish in Newspapers, TV)
**Declaration about criminal cases:-**

(As per the judgement dated 25th September, 2018 of Hon'bel Supreme Court in W.P. (Civil). No.536 of 2011 (Public Interest Foundation & Ors. Vs. Union of India & Anr.)

Name and address of candidate: : **M.C. SAMPATH, No.413, New Street, Melkumaramangalam, Panruti - Taluk, Cuddalore - District.**

Name of Political party: **ALL INDIA ANNA DRAVIDA MUNNETRA KAZHAGAM**

Name of Election: Tamil Nadu Assembly Election -2026

* Name of Constituency **155, CUDDALORE**

I **M.C. Sampath,** a candidate for the above mentioned election, declare for public information the following details about my criminal antecedents:

**A) Pending criminal cases:**

| Sl. No. | Name of Court | Case No. and dated | Status of Case (s) | Section(s) of Acts concerned and brief description of offence(s) |
|---|---|---|---|---|
| 1 | JM-II PANRUTI | 2/2023 | Pending | 147, 294 (b), 323, 341, 365, 506 (II), 120B & 34 of IPC r/w 4 of TNPHW Act. |

**(B) Detail about cases of conviction for criminal offences:-**

| Sl. No. | Name of Court & Date (s) or order(s) | Description of offence(s) & Punishment imposed | Maximum Punishment Imposed |
|---|---|---|---|
| 1 | Nil | Nil | Not Applicable |

**M.C. SAMPATH, AIADMK Candidate**
**155, Cuddalore Assembly Constituency**

**FORMAT C-1**
(for candidate to publish in Newspapers, TV)
**DECLARATION ABOUT CRIMINAL CASES**

*[As per the judgment dated 25th September, 2018 of Hon'ble Supreme Court in WP (Civil) No. 536 of 2011 (Public Interest Foundation & Ors. Vs. Union of India & Anr.)]*

Name and address of candidate : **N.YOGANATHAN, S/O. NALLUSAMY, No: 3, Ambalakkara Street, M.Karuppampatty, Musiri Tk., Tiruchirappalli Dist.**

Name of Political Party : **ALL INDIA ANNA DRAVIDA MUNNETRA KAZHAGAM**
*(Independent candidates should write "Independent" here)*

Name of Election : **TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY ELECTION-2026**

*Name of Constituency : **145-MUSIRI**

I, **N.YOGANATHAN** (name of candidate), a candidate for the above mentioned election, declare for public information the following details about my criminal antecedents:

**(A) Pending criminal cases**

| Sl. No. | Name of Court | Case No. and dated | Status of case(s) | Section(s) of Acts concerned and brief description of offence(s) |
|---|---|---|---|---|
| 1. | NIL | NIL | NIL | NIL |

**(B) Details about cases of conviction for criminal offences**

| Sl. No. | Name of Court & date(s) of order(s) | Description of offence(s) & punishment imposed | Maximum Punishment Imposed |
|---|---|---|---|
| 1. | 1.On 30-04-2009, Hon'ble J.M, Thuraiyur passed an order of Conviction for the period of 2 Years imprisonment. 2. On 14-09-2011, Hon'ble Tiruchirappalli Addl. Sessions Court (Fast Track) No: 2 confirmed the order passed by the J.M. Thuraiyur. 3. On 06.02.2014, Hon'ble Madras High Court of Madurai Bench set aside the orders of Trial court and 1st Appellate Court acquitted the deponent by allowing the appeal. 4. On 23.10.2019, Hon'ble Supreme Court on a appeal by the de-facto complainant passed an order of conviction reduced as for the period of 1 Year simple imprisonment instead of 2 years. | Sections 147, 148, 323, 324, 326 and 341 of I.P.C Alleged unlawfully assembled, assaulted and caused injuries to the witnesses therein. | 1 Year Simple Imprisonment and the same was observed. |

* In the case of election to Council of States or election to Legislative Council by MLAs, mention the election concerned in place of name of constituency

**Format C-1**
**DECLARATION ABOUT CRIMINAL CASES**

(As per the judgment dated 25th September, 2018, of Hon'ble Supreme Court in WP(Civil) No. 536 of 2011 (Public Interest Foundation & Ors. Vs. Union of India & Anr.)

Name and address of candidate : **S.M.SUKUMAR**
S/o. Muruganandham, No.4, 4th Cross Street, Anna Avenue, Ranipet 632401, Walaja Taluk, Ranipet District, Tamil Nadu.

Name of political party : **All India Anna Dravida Munnetra Kazhagam (AIADMK)**
(Independent candidates should write "Independent" here)

Name of Election : **Legislative Council - 2026**

*Name of Constituency : **042, Arcot**

I, **S.M.SUKUMAR,** S/o.Muruganandham (name of candidate), a candidate for the above mentioned election, declare for public information the following details about my criminal antecedents:

(A) Pending Criminal Cases

| Sl. No. | Name of Court | Case No. and dated | Status of Case(s) | Section (s) of Acts concerned and brief description of offence(s) |
|---|---|---|---|---|
| 1. | Walajapet Police Station | Crime No.0152/2025 | Not Taken on file | BNS 126(2), 189(2) Act |

(B) Details about cases of conviction for criminal offences:

| Sl. No. | Name of Court & Date(s) of Order(s) | Description of offence(s) & Punishment imposed | Maximum imposed punishment |
|---|---|---|---|
| | Not Applicable | Not Applicable | Not Applicable |



# எடப்பாடியார் தலைமையில் மீண்டும் ஆட்சி: டாக்டர் வெங்கடேஷ் குமார் சூறாவளிப் பிரச்சாரம்

புதுக்கோட்டை, ஏப். 18 தேசிய சமூக நீதி கட்சி மற்றும் அகில இந்திய ராஜகுலத்தோர் பேரவையின் நிறுவனர் மற்றும் தேசியத் தலைவர் டாக்டர் வெங்கடேஷ் குமார், 2026 சட்டமன்றத் தேர்தலில் அஇஅதிமுக தலைமையிலான கூட்டணிக்குத் தனது உறுதியான ஆதரவைத் தெரிவித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து, தமிழ்நாடு முழுவதும் அஇஅதிமுக வேட்பாளர்களை ஆதரித்து அவர் சூறாவளி சுற்றுப்பயணம் மேற் கொண்டு வருகிறார். தனது மேற்கு மண்டலப் பயணத்தின் போது அஇஅதிமுக பொதுச்செயலாளரும், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான எடப்பாடி கே.பழனிச்சாமியை நேரில் சந்தித்து வாழ்த்து பெற்றார். அப்போது அவர் பேசியதாவது:

"தமிழ்நாட்டில் மீண்டும் எடப்பாடி கே.பழனிச்சாமி அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்று நல்லாட்சி அமைத்திட வேண்டும் என்பதே எங்கள் இலக்கு. இந்தச் சட்டமன்றத் தேர்தலில் அஇஅதிமுக தலைமையிலான கூட்டணி முழுமையான வெற்றி அடைய வேண்டும். எடப்பாடியார் தலைமையில் மீண்டும் ஆட்சி அமைய வேண்டும் என்கிற ஒற்றை நோக்கத்திற்காகவே தேசிய சமூக நீதி கட்சி மற்றும் அகில இந்திய ராஜகுலத்தோர் பேரவை சார்பில் தமிழ்நாடு முழுவதும் தீவிரப் பிரச்சாரத்தை முன்னெடுத்து வருகிறோம். உழைப்பிற்கேற்ற வெற்றியை மக்கள் இக்கூட்டணிக்கு நிச்சயம் வழங்குவார்கள் என டாக்டர் வெங்கடேஷ் குமார் பேசினார்.

இந்தச் சந்திப்பின் போது கட்சியின் மாநிலப் பொதுச் செயலாளர் மாதையன், மாநிலப் பொருளாளர் பன்னீர்செல்வம், மாநிலத் துணைப் பொதுச் செயலாளர் சுரேஷ் மற்றும் மாநிலச் செயலாளர் ஸ்ரீதர் ஆகியோர் உடனிருந்தனர்.

# ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி வாக்குப்பதிவு இயந்திரங்களில் வேட்பாளர் சின்னம் பொருத்தும் பணி தீவிரம்

ஸ்ரீவில்லிபுத்தூர், ஏப்.18– சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு, ஸ்ரீவில்லிபுத்தூர் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட வாக்குப்பதிவு இயந்திரங்களில் வேட்பாளர்களின் பெயர், புகைப்படம் மற்றும் சின்னங்கள் பொருத்தும் பணி இன்று நடைபெற்றது. ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதியில் 1,08,109 ஆண்கள், 1,14,218 பெண்கள் மற்றும் 40 இதர பிரிவினர் என மொத்தம் 2,22,367 வாக்காளர்கள் உள்ளனர்.

இத்தொகுதியில் ஏற்கனவே 283 வாக்குச்சாவடிகள் இருந்த நிலையில், 1,200 வாக்காளர்களுக்கு மேல் உள்ள வாக்குச்சாவடிகள் பிரிக்கப்பட்டுப் புதிதாக 25 வாக்குச்சாவடிகள் உருவாக்கப்பட்டன. இதன் மூலம் தற்போது ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதியில் மொத்தம் 308 வாக்குச்சாவடி மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்தப் பணிகளுக்காக 369 வாக்குப்பதிவுக் கருவிகள், 369 கட்டுப்பாட்டுக் கருவிகள் மற்றும் 400 விவிபேட் (VVPAT) இயந்திரங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

தேர்தல் நடத்தும் அலுவலர் ரமேஷ் தலைமையில், வட்டாட்சியர் பாலமுருகன் முன்னிலையில் சின்னம் பொருத்தும் பணிகள் நடைபெற்றன. இத்தொகுதியில் போட்டியிடும் 14 வேட்பாளர்களின் பெயர்கள், அவர்களின் புகைப்படங்கள் மற்றும் ஒதுக்கப்பட்ட சின்னங்கள் அந்தந்த இயந்திரங்களில் முறையாகப் பொருத்தப்பட்டு, இயந்திரங்களின் செயல்பாடுகள் சரிபார்க்கப்பட்டன.

அனைத்துப் பணிகளும் நிறைவடைந்ததைத் தொடர்ந்து, வாக்குப்பதிவு இயந்திரங்கள் அனைத்தும் வாக்குச்சாவடி வாரியாக வரிசை எண்கள் இடப்பட்டு பாதுகாப்பாக அடுக்கி வைக்கப்பட்டன.




**This may be published in Newspapers and TV from the day following the last date for withdrawal of candidature and upto two days before the date of poll.**

**Format C-1**

*(For candidate to publish in Newspapers, TV)*

**Declaration about criminal cases**

*( As per the judgment dated 25 September, 2018, of Hon'ble Supreme Court in WP (Civil) No. 536 of 2011 ( Public Interest Foundation & Ors. Vs. Union of India & Anr.)*

Name and address of Candidate: **R.MANOHARAN**
NO3, Thirunagar, Thiruvanaikovil,
Tiruchirapalli-620005

Name of Political Party: **AIADMK**
(Independent candidates should write "Independent" here)

Name of Election: **Tamilnadu Legislative Assembly, 2026.**

Name of Constituency: **139-SRIRANGAM.**

I **R.MANOHARAN**, a candidate for the abovementioned election, declares for public information the following details about my criminal antecedents:

**(A) Pending Criminal Cases**

| Sl. No | Name of Court | Case No. and dated | Status of Case(s) | Section(s)of Acts concerned and brief of Offence(s) |
|---|---|---|---|---|
| 1. | | Kollidam PS Trichy(Dt) Crime No 278/2024 Dt : 30-12-2024 | F.I.R Pending | U/s 189(2) & 127(2) of BNS Act 2023. Agitation against Government. |

**(B) Details about cases of Conviction for Criminal Offences**

| Sl.no. | Name of Court & date(s) of order(s) | Description of offence(s) & punishment imposed | Maximum Imposed Punishment |
|---|---|---|---|
| Nill | Nill | Nill | Nill |

Candidate

*In the case of election to Council of States or election to Legislative Council by MLAs, mention the election concerned in place of name of constituency.



**FORMAT C-1**

(for candidate to publish in Newspapers, TV)

**DECLARATION ABOUT CRIMINAL CASES**

*(As per the judgment dated 25th September, 2018, of Hon'ble Supreme Court in WP(Civil No.536 of 2011 (Public Interest Foundation & Ors. Vs. Union of India & Anr.)*

Name and Address of Candidate : **Mrs. LEEMA ROSE MARTIN, W/o. S.MARTIN**,
No.135/1, THIRUVALLUVAR STREET, VELLAKINAR PIRIVU,
G.N.MILLS POST, COIMBATORE - 641 029.

Name of Political Party : **All India Anna Dravida Munnetra Kazhagam (AIADMK)**
(Independent candidates should write "Independent" here)

Name of Election : **TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY ELECTION-2026**

*Name of Constituency : **143-LALGUDI**

I, **Mrs. LEEMA ROSE MARTIN** (name of candidate), a candidate for the above mentioned election, declare for public information the following details about my criminal antecedents:

**(A) Pending criminal cases**

| Sl. No. | Name of Court | Case No. and Dated | Status of Case(s) | Section(s) of Acts concerned and brief description of offence(s) |
|---|---|---|---|---|
| 1. | A Criminal Complaint i.e SC No. 533/2018 is filed by Enforcement the directorate in which Mrs. LEEMA ROSE MARTIN is arrayed as Accused No. 14. | SC No. 533/2018. The case is pending before Special Court for the Trial of PMLA Cases / Special Court (SPE/CBI)-I/ NIA Ernakulam | Yet to be taken on file | U/sec 3, 4 R/w Sec 70, 8(5) of the PMLA, 2002 The allegation is that Mrs. Leemarose, as Director of the concerned companies, signed balance sheets showing tainted funds as unsecured loans and thereby facilitated the use of alleged proceeds of crime for acquiring properties |
| 2 | SCN No. T-4/05/JD/KCZ0/2017. | SCN No.T-4/05/JD/KCZ0/2017, The Joint Director of Enforcement, Adjudicating Authority, Chennai | Not taken on file | u/s 4, 6(2)(b), 6(3)(h) of FEMA 1999 and Regulation No. 3&4 of Foreign Exchange Management (Acquisition & Transfer of Immovable Property Outside India) Regulations, 2000 By drawing foreign exchange and remitting outside India by mis-reporting and mis-declaring the sources of funds in the statutory documents filed for availing LRS, during the year 2007-08, 2008-09 and 2009-2010. |
| 3 | CR No. 304/2012 dated: 12.03.2012 registered at S-8 Adambakkam Police Station, Chennai | Nil | Not taken on file | u/s 294(A), 420, 120(B), 467, 468 and 471 of IPC 1860 The amount seized by the police along with revenue official from the accused No.1 who has later on given statement that the seized amount belongs to accused No.2 Mr. Martin & Ms. Leemarose (Wife of Mr. Martin). Based on the statement Ms. Leemarose who is added as the accused No.4 on 25-03-2013. |
| 4 | ECIR No.02/2012 in Enforcement Department, Chennai | C.CNo. 21/2016 in ECIR/CEZO/02/ 2012/APS in Principal Sessions Court, Chennai | Under Investi- gation | u/s 3,4,8(5) PMLA Act Based the on above mentioned FIR No. 304 of 2012, the Enforcement Directorate registered a case on 19.03.2012 under Prevention of Money Laundering Act, 2002. |

**(B) Details about cases of Conviction for Criminal Offences**

| Sl. No. | Name of Court & Date(s) of order(s) | Description of offence(s) & Punishment imposed | Maximum Punishment Imposed |
|---|---|---|---|
| 1 | Nil | Nil | Nil |

* In the case of election to Council of States or Election to Legislative Council by MLAs, mention the election concerned in place of name of constituency



**FORMAT C-1**

(for candidate to publish in Newspapers, TV)

**DECLARATION ABOUT CRIMINAL CASES**

*(As per the judgment dated 25th September, 2018, of Hon'ble Supreme Court in WP(Civil No.536 of 2011 (Public Interest Foundation & Ors. Vs. Union of India & Anr.)*

Name and Address of Candidate : **P.KUMAR, S/o. PALANIVEL,**
No.289, 9th CROSS, 3rd SECTOR, MORAIS CITY,
TIRUCHIRAPPALLI-07

Name of Political Party : **All India Anna Dravida Munnetra Kazhagam (AIADMK)**
(Independent candidates should write "Independent" here)

Name of Election : **TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY ELECTION-2026**

*Name of Constituency : **142-THIRUVERUMBUR**

I, **P.KUMAR** (name of candidate), a candidate for the above mentioned election, declare for public information the following details about my criminal antecedents:

**(A) Pending criminal cases**

| Sl. No. | Name of Court | Case No. and Dated | Status of Case(s) | Section(s) of Acts concerned and brief description of offence(s) |
|---|---|---|---|---|
| 1. | Cantonment P.S. in Tiruchi City Police within the jurisdiction of the Hon'ble Judicial Magistrate No:II. Tiruchirappalli. | FIR No: 472/2022 Dt: 05-04-2022 | Investigation Pending in Police level. | U/Sec. 143, 283, 188, 151 of I.P.C. Without proper permission assembled and protest against the then Ruling DMK Government. |
| 2 | Lalgudi P.S. in Tiruchi District within the Jurisdiction of Judicial Magistrate, Lalgudi. | FIR No: 388/2022 | Not taken on file | U/Sec. 143, 188, 341 of I.P.C. Without proper permission assembled and protest against the then Ruling DMK Government. |

**(B) Details about cases of Conviction for Criminal Offences**

| Sl. No. | Name of Court & Date(s) of order(s) | Description of offence(s) & Punishment imposed | Maximum Punishment Imposed |
|---|---|---|---|
| 1 | Nil | Nil | Nil |

* In the case of election to Council of States or Election to Legislative Council by MLAs, mention the election concerned in place of name of constituency





# துரோகத்தின் முழு உருவம் எடப்பாடி பழனி சாமி; பாஜகவின் சூழ்ச்சியை முறியடிக்கத் திமுக கூட்டணிக்கு வாக்களியுங்கள்: ஆண்டிபட்டியில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தீவிர பிரச்சாரம்

தேனி, ஏப். 18–

தேனி மாவட்டத்தில் உள்ள போடிநாயக்கனூர், கம்பம், ஆண்டிபட்டி மற்றும் பெரியகுளம் ஆகிய நான்கு சட்டமன்றத் தொகுதிகளின் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆண்டிபட்டியில் தீவிர தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டார்.

ஆண்டிபட்டி தொகுதி வேட்பாளர் மகாராஜன், போடிநாயக்கனூர் வேட்பாளர் ஓ.பன்னீர்செல்வம், கம்பம் வேட்பாளர் ராமகிருஷ்ணன் ஆகியோருக்கு 'உதயசூரியன்' சின்னத்திலும், பெரியகுளம் (தனி) தொகுதி விடுதலைச் சிறுத்தைகள் கட்சி வேட்பாளர் சக்திவேலுக்கு 'பானை' சின்னத்திலும் வாக்கு சேகரித்து முதலமைச்சர் பேசியதாவது:–

"தமிழ், தமிழினம், தமிழ்நாடு என்ற சொற்களைக் கேட்டாலே சிலருக்குக் கோபம் வருகிறது. நமது குரல் நாடாளுமன்றத்தில் ஒலிக்கக் கூடாது என்று சதி செய்கிறார்கள். குறிப்பிட்ட மாநிலங்களில் மதவெறியை வளர்த்து, அதன் மூலமாக நாட்டை ஆள்வதற்குப் பாசிச பாஜக செய்துள்ள சூழ்ச்சிதான் தொகுதி மறுவரையறை. இதன் மூலம் தமிழ்நாட்டிற்கு கிடைக்க வேண்டிய தொகுதிகளின் எண்ணிக்கையைக் குறைக்கப் பார்க்கிறார்கள்.

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று நான் கருப்புக் கொடி ஏற்றினேன். தமிழ்நாடு முழுவதும் மக்கள் தங்கள் வீடுகளிலும் பொது இடங்களிலும் கருப்புக் கொடி கட்டித் தங்கள் எதிர்ப்பைப் பதிவு செய்திருக்கிறார்கள். முதலமைச்சர் என்ற முறையில் எனது எதிர்ப்பு என்பது ஒட்டுமொத்த தமிழ் மக்களின் எதிர்ப்பு.

துரோகத்தின் உருவம் எடப்பாடி:

நாடாளுமன்றத்தில் இது குறித்து டி.ஆர்.பாலு பேசியபோது, 'நீங்கள் கருப்புக் கொடி ஏற்றினால் என்ன, நீலக் கொடி ஏற்றினால் என்ன?' என்று சபாநாயகர் ஓம்பிர்லா ஆணவமாகப் பேசியுள்ளார். அவர் தனிப்பட்ட ஸ்டாலின் குரலை அவமதிக்கவில்லை, தமிழ்நாட்டின் குரலையே ஏளனப்படுத்தியுள்ளார். அதற்கான சரியான பதிலடியைத் தங்கை கனிமொழி நாடாளுமன்றத்தில் தந்துள்ளார். தமிழர்களை அவமதிப்பதையே நோக்கமாகக் கொண்டு பேசும் ஓம்பிர்லா அவர்களுக்குத் தெளிவாகச் சொல்கிறேன், இந்த மண்ணில் சமத்துவம், சமூக நீதி, பொதுவுடைமை பேசும் நமது கருப்பு சிவப்பு நிறக் கொடிதான் பறக்கும்.

திமுக இருக்கும் வரை இந்த நாட்டில் காவிக்கொடி பறக்க ஒருபோதும் விடமாட்டோம். தன்மானமுள்ள தமிழர்களும் அதை அனுமதிக்க மாட்டார்கள். நாடாளுமன்றத்தில் நமது உரிமைகளைப் பறிக்கப் பார்க்கும் இந்த அநீதிக்கு முடிவுகட்ட வேண்டும். அதற்குத் தமிழகத்தில் வலிமையான திமுக அரசு அமைய வேண்டும். பாஜக என்ற சர்வாதிகாரப் பருந்து விரட்டியடிக்கப்பட வேண்டும்.

பாஜகவிற்குத் துணையாகப் போன துரோகத்தின் முழு உருவமான எடப்பாடி பழனிசாமியின் அடிமை அதிமுகவையும் வீழ்த்த வேண்டும். மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி வேட்பாளர்களை அமோக வெற்றி பெறச் செய்வீர்கள் என்று நான் நம்புகிறேன்." இவ்வாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பேசினார்.

இந்தச் சூறாவளி பிரச்சாரத்தின் போது அமைச்சர் ஐ.பெரியசாமி, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரவீந்திரநாத், மாவட்டக் கழகச் செயலாளர், ஒன்றிய, பேரூர் மற்றும் கிளைக் கழக நிர்வாகிகள், கூட்டணிக் கட்சித் தலைவர்கள் மற்றும் தொண்டர்கள் எனப் பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.





# விஜய் ஒரு அரசியல் கோமாளி: செல்லூர் ராஜூவை ஆதரித்து பழ.கருப்பையா அனல் பறக்கும் பிரச்சாரம்

மதுரை, ஏப். 18–

மதுரை மேற்கு சட்டமன்றத் தொகுதியில் போட்டியிடும் அஇஅதிமுக வேட்பாளர் செல்லூர் ராஜூவை ஆதரித்து, அக்கட்சியின் நட்சத்திரப் பேச்சாளரும் மூத்த அரசியல் தலைவருமான பழ.கருப்பையா நேற்று தீவிர வாக்குச் சேகரிப்பில் ஈடுபட்டார். ஊர்மச்சிகுளம், பரவை, விளாங்குடி மற்றும் புது விளாங்குடி ஆகிய பகுதிகளில் திறந்தவெளி வாகனத்தில் சென்று அவர் இரட்டை இலை சின்னத்திற்கு ஆதரவு திரட்டினார்.

பிரச்சாரத்தின் போது தமிழக வெற்றிக் கழகத் தலைவர் விஜய் குறித்துப் பேசிய பழ.கருப்பையா, "விஜய் ஒரு அரசியல் கோமாளி, அவருக்கு அரசியல் குறித்து எதுவும் தெரியாது. செய்தித்தாள் படிக்கிற பழக்கம் கூட அவருக்குக் கிடையாது. நடிகராக இருப்பதால் கூட்டம் கூடுகிறது என்பதைத் தவிர அவரிடம் நாட்டை முன்னேற்றுவதற்கான அரசியல் தரமோ, திறமோ இல்லை. அவர் கட்சி சார்பில் போட்டியிடும் வேட்பாளர்கள் அனைவரும் காசை வாங்கிக்கொண்டு வேலை பார்க்காமல் இருக்கிறார்கள். விஜய்யின் அரசியல் கனவு பலிக்காது" என்று கடுமையாக விமர்சித்தார்.

உள் இடஒதுக்கீடு வழங்கியவர்:

தொடர்ந்து பேசிய அவர், அதிமுக ஆட்சியில் எடப்பாடி பழனிசாமி முதலமைச்சராக இருந்தபோது செய்த சாதனைகளை விளக்கினார். "ஏழை எளிய வீட்டுப் பிள்ளைகள் மருத்துவராக வேண்டும் என்ற கனவை நனவாக்கியவர் எடப்பாடியார். நீட் தேர்வை எதிர்த்து திமுக வெறும் தீர்மானத்தை மட்டுமே போட்டது. ஆனால், எடப்பாடியார் அரசுப் பள்ளி மாணவர்களுக்கு 7.5 சதவீத உள் இடஒதுக்கீடு வழங்கி, இன்று ஆயிரக்கணக்கான ஏழை மாணவர்கள் மருத்துவர்களாகக் காரணமாக இருந்துள்ளார். விவசாயிகளின் வாழ்வாதாரத்தை உயர்த்தக் குடிமராமத்து பணிகளைச் சிறப்பாகச் செய்தவர் அவர்" என்று புகழாரம் சூட்டினார்.

முன்னதாகப் பேசிய வேட்பாளர் செல்லூர் ராஜூ, தமிழ்நாட்டில் தற்போது சட்ட ஒழுங்கு முற்றிலும் சீர்குலைந்துள்ளதாகவும், பச்சிளம் குழந்தைகள் முதல் முதியவர்கள் வரை யாருக்குமே பாதுகாப்பு இல்லாத நிலை நிலவுவதாகவும் சாடினார். அமைதிப் பூங்காவாக இருந்த தமிழ்நாடு இன்று திமுக ஆட்சியில் சீரழிந்துள்ளதை மக்கள் உணர்ந்துள்ளனர் என்றார். திமுகவின் அகம்பாவத்தை அடக்க மக்கள் முடிவு செய்துவிட்டார்கள் என்றும், மீண்டும் இரட்டை இலைக்கு வாக்களித்துத் தன்னை வெற்றி பெறச் செய்ய வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

இந்த பிரச்சாரத்தின் போது அதிமுக நிர்வாகிகள் எம்.எஸ்.பாண்டியன், பரவை ராஜா, வி.பி.ஆர்.செல்வகுமார் மற்றும் கூட்டணிக் கட்சி நிர்வாகிகள், தொண்டர்கள் எனப் ஏராளமானோர் பங்கேற்று உற்சாக வரவேற்பு அளித்தனர்.



# மதுரையில் "ஸ்டார் குரு" பவுண்டேஷன் சார்பில் 100% வாக்களிப்பை வலியுறுத்தி மனித சங்கிலி

மதுரை, ஏப். 18–

மதுரையில் "ஸ்டார்குரு" பவுண்டேஷன் மற்றும் மாற்றுத்திறனாளிகள் முன்னேற்ற கழகம் இணைந்து, 100 சதவிகித வாக்களிப்பை வலியுறுத்தி தேர்தல் விழிப்புணர்வு மனித சங்கிலி பேரணியை நடத்தினர்.

இந்தப் பேரணிக்கு "ஸ்டார்குரு" பவுண்டேஷன் சாரிட்டபிள் டிரஸ்ட் நிறுவனர் 'சமூக சேவகர்' குருசாமி தலைமை தாங்கினார். நிகழ்ச்சியில் பேசிய ஸ்டார் குரு பவுண்டேஷன் நிறுவனர் குருசாமி, தேர்தலில் வாக்களிப்பது நம் ஒவ்வொருவரின் ஜனநாயக கடமை. நாம் அனைவரும் வாக்களித்து 100% வாக்களிப்பு செய்தால்தான் நல்ல ஜனநாயகம் மலரும். முதல் முறையாக வாக்களிக்கும் வாக்காளர்கள் கண்டிப்பாக ஜனநாயக கடமை ஆற்ற வேண்டும். ஜனநாயகம் காப்போம் என்ற இந்த விழிப்புணர்வு பேரணியில் மாற்றுத்திறனாளிகள் கலந்து கொண்டது மகிழ்ச்சி அளிக்கிறது என்று கூறினார்.

பேரணி முடிவில் கலந்து கொண்ட அனைவரும் 100% வாக்களிப்பை வலியுறுத்தி உறுதிமொழி ஏற்றனர். இந்தப் பேரணியில் 1000 மேற்பட்ட மாற்றுத்திறனாளிகள் பொதுமக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். மதுரையில் 100% வாக்களிப்பை வலியுறுத்தி "ஸ்டார்குரு" பவுண்டேஷன் நிறுவனர் குருசாமி, தொடர் முயற்சியால் கடந்த 2 வார காலமாக பல தேர்தல் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தி பொதுமக்களின் பாராட்டுதலை பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.



# துறையூரில் முதியோர்களின் காலில் விழுந்து ஆசி பெற்று அதிமுக வேட்பாளர் சரோஜா இளங்கோவன் வாக்குச் சேகரிப்பு

துறையூர், ஏப். 18–

திருச்சி மாவட்டம் துறையூர் சட்டமன்றத் தொகுதியின் அஇஅதிமுக வேட்பாளர் சரோஜா இளங்கோவன், துறையூர் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட 30க்கும் மேற்பட்ட கிராமங்களில் வீடு வீடாகச் சென்று இரட்டை இலை சின்னத்திற்குத் தீவிரமாக ஆதரவு திரட்டினார்.

கண்ணனூர், கண்ணனூர்பாளையம், பொன்னுசங் கம்பட்டி, கோவிந்தாபுரம், சிக்கத்தம்பூர், பாளையம், ஒட்டம்பட்டி, புதூர் உள்ளிட்ட பல்வேறு கிராமங்களில் அவர் பிரச்சாரம் மேற்கொண்டார். சிக்கத்தம்பூர் கிராமத்திற்கு வேட்பாளர் வந்தபோது, திரளான பொதுமக்கள் அவருக்கு மாலை அணிவித்தும், ஆராத்தி எடுத்தும் உற்சாக வரவேற்பு அளித்தனர். அப்போது முதியோர்களைச் சந்தித்த சரோஜா இளங்கோவன், அவர்களின் காலில் விழுந்து ஆசி பெற்றுத் தனக்கு வாக்களிக்குமாறு கேட்டுக்கொண்டார். தொடர்ந்து சித்திரைப்பட்டியில் உள்ள மசூதிக்குச் சென்று இஸ்லாமியப் பெருமக்களிடமும் அவர் ஆதரவு கோரினார்.

3 சிலிண்டர்கள் இலவசம்:

பிரச்சாரத்தின் போது மக்களிடையே பேசிய அவர், எடப்பாடியார் தலைமையில் அதிமுக மீண்டும் ஆட்சிக்கு வந்தவுடன் 100 நாள் வேலைத் திட்டம் 150 நாட்களாக உயர்த்தப்படும் என்றும், அதற்கான ஊதியம் நேரடியாகத் தொழிலாளர்களின் வங்கி கணக்கில் செலுத்தப்படும் என்றும் உறுதி அளித்தார். மேலும், ஒவ்வொரு குடும்பத்திற்கும் தலா 10,000 ரூபாய், விலையில்லா குளிர்சாதனப் பெட்டி, ஆண்டுக்கு மூன்று சிலிண்டர்கள் இலவசம் மற்றும் குடும்ப அட்டைதாரர்களுக்கு மாதம் 2,000 ரூபாய் உரிமைத் தொகை வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

தாலிக்குத் தங்கம் திட்டம் மீண்டும் கொண்டு வரப்படும், மணமக்களுக்குப் பட்டுச்சேலை மற்றும் வேஷ்டி வழங்கப்படும், நகரப் பேருந்துகளில் தம்பதியர் இருவரும் கட்டணமின்றிப் பயணிக்கலாம், ஆட்டோ தொழிலாளர்களுக்குப் புதிய ஆட்டோ வாங்க மானியம் வழங்கப்படும் என அதிமுகவின் தேர்தல் வாக்குறுதிகளை அவர் விளக்கிக் கூறினார். மக்கள் அனைவரும் சிந்தித்துச் செயல்பட்டு, இரட்டை இலை சின்னத்திற்கு வாக்களித்துத் தன்னைப் பெருவாரியான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்ய வேண்டும் என்று கூறி துண்டுப் பிரசுரங்களை விநியோகித்தார்.

இந்த வாக்குச் சேகரிப்பின் போது துறையூர் வடக்கு ஒன்றியச் செயலாளர் பொன் காமராஜ், மாவட்டப் பிரதிநிதி ஒட்டம்பட்டி தங்கவேல், ஒன்றியப் பொருளாளர் கலைவாணன், சங்கம்பட்டி கிளைச் செயலாளர் தனக்குமார், காளிப்பட்டி சகாதேவன், எம்ஜிஆர் இளைஞர் அணி நகரச் செயலாளர் விவேக் உள்ளிட்ட அதிமுக நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் ஏராளமானோர் கலந்து கொண்டு இரட்டை இலைக்கு ஆதரவு திரட்டினர்.



தேனி மாவட்டம் சின்னமனூர் நகரில் உள்ள கம்பம் ரோடு, சிப்பாலக்கோட்டை ரோடு, கண்ணாடி கடை மூக்கு மார்க்கையன் கோட்டை ரோடு ஆகிய பகுதிகளில் தமிழக வெற்றி கழக வேட்பாளர் பி.எல்ஏ. ஜெகநாத் மிஸ்ரா, தெரு வாரியாக, வீடு வீடாக சென்று, பொதுமக்களை சந்தித்து சட்டமன்ற பொதுத் தேர்தலில் தமிழக வெற்றி கழக வேட்பாளராகிய எனக்கு விசில் சின்னத்தில் வாக்களித்து என்னை பெருவாரியான வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற செய்ய வேண்டும் என்று தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார். இந்நிகழ்வில், தமிழக வெற்றி கழக நிர்வாகிகள் பல உடன் இருந்தனர்.




# வடமாநிலத்தில் உயர்படிப்பிற்குச் செல்லும் மாணவர்களின் எண்ணிக்கை குறைகிறது: சென்னை ஐ.ஐ.டி இயக்குனர் காமகோடி உரை

மதுரை, ஏப். 18–

மதுரை ஆசிரியர் மன்றம் சார்பில் "அறிவு தேசத்தை கட்டமைக்க, வகுப்பறையிலிருந்து தொகுதிக்கு" என்ற தலைப்பில் சிறப்பு கருத்தரங்கு நடைபெற்றது. இதில் சென்னை ஐ.ஐ.டி இயக்குனர் காமகோடி உள்ளிட்ட முக்கியப் பிரமுகர்கள் கலந்துகொண்டு உரையாற்றினர்.

இணைய வழியாக இந்த நிகழ்ச்சியில் பங்கேற்றுச் சிறப்புரை ஆற்றிய சென்னை ஐ.ஐ.டி இயக்குனர் காமகோடி, தமிழ்நாட்டில் பிளஸ் டூ முடித்த பிறகு உயர்கல்விக்குச் செல்லும் மாணவர்களின் எண்ணிக்கை 50 சதவீதமாகவும், தேசிய அளவில் இது வெறும் 29 சதவீதமாகவும் இருப்பதைச் சுட்டிக்காட்டினார். இந்த நிலை மிகவும் கவலைக்குரியது என்று குறிப்பிட்ட அவர், ஆசிரியர்கள் மட்டுமே மாணவர்களைச் சரியான முறையில் நல்வழிப்படுத்தி கல்வியின் உன்னதத்தை அவர்களுக்கு எடுத்துரைக்க முடியும் என்று வலியுறுத்தினார்.

கருத்தரங்கின் இறுதியில் பேசிய மூத்த வழக்கறிஞர் கே.டி. ராகவன், தமிழ்நாட்டில் சுமார் 1,200 பள்ளிகளில் மாணவர் சேர்க்கையே இல்லை என்ற அதிர்ச்சிகரமான தகவலைப் பகிர்ந்து கொண்டார்.

இந்தக் கருத்தரங்கில் பேராசிரியர் ராம. சீனிவாசன் கலந்துகொண்டு கருத்துரைகளை வழங்கினார். இதில் மதுரையைச் சேர்ந்த 200க்கும் மேற்பட்ட ஆசிரியப் பெருமக்கள் பங்கேற்றுப் பயனடைந்தனர். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளைத் திறம்படச் செய்திருந்த ஒருங்கிணைப்பாளர் டாக்டர் ஷர்மிளா ராம்ஆனந்த், கலந்துகொண்ட அனைவருக்கும் நன்றி தெரிவித்தார்.

Edited and Published by R.Muthukumar at B.S.2, Sidco Industrial Estate, K.Pudur, Madurai - 625 007 and Printed by S.Deenadayalan at "Newsmen Associates Private Ltd " Press at Door No.B.S.2, Sidco Industrial Estate, K.Pudur, Madurai - 625 007 on behalf of Newsmen Associates Private Limited. RNI No. 24383/1973. நிர்வாகம், விளம்பரம்: 0452 2567811, இமெயில்: makkalkural.madurai@gmail.com, நிறுவன ஆசிரியர்: எம். சண்முகவேல். Subject to Madras Court Jurisdiction.